திருக்கோயில்

“என் கடன் பணி செய்து கிடப்பதே

OFFICE OF THE STATE EDITOR
12/வ/72
7 - FEB 1972
7/2/72
GAZETTEER UNIT, MADRAS-8
168



திரு. தில்லைச் சிவகாமியம்மை, சிதம்பரம்.

மாலை 14 | விரோதிகிருது - தை - பிப்ரவரி 1972 | மணி 5

தமிழ் நாடு அரசின் அறநிலைய

சென்னை திரு. கமலவிநாயகர் கோயிலில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பர் அவர்கள் வரவேற்கப் பெறுதல். (21—1—72)

பொருளடக்கம்

(1) பத்தி நெறியும் பாவைப் பாடலும்
(2) தமிழர் திருநாள்
(3) நால்வர் தமிழ்
(4) உள்ளொளி
(5) சித்த மருத்துவக் கலையின் சிறப்பு
(6) உயிரின் இயல்பு
(7) சம்பந்தர் வாய்மொழியில் தத்துவம்
(8) " திருப்பாவையில் திருக்குறள் "
(9) கவியோகி
(10) குமரகுருபர சுவாமிகளும், தில்லைச் சிவகாமி அம்மையும்
(11) மதிப்புரைகள்
(12) திருமால் வணக்கம்
(13) அப்பர் வரலாற்றில் அறம்
(14) அன்னம் பாலிப்புகள்
(15) சென்னைப் பட்டணத்துச் சட்டம்
(16) சிவ வணக்கம்
(17) அம்பிகை வணக்கம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை- 34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள்

—ஆசிரியர்



மாலை 15] விரோதிகிருது — தை — பிப்ரவரி, 1972 [மணி 5

பக்தி நெறியும், பாவைப் பாடலும்

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை :

மாணிக்கவாசகர், தாம் முத்தி நெறி அறியாத மூடர்களுடன் முயல்பவராக இருந்தனர் என்றும், அந்நிலையில் சிவபெருமான் தமக்குப் பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம், சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி அருள் புரிந்தனர் என்றும், தமது திருவாசகத்தில் அச்சோப் பதிகத்தின் முதற் பாடலில் குறிப்பிடுகின்றார். அதனால் அவருக்குச் சிவபெருமான் பக்திநெறியினை அறிவித்தருளினார் என்பது புலனாகின்றது.

மணிவாசகர் :

சிவபெருமானால் தமக்கு அறிவுறுத்தப் பெற்ற பக்தி நெறியினை, மாணிக்கவாசகப்

---

*தருமையாதீனத்துத் தலைவர் திருவார் திரு. சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின்படி, சீர்காழிச் சட்டைநாத சுவாமி கோயிலிலும், திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலிலும், நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சுருக்கம் (6—1—72).

—ஆசிரியர்.

Q 2m 21,N59T12 N71·14·5

பெருமான், தாம் அருளிச்செய்த திருவாசகம்-திருக்கோவையார் என்னும் இரு நூல்களாலும், உலகில் பயிராக்கிப் பரவச் செய்து வளர்த்தருளினர்.

இவ்வுண்மையினைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சிறந்த பெருங் கவிஞராகிய கச்சியப்ப முனிவர், தமது பாடல் ஒன்றில், அழகுற உருவகம் செய்து உணர்த்தியருளுகின்றார். "உள்ளமாகிய வயலை, பக்தி என்னும் ஏர் கொண்டு உழுது, ஞானம் என்னும் விதையினை விதைத்து, சிரத்தை என்னும் நீரைப் பாய்ச்சி, கள்ள ஐம்பொறிக் குறும்புகளாகிய களைகளை நீக்கி, ஆனந்தம் என்னும் நெற்கதிரை விளைவித்து, அதனை உலகமெலாம் பெற்று உய்யும்படி வலிந்தழைத்து வழங்குகின்ற மாணிக்க வாசகரின் திருவடிகளை நினைத்து வழிபடுவோம்" என்று, அவர் கவின்பெறப் பாடுகின்றார்.

உள்ளம் ஆகிய புலத்தினைப்
பக்திஏர் உழுது,
தெள்ளும் ஞானவித் துறுத்து,நற்
சிரத்தைநீர் பாய்ச்சிக்,
கள்ள வான்பொறிக் களைகள்கட்டு,
ஆனந்தம் விளைத்துக்,
கொள்ளை கூறும் மாணிக்க
வாசகன் கழல்குறிப்பாம்."

148694.
600 008.

சிவபெருமான் :

இவ்வினிய சிறந்த கவிதையினால், பக்தி நெறியாகிய பயிர் மாணிக்கவாசகரால், இவ்வுலகில் வளர்க்கப்பெற்றது என்னும் உண்மை தெற்றெனப் புலனாதல் காணலாம். உலகில் பக்தி நெறிப் பயிர் பரவி வளரும்படி செய்தருளிய மாணிக்கவாசகர், அத்தகைய பக்திநெறிப் பயிரினைத் தம் உள்ளத்தில் வளர்த்தருளியவன் சிவபெருமானே என்பதனை,

'நீக்கி முன்எனைத் தன்னொடு
நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து,
நோக்கி நுண்ணிய நொடியன
சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்
துகள்அறுத்து எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயம் கண்டாமே''

எனவரும் பாடலில் குறிப்பிடுகின்றார். "சிவபெருமான் தன்னிடமிருந்து என்னை நீக்கினான். என்னை ஓர் உடலில் புகுவித்து, இவ்வுலகிற்கு அனுப்பிவைத்தான். இவ்வுலகில் யான் மயங்கி உழன்றுகொண்டிருந்தபோது, குருவாக வந்து என்னை ஆட்கொண்டு திருவருள் நோக்கம் புரிந்தருளினான்; நுண்ணியனவும் நொடிபோல் வனவுமாகிய அருளுரைகளைக் கூறித் தெளிவித்தான்; என்னுடைய உள்ளமாகிய வயலில், நுகம் (ஏர்க்கருவி) இல்லாமலே, உழவுத் தொழிலைச் செய்து பண்படுத்தினான். பொய்ம்மையாகிய களைகளை நீக்கிக் குற்றங்களைப் போக்கினான். பேரொளி மிகுந்த சிவஞானம் ஆகிய சிறந்த பயிரை விளைவித்தருளினான்" என்பது மேற் குறித்த பாடலின் கருத்து.

பக்திநெறியும், மாணிக்கவாசகரும் :

இங்ஙனம் சிவபெருமான், தம் உள்ளத்தில் "நுகம் இன்றி விளாக் கைத்து" விதைத்து, விளைத்தருளிய பக்திநெறியினை வளர்த்துப் பரப்பியருளிய திறனில், மாணிக்கவாசகர் தலைசிறந்து திகழ்கின்றார். அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய சான்றோர்கள் பிறர்பலரும் கூட, பக்திநெறியினைப் பரப்பி வளர்த்தருளியுள்ளனர் என்பது உண்மையேயாயினும், ஒரு தோட்டத்தில் பலவகை மரஞ் செடி கொடிகள் இரும்பினும், பன்மை அல்லது தலைமை என்னும் காரணம் பற்றி, அதனைக் "கமுகந்தோட்டம்" என விதந்து கூறி வழங்கும் முறையில், பக்திநெறிக்குரிய சான்றோராக, மாணிக்கவாசகரையே பெரியோர்கள் பலரும் புகழ்ந்து போற்றுவர். அதற்குக் காரணம், பக்திநெறியின் பலவகை அனுபவங்களையும் மெய்ப்பாடுகளையும், மாணிக்கவாசகர் மிகப் பெரும் சிறப்பாக விளக்கியருளியிருத்தலே யாகும் எனலாம். தொல்காப்பியர், தாம் இயற்றியருளிய விழுமிய முழுமுதல் இலக்கணப் பழம் பெரும் நூலாகிய தொல்காப்பியத்தின், மெய்ப்பாட்டியல் என்னும் பகுதியின்கண், நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகளையே குறித்துப் போந்தருளினர். திருவள்ளுவர், நக்கீரர் போன்ற தெய்வப் புலமைச் சான்றோர்களும், இறைவனின் அருமை பெருமைகளை விளக்கிப்போந்தனரே யன்றி, அவ்விறைவன்பால் செலுத்தும் அன்பாகிய பக்தி யுணர்வின் அனுபவங்களையும், மெய்ப்பாடுகளையும் விரித்துரைத்துப் போந்திலர்.

பக்தியின் மெய்ப்பாடுகள் :

தமிழ் மொழியானது இயல் இசை நாடகம் என்னும் முத்திறம் அமைந்ததாக முன்னரே விளங்கிற்றாயினும், அம்மூவகைக் கூறும் அழகியதாக அமையச் சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியத்தினை இயற்றியருளிய பெருமை இளங்கோவடிகளுக்கே உரியதாதல் போலவும்; சைவ சித்தாந்தம் என்னும் தனிப் பெரும் தத்துவக் கொள்கை பண்டே தமிழகத்தில் நின்று நிலவி வந்ததாயினும், அதனை ஒருசேரத் திரட்டி உருவாக்கி ஒழுங்குபடுத்திச் "சிவஞான போதம்" என்னும் நூல் வடிவில் கொடுத்தருளிய திறன், ஆசிரியர் மெய்கண்டார் பெருமானுக்கே உரியதாதல் போலவும்; நாடும் நாட்டுப்பற்றும் முன்னரே இருந்து வந்தனவாயினும், நாட்டுப் பற்றுணர்ச்சியை வற்புறுத்தி வளர்க்கும் நாட்டியற் பாடல்களை இயற்றியளித்த பெருமை, பாரதியார்க்கே உரியதாதல் போலவும்; பக்தியுணர்வு அனுபவங்களும் மெய்ப்பாடுகளும் பண்டைச் சான்றோர்கள் பலரால் விளக்கப்பெற்றிருப்பினும், அத்துறையில் தனிப்பெருஞ் சிறப்புப்பெற்றவராகத் திகழ்பவர் மாணிக்கவாசகரேயாவர் எனலாம்.

மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்து,உன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக், கண்ணீர்
ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து, உன்னைப்
போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்; உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே

எனவரும் திருவாசகப் பாடல்கள் பலவும், பக்தியுணர்வின் மெய்ப்பாடுகளையும் அனுபவத் திறன்களையும் வெளியிட்டுணர்த்தி நிற்றல் காணலாம்.

ஞானமும் பக்தியும்:

சைவ சித்தாந்தத்தில் கூறுப்பெறும் சாதன நெறிகள் நான்கு. அவையாவன: சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. சரியை திருஞானசம்பந்தராலும், கிரியை திருநாவுக்கரசராலும், யோகம் சுந்தரராலும், ஞானம் மாணிக்கவாசகராலும், உலக மக்களுக்கு உணர்த்தப்பெற்றன என நூல்கள் நுவலும். இவ்வாற்றால் மாணிக்கவாசகர் ஞானம் என்னும் சாதன நெறியை நன்கு விளக்கியருளிய சான்றோராதல் தெளிவாம். ஞானத்தின் முதிர்ச்சியே பக்தியாகத் தழைக்கின்றது. "ஞானம் கனிந்த நலம்" பக்தி எனப்படும். "ஞானத்தின் பெருவிளைவே பக்தி" (பக்திச்ச ஜ்ஞான விசேஷம்) என்பர் பெரியோர். "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்" என்பது பெரியபுராணம். இறைவன்பால் அன்பு ஆகிய பக்தியில்லாமல்; வெறும் ஞானம் மட்டும் இருந்து பயனில்லை.

"பகவத் சம்பந்தம் இன்றியிலே, ஞான பக்தி
வைராக்கியங்கள் உண்டானாலும், அபாயம்
இறேபலிப்பது!
பௌத்தனுக்கும் ஞானபக்தி வைராக்கியங்கள்
உண்டிறே"

என்பது திருப்பாவை விரிவுரை. "மயர்வற மதி நலம் அருளினன் யவன் அவன்" எனவரும் திருவாய்மொழியில், 'மதிநலம்' என்பதற்கு 'மதியாகிய நலம்' அல்லது 'மதியினது நலம்' எனப் பொருள் கொள்ளாமல், 'மதியும் நலமும்' எனப் பொருள் விரித்து, நலம் என்பது பக்தி என விளக்கியிருத்தல் காணலாம். மதியாகிய ஞானத்தினும், நலமாகிய பக்தியே சிறப்புடையது என்பது கருத்து. ஞானத்தின் திருவுருவமாகிய சம்பந்தர், காளத்திநாதரைக் கும்பிட்ட பயன்காண்பார்போல், அன்பின் திருவுருவமாகிய கண்ணப்பரைக் கண்டு வீழ்ந்து பணிந்தார் எனச் சேக்கிழார் பெருமான் கூறியிருத்தல் உணரற்பாலது.

பக்தியும் பெண்மையும் :

ஞானத்தின் முதிர்ச்சி பக்தியாக விளைதல் போல, பக்தியின் முதிர்ச்சியானது பெண்மையாக மாறுகின்றது என்பது, சான்றோர்கள் கண்டறிந்த உண்மை. ஞானத்தில் சிறந்த நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், ஞானத்தின் முதிர்ச்சியாகிய பக்தி யுணர்வின் மேலீட்டால் பெண்மை நிலை எய்தி, முறையே பராங்குச நாயகி எனவும், பரகாலநாயகி எனவும் பெயர் வழங்கும்படி, தமது பாடல்கள் பலவற்றைப் பாடியிருத்தல் இவ்வுண்மையை வலியுறுத்தும். "ஞானத்தில் தன் பேச்சு; பிரேமத்தில் பெண் பேச்சு" என அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர் தாம் இயற்றியருளிய 'ஆசாரிய இருதயம்' என்னும் நூலில் அருளிச் செய்திருத்தலும் இவ்வுண்மைக்குச் சான்றுபகரும்.

பக்தியின் படிநிலைகள் :

பெண்மையானது பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம் பெண் என்னும் எழுவகைப் பருவங்களை யுடையதாதல்போல, அன்பின் பெருக்கமாகிய பக்தியும், அபிலாஷை-சிந்தனை-அநுஸ்மிருதி-இச்சை-ருசி-பரபக்தி-பரமபக்தி என்னும் ஏழு வகையான படிநிலைகளை உடையதெனச் சமய தத்துவ நூல்கள் கூறும் (1). முதன் முதலில் கண்ட அளவில் உண்டாகும் அன்பு அபிலாஷை. கண்ட ஒருவரை நினைவு கூர்தல் சிந்தனை. அந் நினைவு இடையறுது தொடர்ந்து வளர்ந்து பெருகுதல் அநுஸ்மிருதி. அந்நினைவின் மிகுதி யால் அவரைக் கூடிக் கலந்து மகிழ வேண்டும் என எழும் விருப்பம் இச்சை. அவ்விருப்பம் வேறு எதனுலும் மாற்றி நீக்க இயலாதபடி பெருகி முதிர்ந்து நிற்கும் தன்மை ருசி. அத் தகையவர் ஒருவரைக் கூடுதலே இன்பமாக வும், பிரிதலே துன்பமாகவும் நிகழும் உணர்வு பரபக்தி. அன்பிற்குரியவரைப் பிரிந்த அளவில், அல்லது பிரிய நேரும் என்னும் உணர்வு நிகழ்ந்த அளவில், மூர்ச்சையுற்று மயங்கி உயிர் விடும் பேரன்புநிலை பரமபக்தி. இப்பரமபக்தியே அன்பின் முடிவான நிலை எனப் போற்றப்படும். "பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப் பிரிந்த வெரு நீர்மையேனை விடுதி கண்டாய்" என அருளிச் செய்திருத்தலால், மாணிக்கவாச கர், அனைய சிறந்த அயராப் பேரன்பின் திறனை எய்தியிருந்தமை இனிதுணரப்படும்.

பாவைப் பாடல் :

இத்தகைய பேரன்பின் முதிர்ச்சியிலேயே மாணிக்கவாசகர், நம்மாழ்வாரும், திருமங்கை யாழ்வாரும் போலப் பெண்மை நிலையுற்று, பெண்கள் நோற்கும் பாவை நோன்பு பற்றியும், அவர்கள் தம்முள் மார்கழி மாதத்தில் வைகறைப் போதில் ஒருவரை யொருவர் துயில் எழுப்பி உரையாடிக் கொள்வது பற்றியும், தமக்கு நல்ல கணவன்மார் வாய்க்கவும், உல கம் செழிக்க மழை பொழியவும் வேண்டிக் கொண்டு வழுத்துவது பற்றியும் எல்லாம் பாடியருளினர்.

பெண்மை நிலை :

இதற்கு முன்னெல்லாம் ஞானநிலையில் நின்று, சிவபுராணம்-கீர்த்தித்திருவகவல்-திரு வண்டப்பகுதி-போற்றித்திருவகவல் - திருச்சத கம்-நீத்தல் விண்ணப்பம் என்பனவற்றைத் தம் முடைய பேச்சாகவே பாடிவந்த மாணிக்கவாச கர், அந்த ஞானம் முதிர்ந்து பெருக்கெடுத்த பக்தியாகிய பெண்மை நிலையில் பாடியருளி யதே, திருவெம்பாவை எனலாம். இதற்கு முன் பெல்லாம் 'பொல்லாவினையேன்' 'நலந்தான் இலாத சிறியேன்' 'நாயிலாகிய குலத்தினும் கடையேன்' என்றாற்போல, தம்மை இழித்தும் பழித்தும் தற்சுட்டாகப் பாடிக்கொள்ளும் இயல் பினராகிய மாணிக்கவாசகர், அத்தகைய தற் சுட்டு ஏதும் இல்லாமல், திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியிருத்தல், அவர் தம்மை மறந்தும் இழந்தும், பெண்மைநிலை எய்தியமைக் குரிய சான்று பகரும்.

"கருவிகட்கு இறைமை காட்டுபு நிற்றலில்
புருட நாமம் புனைந்தனம் ஆயினும்,
அத்தநிற் குறிப்பிற் சத்திகள் யாமே;
புருடனைச் சத்தியிற் புணர்த்தனை; அன்னதற்கு
ஒருகாட்டு என்ப புருடோத் தமனே"

—பண்டார மும்மணிக்கோவை

என அருட்பெருஞ் சான்றோர் ஆகிய குமரகுரு பர அடிகளார் பாடியிருத்தல், இவ்வுண்மை யைச் செவ்விதின் வலியுறுத்த வல்லதாகும்.

பெண்மைக்கு அறிகுறி :

பெண்மை எய்தினர்க்குரிய இயல்புகளும், அடையாளங்களும் பல உண்டு. அவற்றில் தலையாயது அடிதொழுதல். இதனையே திரு வள்ளுவரும் "தொழுதொழுவாள்" என்பத னற் குறிப்பிட்டார். "அவன் உறக்கம் புரு ஷோத்தமத்திற்கு அறிகுறியாயினாற்போல, இவர்களும் பெண்களில் தலைசிறந்தவர்கள்

---

1. "St. Augustine, deeply imbued with Alexandrian thought, in his treatise 'De Doctrina Christiana', gives *seven* steps by which the soul comes to God. The first of these is 'the fear of God'. The second is 'the reverent study of the Divine revelation'. The third is 'love of God and of our fellow-men'. The fourth is 'steadfast self-discipline'. The fifth is 'purgatio animae'. The sixth is 'purgatio oculi cordis'; The seventh is that in which 'talis filius adcendit ad sapientiam'... .."

— Rev. G. U. Pope, M.A., D.D.

ஆனமைக்கு அறிகுறி, திருவடிகளைப் பாடுகை'' எனவரும் திருப்பாவை ஆருயிரப்படி விரிவுரை, இங்கு ஓர்ந்து உணரற்பாலது. இவ்வுண்மை பற்றியே மாணிக்கவாசகரும் திருவெம்பாவையின் இறுதியில் ''போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்; போற்றி யருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்; பொற்பாதம், பூங்கழல்கள்; இணையடிகள், புண்டரிகம்; பொன்மலர்கள்'' என்றெல்லாம், விதந்து வியந்து புகழ்ந்து சிவபிரான் திருவடிகளைப் போற்றியருள்வாராயினர்.

சத்தியை வியந்தது :

திருவெம்பாவையின் தத்துவநுண்பொருள் ''சத்தியை வியந்தது'' எனப் பெரியோர்கள் கூறுவர். சத்தியாகிய தாயை முன்னிட்டுக் கொண்டு, சிவமாகிய தந்தையின் அருளைப் பெறுவதே, எளிமையும் இயல்புமர்கும். ஆதல் பற்றியே, உலக நலத்திற்காக மழை பொழியவும், தம் நலத்திற்காக நல்ல கணவர் வாய்க்கவும், சிவபிரான் திருவருளை வழுத்தும் இப் பாவை மகளிர், சத்தியை வியந்து போற்றித் துதிப்பாராயினர்.

''நம்முடைய நல்வினை ஞானம் முதலிய உபாயங்களாலே எம்பெருமானைப் பெற இருக்குமது இளிம்பு; அவற்றை விட்டு எம்பெருமானுடைய கிருபையாலே பெறுகை சதிர்; அந்தக் கிருபைக்கு அடியான பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு பெறுகை மா சதிர்; 'மாசதிர் இது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா' என்றுரிறே ஆழ்வார்'' எனவரும் திருப்பாவை விரிவுரைப் பகுதியும், இங்கு நாம் சிந்தித்து இன்புறற்பாலது.

நாயக நாயகியுணர்வு :

பக்தி நெறியில் தலைப்பட்டுப் பெண்மை நிலை எய்தியதன் பயனாகவே மாணிக்கவாசகர், திருவெம்பாவையை மட்டுமேயன்றி, அடுத்துவரும் திருவம்மானை - திருப்பொற்சுண்ணம் - திருக்கோத்தும்பி-திருத்தெள்ளேணம் - திருச்சாழல் - திருப்பூவல்லி-திருவுந்தியார்-திருத்தோள் நோக்கம்-திருப்பொன்னூசல் - அன்னைப்பத்து - குயிற்பத்து-திருத்தசாங்கம் முதலிய பற்பல திருப்பதிகங்களையும், பெண்மைநலம் தோன்றுமாறே பாடியருள்வாராயினர். பக்திநெறி யுணர்வின் முதிர்ச்சியாகிய பெண்மைநிலையே, திருவாசகத்தின்கண் படிமுறையே வளர்ந்து. ''நாயகநாயகிபாவம்'' என்னும் தலைசிறந்த காதற் பெருநலம் நிறைந்து பொங்கித் ததும்புகின்ற, ''திருச்சிற்றம்பலக் கோவையார்'' என்னும் அருட் பொருள் அமைந்த அகப்பொருள் நூலாக வடிவெடுத்தது எனலாம். (2)

பக்தியுணர்வானது பெண்மைநிலை எய்திக் காதல் நிலையில் நாயகநாயகிபாவம் கொள்ளும் என்பது, சம்பந்தர் ''ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்'' என்றும்; திருநாவுக்கரசர் ''வஞ்சித்து என் வளை கவர்ந்தான் வாரானே ஆயிடினும், பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்'' என்றும், சுந்தரர் ''பறக்கும் எம் கிள்ளைகாள் பாடும் எம்

(2) "The love poetry of the Tamils was the foundation for the *Bakthi* poetry which again is a significant Tamil contribution to world literature"

—Xavier S. Thani Nayagam.

"Sexual embrace, worthily understood can only be compared with music and with *prayer*"

—James Hinton.

"The Indescribable
Here it is done
The *woman soul* leadeth us
upward and on".

—Goethe, Faust.

"Throughout the literatures of the world, the love of man for his Ishta Devata is likened to the love of a woman towards his lover and the bliss of communion is likened to the joy of physical union. The Biblical '*song of songs*', the saying of Jesus Christ likening God to the bridegroom and the souls to virgins waiting for their spouse, the recorded experiences of mediaeval Christian saints like St. *Theresa* and St. *Gertrude* who recounted the caressess bestowed upon them by Christ, the assertion of St. *Catherine* that she 'was betrothed to Christ and was given a ring by him' are all analogous."

—Dr. C. P. Ramaswami Aiyer,
Phases of Religion and Culture, P.39.

பூவைகாள், அறக்கண் என்னத்தகும் அடிகள் ஆரூரரை, மறக்க கில்லாமையும் வளைகள் நில் லாமையும், உறக்கம் இல்லாமையும் உணர்த்த வல்லீர்களே'' என்றும் பாடியிருப்பனவற்ருல் தெளியப்படும். இங்ஙனம் பிறர் பலருங்கூட, ஒரோவழி நாயகநாயகிபாவம் தோன்றப் பாடி யுள்ளனராயினும், இத்தகைய காதலுணர்வு மீக்கூர்ந்த பக்திநெறி விளக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்பவர், மாணிக்கவாச கரே எனத் தெளிந்து துணிந்து கூறலாம்.

தலைவனும் தலைவியும் :

திருவெம்பாவையில் தொடங்கிய ஞானத் தின் முதிர்ச்சியாகிய பக்தியுணர்வு, பெண்மைநிலை அடைந்து, படிப்படியே முறைமுறையே வளர்ந்தோங்கி, திருச்சிற்றம் பலக் கோவையாரில் சென்று சேர்ந்து, முழு நிறைவு பெற்று மிளிர்கின்றது. அம்முழு நிறைவின் திறம், தலைவனைத் திகழும் இறை வன் தலைவியாகவும், தலைவியாக விளங்கிய மாணிக்கவாசகர் தலைவனுகவும் கொள்ளப்படு தற்குரிய நிலையில், மாறி நிற்கும் மாட்சிமை யினுல் உணரப்பெறும். இன்ப நுகர்ச்சி பெறு தலின் உயிரைத் தலைவனுகவும், இன்ப நுகர்ச்சி யைத் தருகின்ற பொருளாகத் திகழ்தலின் சிவத்தினைத் தலைவியாகவும் கொள்ளுதல் கூடும். ''பேரின்பமான பிரமக்கிழத்தியுடன் ஓரின்பத் துள்ளான் என்றுந்தீ பற; ஒரு பொரு ளாலே என்றுந்தீ பற'' என வரும் திருவியலூர் உய்யவந்த தேவர் திருமொழியினுல், இறை வனைத் தலைவியாகக் கூறுதலும் ஒரு மரபேயாம் என்பதனை உணரலாம்.

இங்ஙனம் கொள்ளுதல், சிவபிரானின் தனிப்பெரும் முதன்மைக்கு இழுக்காக முடியு மன்ருே! எனச் சிலர் கருதுவர். தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடும் காதற்றலைமக்களுள் உயர்வு தாழ்வு உணர்ச்சிகள் நிகழப்பெரு. இதனை ''ஆச்ரயண வேளையிலேயிறே கிரமம் பார்ப்பது; அநுபவ வேளையிலே கிரமம் பார்க் கப் போகாதிறே'' எனவரும் பெரியவர்ச்சான் பிள்ளை அவர்களின் அரிய விளக்கவுரை இனி துணர்த்தும். (war and Love knows no formalities) 'பிரேமத்திற்குக், கிரமம் இல்லை' என்பது பழமொழி.

'மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய''

எனவரும் தொல்காப்பிய நூற்பாவும், இவ்வுண் மையைச் செவ்விதின் வலியுறுத்தி நிற்கும். எனவே மணிவாசகர் தலைவனுகவும், சிவ பிரான் தலைவியாகவும் மாறி நிற்கப் பெறுதலும் கூட, ஒருவகையில் பக்தியுணர்வு, மிகவிழுமிய பெருநிலையில் முழுநிறைவு எய்தித் திகழ்தலை, வெள்ளிடை விலங்கல் எனத் தெள்ளிதிற் புலப் படுத்தும்.

முடிவுரை :

இதுபற்றியே சிவபெருமான், ''பாவை பாடிய வாயாற் கோவை பாடுக'' என மணி வாசகரை விரும்பி வேண்டிக்கொண்டான் என் பது வரலாறு. இவ்வரலாற்ருல், பாவைக்கும் கோவைக்கும் இடையே உள்ள பண்பொப் புமை நலங்களையும், பாவைப் பாடலுக்கும் பக்தி நெறிக்குமுள்ள பலவகை இயைபுகளையும், யாவரும் ஓரளவு கருதி உணர்ந்து கொள்ளுதல் இயலும். பாவைப் பாடல்களை ஓதுதலால் நமக்குப் பக்தி வளரும்; நாம் இறையருளை எளிதின் இனிதின் எய்துதல் இயலும். வளர்க பக்தி நெறி! பரவுக பக்திப் பாடல்கள்.

—ஆசிரியர்.

தமிழர் திருநாள்

(பொங்கல் விழா)

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A. B.L., I.A.S.,
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

முன்னுரை :

தமிழக மக்கள் கொண்டாடிவரும், பொங்கல் விழா என்பது, மிகவும் சிறப்புடையதாகப் புகழ்பெற்று விளங்குகின்றது. ஒரு நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவன வற்றுள், அந்நாட்டு மக்களால் கொண்டாடப் பெறும் பண்டிகைகளும் விழாக்களும், சிறப்பிடம் பெறுகின்றன. அம்முறையில் பொங்கல் விழாவானது, தமிழ் மக்களின் பலவகைச் சிறந்த பண்பாடுகளை விளக்கும் நிலையில் அமைந்துள்ளது. ஆதலின் பொங்கல் திருநாள் "தமிழர் திருநாள்" என்றும் வழங்கப்பெறும்.

மருதத்திணை :

ஆராய்ச்சி அறிஞர்கள், உலகில் முதன் முதலாக மனிதன் குறிஞ்சி நிலத்தில் தோன்றி, அதனை அடுத்த முல்லை நிலமாகிய காடுகளில் காய்கனி வகைகளை உண்டு வசித்து வந்தான் என்றும், பின்னர் அவன் காலப் போக்கில் உழு தற்றொழிலை உணர்ந்து, பயிரிடக் கற்றுக் கொண்டு, ஓரிடத்தில் நிலையாக வாழத் தலைப் பட்டான் என்றும் கூறுவர். மனிதன் உழுது பயிர்த் தொழில் செய்ய முற்பட்ட வயல்கள் ஆகிய நிலப்பகுதியே, மருதத்திணை எனப் பெறு வதாயிற்று.

மருதத்திணைப் பகுதியிலேயே மக்கள் நகரங்கள் அமைத்து, மிகப் பெரிய அளவில் சேர்ந்து வாழத் தலைப்பட்டனர். மருத நிலத்தில்தான் நகரங்கள் அமைந்தன. நகரங்கள் அமையத் தொடங்கிய காலம் முதல்தான், மனிதன் நாகரிக வளர்ச்சிபெறத் தொடங்கினான். நாகரிகம் என்னும் சொல், நகர் என்ற சொல்லினின்றே தோன்றிய தாதலைக் காணலாம். 'Civilization' என்னும் ஆங்கிலச் சொல்லும் City எனப் பொருள்படும் Civitas என்னும் சொல்லினின்றே தோன்றியது என்பர். உழவுத் தொழில் செய்யத் தலைப்பட்ட பின்னரே, மனிதன் பண்பாடு வளரப் பெற்றான். பண்பாடு என்னும் பொருளுடைய Culture என்னும் சொல், உழவுத் தொழிலைக் குறிக்கும் Agriculture என்னும் சொல்லோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும்.

உழவர் திருநாள் :

இம் முறையில் ஆராய்ந்தால், பொங்கல் விழா நமது நாகரிகப் பண்பாட்டு விழாக்களுள் தலைசிறந்ததாதலை உணரலாம். பொங்கல் விழாவை 'உழவர் திருநாள்' என்றும் குறிப்பிடலாம். உழவுத் தொழிலின் உயர்வும் இன்றியமையாமையும் பற்றி யாவரும் உணருவர். அதனைப் போற்றும் முறையிலேயே பொங்கல் விழா, பொருத்தமுற அமைந்துள்ளது. உழவுத் தொழிலுக்கு மழை இன்றியமையாதது. ஆதலின் உரிய காலத்தில் வேண்டும் அளவு மழை பெய்வித்து உதவிய மழைக் கடவுள் ஆகிய போகி என்னும் இந்திரனுக்கு, நன்றிசெலுத்தி வழிபாடாற்றும் நாளே, போகிப் பண்டிகை ஆயிற்று. அந்நாளில் தூசு நீக்கியும் மாசு போக்கியும், வீடு முதலியவற்றைத் துப்புரவு செய்து, புதுமைப் பொலிவுறுத்துதல் வழக்கம். தைம் மாதத்தின் முதல் நாளே பொங்கல் விழா நாளாகும்.

சூரியன் மகர ஓரையில் புகும் நன்னாள் அதுவே. அந்நாளிலேயே சூரியன், தட்சிணாயனம் கழிந்து, உத்தராயணம் செல்லத் தலைப்படுகின்றான். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை, தேவர்களுக்கு இரவு என்றும், தை மாதம் முதல் ஆனி மாதம் வரை பகல் என்றும் பெரியோர்கள் கூறுவர். அம்முறையில் தைம்மாதத்தின் முதல் நாளானது, இரவு கழிந்து பகல் தொடங்குவதற்கு இடைப்பட்ட

வைகறைப் போதாக அமைகின்றது. வைகறை வேளை கடவுள் வழிபாட்டுக்குச் சிறந்தது என்பர். உத்தராயண புண்ணிய காலம் என்பது பெரு வழக்கு. இந்நல்லநாளில் உழவு தொழிலுக்குப் பலவகைகளில் பேருதவி புரிந்த சூரிய வழிபாடு நிகழ்வது சாலப் பொருத்தமாகும்,

சூரிய வழிபாடு :

சூரிய வழிபாடு (Heliolatry) என்பது, ஒரு நாட்டிற்கோ ஒரு சமயத்திற்கோ மட்டும் உரியதன்று. அஃது உலகம் அனைத்திற்கும் பொதுவானது. உலகம் எங்கணும் நிகழ்வது. ‘உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு’ என்று நக்கீரர் சூரியனைப் புகழ்ந்திருத்தல் காணலாம். ‘ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்’ என இளங்கோவடிகளும் பாடுவர். சிவ சூரியன், சூரிய நாராயணன் முதலிய பெயர்களும், சூரியனின் சிறப்பை உணர்த்தும். புதிதாக அறுவடை செய்த நெல்லின் அரிசி கொண்டு, பாற்பொங்கலிட்டு, மக்கள் சூரியனை வழிபடுவர். உழுது பயிரிட்டுப் புதியனவாகக் கிடைத்த பொருள்களே, அன்று இறைவனுக்கு வைத்துப் படைக்கப்படும். ஆதலின் ‘பொங்கற் புதுநாள்’ எனவும் இதனைக் குறிப்பிடுவர். வாழ்க்கை வளர்ச்சி பெறுவதற்கு அவ்வப்பொழுது தேய்ந்து சிதைந்துபோன பழையனவற்றைக் கழித்து, புதிய புதிய நலங்களை நாம் தழுவிக்கொண்டு நன்மை பெறுதல் வேண்டும் என்பதனை, இவ்விழாவின் அமைப்புப் புலப்படுத்துகின்றது.

மாட்டுப் பொங்கல் :

உழவுக்கு இன்றியமையாதனவாக மாடுகள் விளங்குதலின், அவற்றைத் தக்கவாறு போற்றும் முறையில், மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகின்றது. நாணயப் புழக்கம் இல்லாத மிகப் பழங் காலத்தில், மாடுகளே மக்களின் செல்வமாக விளங்கின. ஒருவருடைய செல்வத்தின் மதிப்பு அவருக்கிருந்த மாடுகளின் எண்ணிக்கையைக் கொண்டே மதிப்பிடப்பெற்றது. ஆதலின் ‘மாடு’ என்னும் சொல்லுக்கே ‘செல்வம்’ என்று பொருள் உண்டு. “கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மற்றையவை” என்னும் திருக்குறளில், ‘மாடு’ என்னும் சொல் ‘செல்வம்’ என்னும் பொருளில் வந்திருத்தல் காணலாம். இவ்வாறே ‘பசு’ என்னும் சொல்லுடன் தொடர்புடைய (Pecus) என்னும் சொல்லினின்றே, பண சம்பந்தமான என்னும் பொருளுடைய (Pecuniary) என்னும் ஆங்கிலச் சொல் வழக்காறு ஏற்பட்டுள்ளமையும் காணலாம். இவ்வாற்றல் நாட்டு வளம் பெருகுதற்கு நன்கினிது பயன்படும் கால்நடைச் செல்வங்களைப் போற்றும் முறையிலேயே, மாட்டுப் பொங்கல், தொன்று தொட்டுக் கொண்டாடப் பெற்று வருதலை யுணரலாம்.

நம் தமிழகத்தில் சில பகுதிகளில், ‘மஞ்சு விரட்டு விழா’ மிகச் சிறப்பாக நடைபெறும். அடங்காத காளைகளை அஞ்சாது எதிர்த்து, ஆண்மை காட்டி அடக்கும் வீரப் பெரு விழாவாக, அஃது இந்நாளிலும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய ‘கலித்தொகை’ என்னும் கவின் மிகு நூலின்கண் உள்ள ‘முல்லைக் கலி’ என்னும் பகுதியைச் சேர்ந்த பாடல்கள் பலவும், இவ் வீரப் பெருஞ் செயலைச் சிறப்பித்துப் பாடும் முறையிலேயே அமைந்துள்ளன. ஆடு மாடுகளை மேய்க்கும் ஆயர் குலத்தில் தோன்றியருளிய கண்ணபிரான், நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொள்ளுதற்பொருட்டு, ஏழு வலிய காளைகளை அடக்கி வெற்றி கொண்டான் என்பது வரலாறு. கண்ணபிரானின் இவ்வரிய வீரச் செயலை ஆழ்வார்கள் மிகவும் போற்றித் துதித்துள்ளனர்.

காணும் பொங்கல் :

அடுத்ததாகிய மூன்றும் நாள், “காணும் பொங்கல்” என வழங்கப்பெறும். சமுதாய வளர்ச்சிக்கு மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து தொடர்பு கொள்ளுதலும், அவ்வப்போது ஒருவரை ஒருவர் சந்தித்து அன்புடன் கலந்து பேசி உரவாடுதலும், மிக மிக இன்றியமையாதனவாகும். சமுதாய நலமும் வளர்ச்சியும் குறித்து, நம் பண்டைச் சான்றோர்கள் தொன்று தொட்டே, “காணும் பொங்கல்” திருநாளை மிகச் சிறப்பாகக் கருதிப்போற்றி வந்துள்ளனர். “கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தாற் சுற்றப்படும்”; “அளவளா இல்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று” என்பன போன்ற திருக்குறள்களின் அடிப்படையில் ‘காணும் பொங்கல்’ அமைந்துள்ளது.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை :

இத்தகைய சிறப்பு மிக்க பொங்கல் விழாவை நினைவூட்டும் வகையில், முருகன்

அடியார்களுள் தலைசிறந்த ஒருவர் ஆகிய சிதம்பர சுவாமிகள் அருளிய திருப்போரூர்ச் சந்நிதி முறையில், ஒரு சிறந்த திருப்பாடல் அமைந்து காணப்படுகின்றது. உலக நிலையில் கொண்டாடப்பெறும் பொங்கல் விழாவை, ஞான நிலையில் நாம் கொண்டாடுவதற்குரிய முறையினை விளக்குவதாக, அப்பாடல் அமைந்திருக்கின்றது. நாம் நம் இல்லங்களில் அடுப்பு அமைத்து, விறகிட்டு நெருப்பு மூட்டிக் கலசம் ஏற்றி, உலை நீர் வார்த்துச் சோறு பொங்கி, உண்டு மகிழ்கின்றோம். இது நம்மனோர் கொண்டாடும் பொங்கல் விழா. இப் பொங்கல் விழாவின் அடிப்படையில், அடியார்கள் நாடொறும் நிகழ்த்தி மகிழ்தற்குரிய பொங்கல் விழா, பின் வருமாறு இருத்தல் வேண்டுமெனச் சிதம்பர சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

அருட்பொங்கல் :

அடியவர்களின் உள்ளமே வீடு. பொங்கலுக்கு முன்னர்ப் போகிப் பண்டிகை நாளில் வீட்டைக் கழுவி மெழுகித் தூய்மை செய்தல் போல, அடியவர்களும் தங்கள் மன மாசுகளைப் போக்கி, காம வெகுளி மயக்கம் முதலிய குற்றங்களை அகற்றிக்கொள்ளுதல் வேண்டும். பொங்கல் இடுவதற்கு அடுப்பமைக்குங்கால், அதனை மூன்று கொம்மைகள் கொண்டதாகச் செய்வர். அதுபோல அன்பு-பொறுமை-அவா அறுத்தல் என்னும் அரிய பண்புகளைக்கொண்டு, அழற்குண்டம் அமைத்தல் வேண்டும். அதன்கண் மலமாகிய விறகை இட்டு, ஞானமாகிய நெருப்பை மூட்டுதல் வேண்டும். அதன்மீது உயிராகிய பானையை ஏற்றி, அருளாகிய உலை நீர் வார்த்து, சிவானந்தம் என்னும் இனிய உணவைத் தினமும் பொங்குதல் வேண்டும். பின்னர்ச் 'சீவபோதம்' என்னும் உயிரின் மயக்கச் சிற்றறிவு ஆகிய இருள் நீங்கும்படி, மவுன நிலை அடைதலாகிய ஒளிவிளக்கு ஏற்றி நிட்டை கூடி, இன்புற உண்ணுதல் வேண்டும். இங்ஙனம், ஆண்டிற்கு ஒருமுறை யன்றி, நாடோறும் பொங்கல் விழா நிகழ்த்தி இறைவனை வழிபட்டு மகிழ்தல், அடியார்களுக்கு உரிய இயல்பாகும் எனப் பின்வரும் பாடலில், சிதம்பர சுவாமிகள் தெரிவிக்கின்றார். அப்பாடல் வருமாறு :

அடியார் நிமலத் திருவகத்துள்,
அன்பு பொறுமை அவா அறுத்தல்
அடுப்பாய் அமைத்து, மலவிறகின்
அதிக ஞானக் கனல்மூட்டி,
மடியாது இருந்த உயிர்க்கலசம்
வழிய அருட்பேர் உலைவார்த்து,
மாறுப் பெருமைச் சிவானந்த
மதுரச் சோறு தினம் பொங்கி,
விடியாச் சீவ போதஇருள்
வீய, மவுனச் சுடர்விளக்கு
விளக்கி, இருந்த படியிருந்து,
மேலாம் சிற்றில் விளையாடும்
செடிதீர் அகத்தோர் புகழ்வாலை
சிறுவா! சிற்றில் சிதையேலே!
தேரூர் வீதிப் போரூரா!
சிறியேம் சிற்றில் சிதையேலே!

—திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

இலக்கியப் பொங்கல் :

பொங்கல் விழாவின் இயல்பினை அடியவர்கள்மேல் ஏற்றி அழகுற விளக்கி, உருவகம் செய்து, முருகன் துதியாகச் சிதம்பர சுவாமிகள் பாடியிருக்கும் இக்கவிதைத் திறன் மிகவும் சுவையுடையதாகத் திகழ்கின்றது. இதனை ஒருவகையில் '' இலக்கியப் பொங்கல் '' (இலக்கிய நூலில் வரும் பொங்கல், அனைவரும் பின்பற்றும் நிலையில் எடுத்துக்காட்டாக விளங்கும் பொங்கல்) என இரு பொருள்கள் அமையப் புகழ்ந்து கூறலாம்.

முடிவுரை :

தமிழ் மக்களின் கடவுளுணர்ச்சி, நன்றியுணர்வு, சிற்றுயிர்களுக்கு இரங்கிப் பரிவு காட்டும் தன்மை, விருந்தோம்பல், சுற்றம் தழுவுதல், பிறருடன் கலந்து பழகி உறவு கொள்ளுதல் முதலிய சிறந்த பல பண்புகளை விளக்குவதாகவும், அவற்றிற்கு மேன்மேலும் ஆக்கம் அளிப்பதாகவும், தமிழர் திருநாள் எனப்படும் '' பொங்கல் விழா '' மிகவும் சிறப்புற அமைந்து விளங்குகின்றது எனச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம்.

நால்வர் தமிழ்

(ஈதலுக்கு காலம் ஏது?)

தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M.L.C.

தமிழர் நெறி வழங்கும் நெறியே! வாங்கும் நெறியன்று. "நல்லாறு எனினும் கொளல் தீது. மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று வள்ளுவம் பேசும். ஔவைப்பாட்டி "இட்டார் பெரியோர்" என்றே கூறினர். "தம்மை மாறியும் அறம் புரிவது இந்நாடு" என்றார் பெரும்பற்றப்புலியூர் நம்பி. ஆனல் ஆரிய மரபு கொடுப்பதல்ல. கொள்ளுவதே யாகும். அவர்கள் கொள்ளுவதன் மூலமே பெரும்பேறு எய்துகின்றனர். மனித இயலுக்கு மாறுன அறமாகும் இது. கொடுப்பதிலேதான் உயிர், அன்பைப் பெறுகிறது. இன்பத்தை அடைந்து அநுபவிக்கின்றது. உலகின் எல்லா இனங்களுமே கொடுப்பதில்தான் மகிழ்ச்சியடைகின்றன. செடிகள், கொடிகள், மரங்கள் மனித குலத்திற்கு வழங்கும் கொடை! அம்மம்ம, எவ்வளவு அற்புதமானவை! அதனுலன்ரோ, வகை வகையாய் நிற்கும் செடி, கொடி மரங்கள் வையகத்திற்கு அன்பு செய்கின்றன என்று பாரதி பாடினுன். கொடுத்தலினும் கொள்வது ஒருவகைத் தகுதிக் குறைவே. தமிழன் இத்தகு கொடை வளத்தை உயிரெனப் போற்றுபவன். தமிழன் பொருளீட்டுவான். ஏன்? வாழவா? இல்லை; வாழ்விக்கவே; வாழ்விப்பதன்மூலமே அவன் வாழ்வான் 'இயல்வது கரவேல்' அவனது பொருள் பொதிந்த வாழ்க்கைப் பழமொழி. கொடைத் தன்மைக்குக் கையிலுள்ள பொருள் அளவல்ல. அல்லது இன்றைக்கு உருக்குலைந்து வழங்கும் பண்பற்ற பழமொழியாகிய "தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்" என்ற பழமொழியின் பாங்குமல்ல.

ஈதல், இசைபட வாழ்தல் உயிர்க்குற்ற நெறியாகும். கொடுத்தால் மட்டும் போதுமா? சிலர் கொடுப்பர், ஆனுலும் அது கொடையாகாது. பெறுவான் தவம் தூண்டக் கொடுப்பதும் உண்டு. இயல்பாக நிகழ்வதே கொடை. ஏதாவதொரு தூண்டுதலின் மூலம் கொடை நிகழுமானுல் அதுவும் கொடையன்று. கொடைக்கு வேறு உள்நோக்கம் வருமானுல் அதுவும் கொடையன்று; வணிகமே! அறவிலை வாணிகன் ஆதலைத் தமிழகத்து ஆன்ருேர் விரும்பியதில்லை. இவையெல்லாவற்றையும் விடக் கொடை வழங்கக் காலம் தாழ்த்தக் கூடாது. காலம் தாழ்த்தப்படுமாயின் கொடை பெறுவானின் தகுதி குறையும். பெறுவானின் தகுதியைக் குறைக்கும் வகையில் வழங்குதல் கொடையன்று. பெறுவான் தகுதியை உயர்த்தும் வகையில் கொடை நிகழுதல் வேண்டும். ஆதலால் காலம் தாழ்த்திக் கொடையளித்தல் தகுதியுடையதன்று, சிலர் காலம் தாழ்த்துதல் மட்டுமின்றிப் பலதடவை கூறிக் காலத்தைத் தள்ளிப்போடுவர். சிலர் கொடைக்கு மனம் இருப்பதாகவும், ஆனுல் காலம் ஒத்துவரவில்லையென்றும் கூறுவர். அங்ஙனம் கூறுதல் வண்மைக்கு அழகன்று. வாழும் நெறியுமன்று.

சீர்காழியில் வாழ்ந்த மக்கள், வண்மையிற் சிறந்தவர்கள்-வழங்குவதில் புகழ்பெற்றவர்கள். காலத்தில் கொடுத்தவர்கள். எக்காரணத்தை முன்னிட்டும் 'நாளை' என்றும், 'மறுநாள்' என்றும் காலம் கூறிக் கடத்தாமல் வழங்கியவர்கள். அதனுல்தான் போலும், திருஞானசம்பந்தர் அழுதவுடன் அவர்தம் தந்தையைத் தேடாமல்-தேடி உணர்த்தாமல் - நேரடியாகவே - உடனடியாகவே அன்னைக்கு அன்னை பராசக்தி பாலட்டி ஊட்ட முன்வந்தாள். வாழும் மக்கள் இயல்பு, கடவுளியல் இயங்கவும் துணை செய்யும்போலும்! இதனைத் திருஞானசம்பந்தர்—

மாலும் பிரமனும் அறியா மாட்சியான்
தோலும் புரிநூலும் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலும் இரந்தோர்க் கெந்நாளும்
காலம் பகராதார் காழிந் நகர்தானே

—முதல் திருமுறை, பதிகம் 81, பாடல் 9.

உள்ளொளி

வித்துவான் தவத்திரு முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்,
இளவரசு, காசிமடம், திருப்பனந்தாள்.

உயிர்கள் எவற்றையும் உணர்வதற்கு வல்லமையுடையன; எனினும் தாமே உணர வல்லன அல்ல; ஒருவர் உணர்த்த உணரும் இயல்பின. இயல்பாகவே இத்தகைய குறைபாடு உடைய உயிர்களுக்கு, இயல்பாகவே எல்லாவற்றையும் முற்ற உணரும் வாலறிவினனாகிய இறைவன், உடனாயும் வேறாயும் ஒன்றாயும் நின்று உணருமாறு செய்து வருகின்றான். இத்தகைய பேருதவியைச் செய்தருளும் இறைவனைக் கண்டும், அவனுடைய பொருள் சேர் புகழினைப் போற்றியும் வாழுதல், உயிர்களின் நன்றிமறவாக் கடனாகும்.

இறைவனை அருளாளர்கள் பல்வேறு நிலையில் விளக்கியிருக்கிறார்கள். அவற்றுள் ஒன்று இறைவன் உயிர்க்குயிராக உள்ளொளியாக இருப்பன் என்பது. உலகில் காணும் ஒளிகள் புறவிருள் ஒன்றையே நீக்க வல்லன, அதுவும் ஒருகால எல்லையில் விளக்குவன. இவ்வொளி வடிவினனான இறைவனே உயிர்களுக்கு அகத்தும் புறத்தும் உள்ள இரு இருளையும் எஞ்ஞான்றும் நீக்கவல்லவன். அத்தகைய இறைவனை உள்ளத்தில் கண்டு அகஇருள் நீங்கப்பெற்று இடையறாத இன்பத்தைப் பெறுவதே உயிர்கள் பெறவேண்டிய பயனாகும்.

இறைவன் எல்லோருடைய உள்ளங்களிலும் இருப்பினும் அதனை உணர்வோர்க்கு மட்டுமே வெளிப்பட்டு நிற்கின்றனன்; ஏனையோர்க்கு ஒளிந்து நிற்கின்றனன்.

'ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே'

என்பது சிவபுராணம் (வரி. 68). எனவே அவ்வொளியைத் தேர்ந்து உள்ளத்தில் இருக்குமாற்றை விளக்கிக் காணவேண்டும் என்பது கருத்தாகின்றது. பேரொளிப் பிழம்பாகிய இறைவனை உள்ளத்தில் விளங்கக் காண்டற்கு, அவ்வுள்ளத்தை முதற்கண் தூய்மை செய்தல் வேண்டும். 'உளம் பெருங்களம்செய்ததும் இலை நெஞ்சே' எனவரும் திருவாசகத் திருச்சதகம் (வரி. 35) இதனை நன்கு விளக்கும்.

பொதுவாக உலகில் வீட்டில் விளக்கேற்ற வேண்டுமெனில் முதலில் வீட்டைத் தூய்மை செய்வர்; மெழுகுவர்; கோலமிடுவர்; பின்பு விளக்கேற்றுவர். இதைப் போன்றே பேரொளி வடிவினனாகிய இறைவனை உள்ளத்திருத்த வேண்டும் எனில் இத்தகைய செயல்களைச் செய்தல் வேண்டும். உள்ளத்தில் உள்ள குப்பை நீண்ட நாளாகக் கிடப்பதாகும்; நிறைந்து கிடப்பதாகும். அவற்றைப் போக்க அரிதின் முயல வேண்டும், அக்குப்பைகள் காமம், வெகுளி, மயக்கம் என்பன. இவை கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம் தொலைவின்றிக் கிடந்தனவாகும். இவற்றைப் போக்கியபின் அங்குள்ள ஐவகைக் காளைகளையும் அவிழ்த்து அகற்றிடவேண்டும். அவை மிகவும் கருநிறமானவை; வலிமை உடையவை; பெரும் சினம் உடையவை. ஆதலின் அவற்றை மிகவும் விழிப்புடன் உரன் என்னும் தோட்டியை - வைத்துக்கொண்டு அவிழ்த்து அகற்ற வேண்டும்: இங்ஙனம் தூய்மை செய்த இடத்தை அன்பாகிய பசுவின்சாணங்கொண்டு மெழுகி அருளாகிய விளக்கை ஏற்றி மெய்ம்மையாகிய விதானத்தை விரித்து, இதுவரையில் தூய்மையில்லாது கிடந்த உள்ளமாகிய பாழறையை இறைவன் எழுந்தருளுவதற்கு உரிய பள்ளியறையாக ஆக்குதல் வேண்டும். அங்ஙனம் ஆக்குகின்ற பொழுதுதான் இறைவன் தானும் தன் தையலுமாய் எழுந்தருளி உயிர்க்கு விளக்கம் தந்து பேரின்பத்தை வழங்குகின்றான்.

'என் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளிஅறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தைநீ இருக்க இட்டனன்
....

நின்செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தரு ளத்தகும் எம்பெருமானே '

என்பது பட்டினத்தடிகளின் அருள் வாக்கு (திருக்கழுமல மும்மணிக்கோவை—4). மணிவாசகர் அருளிய திருப்பள்ளி எழுச்சிக்கு அநுபூதி உரை கண்ட பெரியார். ஆண்டவனை அடியார் தம் மனத்தில் திருப்பள்ளி ஓலக்கம் கொள்ளவேண்டும் என வேண்டுவதே இதன் கருத்தாகும் எனக் கூறி இருப்பதும் இங்குக் கருதத்தகும். இதற்கு ஏற்ப,

' பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே '

என்று திருப்பள்ளியெழுச்சியில் (செ. 7) வருவது கண்டு மகிழ்தற்குரியது. இதனையே பிறிதொரு வகையாகத் திருநாவுக்கரசர் பெருமான் குறிப்பிடுகின்ருர். உடம்பாகிய வீட்டில் உள்ளமாகிய அகலில் உணர்வாகிய நெய்யை விட்டு உயிராகிய திரியை வைத்து ஞானமாகிய தீயை ஏற்றிக்கொண்டால் உள்ளத்தில் ஒளித்திருக்கும் அவ் இறைவனைக் காணலாம் என்பர்.

' உடம்பெனு மனையகத்து வுள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து
நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே '

என்பது, அப்பெருமானின் திருவாக்காகும். இங்ஙனம் கண்டமையால்தான் ' தேடிக் கண்டு கொண்டேன் ' எனப் பிறிதோரிடத்து அப்பெருமான் பெருமிதத்தோடு கூறி அருளுகின்ருர்.

இங்ஙனம் இறைவனை உள்ளத்தில் கண்டு மகிழ்ந்தவர் பலர். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள் வாயிலாரும், திருமூலரும், பூசலாரும் ஆவர். வாயிலார் இறைவனை உள்ளத் திருத்தி அர்ச்சனை செய்து வழிபாடு ஆற்றியவர் ஆவர்.

" மறவாமை யாலமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்
சனைசெய்வார் "

என்னும் திருத்தொண்டர் புராணம்-வாயிலார் புராணம்-எட்டாம் திருப்பாடல் அவர் வழிபட்ட திறனை விளக்கும்.

திருமூலர் உள்ளத்தை இறைவன் எழுந்தருளுதற்குரிய கருவறையாகவும், உடம்பை ஆலயமாகவும், வாயைக் கோபுர வாசலாகவும், உயிரைச் சிவலிங்கமாகவும், ஐம்பொறிகளைப் பரம்பொருளைக் காண்பதற்குரிய விளக்காகவும் கொண்டு வழிபடுமாற்றை விளக்குகின்ருர்.

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காள மணிவிளக்கே "...

என்பது திருமந்திரம் (செ. 1823).

பூசலாரோ உள்ளத்தைக் கோயிலாகக் காட்டுவதற்குப் பல்வேறு கருவிகளையும் சமைத்துக்கொண்டு கோயில் கட்டி, அதனைச் சுற்றிலும், வாவியும் அமைத்து, இறைவனை எழுந்தருளுவித்தற்குக் குடமுழுக்கு விழாவும் செய்து உலகம் போற்ற வழிபாடாற்றி உய்ந்தனர்.

" நின்றவூர்ப் பூசலன்பன்
நெடிதுநாள் நினைந்துசெய்த
நன்று நீடாலயத்து
நாளைநாம் புகுவோம் நீஇங்
கொன்றிய செயலை நாளை
ஒழித்துப்பின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில் கொண்டருளப் போந்தார் "

என்ற பெரியபுராணம்-பூசலார் புராணம்-செய்யுள் 10, அவர் ஆற்றிய வழிபாட்டின் அருமையை விளக்குவதாகும்.

இவ்வாறு உள்ளொளியை அகத்தில் கண்கொண்டு காணும் ஆனந்தமே உயிர்கள் பெறுவதற்குரிய ஈறில் இன்பமாகும். இங்ஙனம் காண்பதற்கும் இறைவனுடைய திருவருளே துணையாதல் வேண்டும் என்னும் சிவஞான சித்தியார் (செய். 280); இத்தகைய அருள் நிலை கைவரப் பெறுகின்றபொழுது வீட்டின்ப

தலைப்படும். அது வாராத வரை அனைத்தும் இருளாகவே இருக்கும். இதனை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்,

'தன்னேரி லாஞான சம்பந்தன் தாளடைந்தார்க்
கென்னே இருள்வெளியா மென்பரால்—
அன்னேன்
அருளாத போதுவெளி யாயிருந்த வெல்லாம்
இருளா யிருந்த வெனக்கு'...

என்று பண்டாரமும் மணிக்கோவையில் (செ. 18). அருளியவாற்றான் அறியலாம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்களுள் மீனாட்சியம்மை இரட்டைமணிமாலையும் ஒன்று. அதில் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்காகிய ஸ்ரீ மீனாட்சி அம்மையிடம் ஒரு வேண்டுகோள் விடுகிறார். 'என் நெஞ்சம் இருள் மூடிக் கிடக்கிறது. தாயே! என் நெஞ்சத்தை நீ தங்குவதற்குரிய சிறிய வீடாக ஏற்றருள வேண்டும். அதில் நீ உன் மகிழ்நரோடு வாழவேண்டுமாதலால் அதிலுள்ள இருட்டைப் போக்க விளக்கு இடுதல் வேண்டும்' என்பது அது. இங்ஙனம் கூறுமுகத்தான் இறைவியைத் தன் மனத்துக்குள்ளே ஒளியாக எழுந்தருளவேண்டும் என விரும்புகிறார் என்பது கருத்து. இப்பாடல் பின்வருமாறு:

'தருமே கடம்பவனத் தாயேநின் சிற்றி
லகமேயென் நெஞ்சம தானால்—
மகிழ்நரொடும்
வாழநின் றாயிம் மனையிருள்மூ டிக்கிடப்பது
ஏழாய் விளக்கிட் டிரு.'

இங்ஙனம் தேச விளக்கெலாம் ஆனவனை, உயிர்க்குயிராய் நிற்பவனை, உள்ளொளியாகக் கண்டு மகிழும் பேற்றை அனைவரும் பெற முயலுவோமாக. திருவருள் முன்னிற்க.

"மானும் மழுவும் திருமிடற்றில் வாழும்இருள்
தானும் பிறையும் தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே
வீற்றிருந்துஎன்
உள்ளத்தே நின்ற ஒளி"
—திருக்கழுமல மும்மணிக்கோவை.

திருச்செந்தூர் வட்டம், உடன்குடி, திரு உலகமுத்தாரம்மன் கோயில் திருப்பணித் துவக்க விழாவில் மாண்புமிகு அறநிலைய அமைச்சர், அறநிலைய ஆணையர், மற்றும் திரு. கே. பி. கந்தசாமி, M.A., M.L.A., திரு. எஸ். முருகன், திரு. எஸ் துரைராச பிள்ளை, திரு. டாக்டர் எஸ். சி. தாணுப்பிள்ளை முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

சித்த மருத்துவக் கலையின் சிறப்பு

டாக்டர் திரு. இராம கிருஷ்ணன் அவர்கள்,

சித்தமருத்துவ இல்லம், வேளூர் தேவத்தானம், வைத்தீசுவரன் கோயில்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் மருத்துவக் கலையும் ஒன்றாகும். அக்கலைகளில் மிகவும் உயர்ந்தது சித்த மருத்துவமாகும். ஏனெனில், சித்த மருத்துவம் மற்ற மருத்துவக் கலைகளைப் போல் அல்லாமல், அன்றாட வாழ்க்கையில் குழந்தை முதல் பெரிய வயோதிகர் வரையில், அவர்கள் உண்ணும் உணவுடனும், வாழும் வாழ்க்கையுடனும், கலந்து உறவாடி நிற்கின்றது. என்றும் நோய் காணா ஒரு முறையை நம்முன்னோர்களாகிய சித்தர்கள் நமக்கு வாரி வழங்கியிருக்கின்றார்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இம் மானிடப் பிறவி நோய் நொடியின்றி அமையுமாயின், அதனிலும் கிடைத்தற்கரிய பேறு, இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை. இன்றைய நிலையில் நாகரிகம் உயர்ந்து கொண்டு போகின்றதே ஒழிய, உலக மக்களில் பாதிக்கு மேல் ஏதோ சில வியாதிகளால் அல்லலுறுகின்றனர். அவர்களுக்கு இந் நோய்களினின்றும் விடுதலையுண்டா? என்பதுதான் ஆராய்தற்குரியது.

> " நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
> வாய் நாடி வாய்ப்பச் செயல் "

என்று கூறுகின்றார் நம் திருவள்ளுவர். நோயின் காரணத்தை ஆங்கில வைத்தியமுறை, ஆராய்ச்சிகள் பலவும் செய்து கண்டுள்ளது. ஆனால் அது தணிக்கும் வாய் அதாவது வழி கண்டது எனினும், அதை முற்றிலும் அறவே ஒழிக்கும் வழியைப் பல வியாதிகளுக்கு இன்றும் அது காணவில்லை. தற்காலிக உபசாந்தியாக அதுசில முறைகளைத்தான் கண்டுள்ளது. அகத்தியர், பதினெண் சித்தர்கள் ஆகியோர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மக்களுக்கு வரும் நோய்களின் கூறுகளைத் திட்டவட்டமாகக் கண்டறிந்ததுடன், அந் நோயின் மூலத்தை அறவே ஒழித்துச் செயலற்றிருந்த உறுப்புக்களையும், சுரப்பிகளையும், திட்பமாய் வேலை செய்யச் செய்யும் மருத்துவ வகைகளையும், மூலிகைகளையும் அறிந்து, அவற்றை நாம் தினம் உண்ணும் உணவோடு சேர்த்து உண்பதற்கு வழி வகுத்துத் தந்திருக்கின்றார்கள் என்பதை அறியப் பேருவகையும், வியப்பும் அடைகின்றோம். முதற்கண் நோய் வராமலேயே தடுப்பு முறைகளை ஆகாரத்தின் மூலமாகவே எவ்வாறு வாழவேண்டும் என்று வழி வகுத்து நமக்குத் தந்திருக்கின்றார்கள். நம் அன்றாடச் சமையலில் ஒரு நாளாகிலும் சீரகம், வெந்தயம், மிளகு, பூண்டு, இஞ்சி, சுக்கு, மல்லி, மஞ்சள் ஆகியவற்றை உண்ணாமல் இருக்கின்றோமா? இவை ஒவ்வொன்றும் மருந்தல்லாமல் வேறு ஒன்றும் இல்லை.

சித்த வைத்திய முறையில், விஞ்ஞான முன்னேற்றம் இல்லாத அக்காலத்தில், நோய்கள் பற்றிய முடிவான கருத்தும், அதற்கான தகுந்த மருத்துவமும் ஏற்பட்டிருந்ததை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

அகத்தியர் தம் பழைய நூல்களிலும் "நயன விதி ஐந்நூறு", "சுச்ருத சம்மிதை" முதலியவற்றிலும் வியத்தகு முறையில் அறுவைச் சிகிச்சைக்கான கூரிய நுண்ணிய கருவிகள் (Surgical instruments) பற்றி விவரிக்கப்படுதலைக் காண்கின்றோம். குலசேகர ஆழ்வார் தம் பாசுரத்தில்.

> " வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
> மாளாத காதல் நோயாளன் போல "

என்று வரும் சிறந்த வரிகளால், அக் காலத்தில் அறுவைச் சிகிச்சையில் நம் சித்த மருத்துவர்கள் வல்லுநர்களாக ஈடுபட்டிருந் தது நன்கு புலனாகின்றதன்றோ! நம் தமிழகத்தில் சித்தர்கள் தவமியற்றி, மக்கள் நல்வாழ்வு பெறச் செய்த மாண்புகள், அளவிட்டுப் பன்னப் பெறுபவோ? சித்தர்காடு, சித்தன் காத்திருப்பு, சித்தன் வாழ்வு முதலிய இடங்களின் பெயர்களே, சித்தர்கள் தமிழ்நாட்டில் பல் வேறு இடங்களில் வாழ்ந்து, தங்கள் அருளினால் மக்கள் வாழ்விற்கு உறுதுணை செய்தனர் என்று அறிவிக்கின்றன. அவர்கள் தம்முடைய அருட்டிறத்தால் மூலிகைகள் மருந்துகள் முதலியவற்றை வகுத்துக் கொடுத்து நோய் தணிக்கச் செய்த நன்மைகள் மிகப் பல.

சித்த மருத்துவம் என்பது, மூலிகைகளைக் கொண்டே வியாதிகளைக் குணப்படுத்தும் முறை. உதாரணமாக, நேத்திர சம்பந்தமான நோய்கள் எல்லாவற்றையும் குணப்படுத்த வல்ல மூலிகை ஒன்றுள்ளது. இம் மூலிகை சாதாரணமாகத் திருப்பதிமலை போன்ற மலைப் பாங்கான இடங்களில் அதிகமாகவும், சம வெளிப் பிரதேசங்களில் வேலிகள் ஓரமாகவும் படரக்கூடிய செடி போன்ற கொடியாக அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு கணுவிலும் நான்கு இலைகள் உண்டு. அதன் மலர் நாக சர்ப்பத்தைப்போல் சிறு வெண்மையும், சிவப்பும் கலந்த நிறத்தில் காணப்படும். இது "நாலிலை நேத்திர மூலி" என்றும் அழைக்கப்படுகின்றது.

இதன் இலை கொடி இவைகளைச் சுத்தமாகத் தண்ணீரில் அலம்பி, அவற்றைச் சுத்தமான உரலில் இட்டு இடித்து, வாய் அகன்ற பீங்கான் அல்லது எவர்சில்வர் பாத்திரத்தில் விட்டு, மூன்றுநாள் சூரிய புடம் அதாவது வெய்யிலில் தூசி புகாமல் வைத்து, ஒவ்வொரு நாளும் இந்த மூலிகையைக் கிளறிக்கொண்டு வரவேண்டியது. சூரிய வெப்பம் நன்றாக இருந்தால் தைலம் சுத்தமான பச்சை நிறமாகக் காணப்படும். உடனே எண்ணெயை வடிகட்டிப் பத்திரப்படுத்திக்கொண்டு தினம் காலை, மாலை இரண்டு முதல் பத்துச் சொட்டுகள் வரையில் கண்ணில் விட்டுவந்தால், கண் ரோகங்கள் அனைத்துமே பூரண குணம் ஆகி விடுகிறது என்பது என் அனுபவம். அண்மையில் (Eale's Disease with Vitreous Haemorrhage in both eyes) என்ற வியாதி உள்ளவர் என்னிடம் வந்தார். அவருக்குச் சுத்தமாக இரண்டு கண்களும் சூரிய வெளிச்சத்தைக் கூடக் காண முடியாமல் இருந்தது. இந்த மூலிகையின் சக்தியால் இழந்த பார்வையை மீண்டும் அடைந்தார். நீங்கள் அறிந்தால் மிகவும் ஆச்சரியம் அடைவீர்கள். ஆங்கில மருத்துவர்கள் பார்வையே இனி வராது என்று அழுத்தமாகக் கூறிவிட்ட நோயாளியாவர் இவர். மேலும் நீண்டகால உபயோகத்தில் (Cataract, Glaucoma) போன்ற வியாதிக்கு இம் மூலிகையே நிகரற்ற நிவாரணியாகும். இதை இரண்டு தலைமுறையாக உபயோகித்து வருகிறோம். ஆகையினால் இதை ஒவ்வொருவரும் தாமே உபயோகித்து நற்பயனை அடைய வேண்டும் என்ற காரணத்தால் இங்குச் சுருக்கமாகக் கூறியிருக்கின்றேன்.

இவ்வுடம்பினை நல்ல திடகாத்திரமாகவும், நோய்நொடியின்றியும் காப்பது நம் மூலிகைகளே. அம் மூலிகைகளின் பெருமைகளை எடுத்துணர்த்திய பெரியவர்களில் திருமூலரும் ஒருவராவார். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருமந்திரம் அனுபவமிக்கது. அருளுடையது. உடலை ஓம்புவதன் இன்றியமையாமையை மிக அழகாக அவர் வற்புறுத்துகின்றார்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே"

இவ்வுடலே இறைவன் உறையும் கோவில் எனத் திருமூலர் அழகாகக் கூறியிருக்கின்றார். பாலை மட்டுமேயன்றி, அதனை ஏற்ற கலத்தையும் பராமரிப்பது போல, சிவபெருமான் உயிருக்குயிராய் நம் இதயத்தே கோவில் கொண்டருளினன் என்னும் உண்மையை உணர்ந்து, இவ்வுடல் அவன் உடைமை எனக் கருதி, அதனை யான் நன்கு பேணுகின்றேன். இவ்வுண்மையை உணராத காலத்திற்கு முன்பு இவ்வுடலை இழுக்குடையதாகவே கருதினேன் என்று, திருமூலர் கூறுவதால் இதன் சிறப்பு நன்கு தெரிகின்றது.

உடல் எடுத்ததன் பயனை நுகராததற்கு முன்பே, இவ்வுடலை அழித்துக் கொள்ளுதல், பாலை உண்ணும் முன்பே பாற் கலத்தை அழிய விடுவதற்கு ஒக்கும். பாலுக்குப் பாலும் போய், பாத்திரத்திற்குப் பாத்திரமும் போனதுதான்

மிஞ்சும். இவையெல்லாம் நன்கு எண்ணி உள்ளக் கோயிலை அரண் செய்யும் யாக்கையைப் பேணுதல் காயசித்தியாகும் அன்றோ? இதனை நன்கு தெளிவுறுத்த,

'' உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே ''

என்று திருமூலநாயனர் கூறியிருக்கின்ருர். இவைகளினின்று நம் பெரியோர்கள் நோய்க்கிடமில்லாத யாக்கையைப் பேணுவது எத்துணைச் சிறந்தது என்று எண்ணி, வாழ்வாங்கு வாழ வழிவகுத்தவர்களை, நாம் வணங்காமல் இருக்க முடியுமா? பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் மருத்துவ மூலிகைகளை அடிப்படையாகக்கொண்ட சிறு பஞ்சமூலம், திரிகடுகம், ஏலாதி போன்ற நூல்கள் இருப்பனவற்றை நாம் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்வோமாக. மருந்துகள் உடலுக்கு நல்லது செய்வதுபோலச் செய்யுட்களில் உள்ள கருத்துக்கள் உள்ளத்திற்குத் தெம்பை அளிக்க வல்லன என்னும் கருத்தால், நம் பெரியார்கள் தம் நூலுக்கு மருத்துவப் பெயர்களையே சூட்டினுர்கள். நம் தமிழகத்தில் புலமை சான்ற பெரியோர்கள், நோய் நாடியும், நோய் முதல் நாடியும், அது தணியும் வாய் நாடியும் தம்மால் இயன்றதெல்லாம் ஒல்லும் வகையால் இயற்றியுள்ளார்கள். மருத்துவன் தாமோதரனுர் என்னும் புலவர், கடைச் சங்க காலத்தில் மருத்துவ மணியாக விளங்கி மருத்துவக் கலைத் துறையில் வல்லவராகத் திகழ்ந்திருந்தார்.

'' பொடியாநோய் போகப் புகன்றிட்டா ரென்றந்தி
மடிவான சூதம் மகத்தான தங்கம்
பிடிவான கெந்தி பேரான சத்து
குடியாய்ச் சிந்தூ ரித்துக் கூட்டியே தின்றிடே ''

என்று நோய்கள் அணுகாத ஒரு கற்ப மருந்தைத் திருமூலராகிய சித்தர் நமக்கு அருளியிருக்கின்ருர்.

'' வியாதிகள் போக வெகுநாள் சடமுறப்
பயாதிரை நரை பாங்காய்த் தவிர்த்திடக்
கயாதிக் கவனங் கலந்தெங்கும் சுற்றிட
அயாதிய ஞானம் அஞ்ஞானம் சித்தியே ''

என்று நோய்கள் அணுகாதிருக்கவும், வந்த நோய்களை நீக்கவும், இச் சரீரம் வெகுகாலம் நிலைத்து நிற்கவும், முதுமையை உணர்த்துகின்ற நரை திரை மூப்பு இவைகளை நிவர்த்திக்கவும், ககன ரசமணியின் மூலம் வேருெருவர் தெரியாமல் உலகத்து உலாவவும், அட்டமா சித்திகளைப் பெற்று எல்லாம்வல்ல சித்தர்கள் ஆகலாம் எனத் திருமூலர் கூறியிருக்கின்ருர். இச் சிறந்த சித்த மருத்துவம் எப்போதும் குடத்தினுள் இட்ட விளக்காக அல்லாமல், குன்றின்மேல் இட்ட விளக்காக எங்கும் பிரகாசிக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வடார்க்காடு மாவட்டம், வேலூர், பேரிப்பேட்டை திரு. காசிவிசுவநாத சுவாமி கோயிலில் '' பாவை விழா '' நிகழ்ந்தபோது, சென்னைத் துணை ஆணையர் திரு. ஏ. வேங்கடாசலம் அவர்களும், உதவியாணையர் திரு. என். எஸ். இராமச்சந்திரன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல் (1—1—72)).

உயிரின் இயல்பு

(ஆன்ம இலக்கணம்)

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை :

இந்நாளில் அறிவியல் மிகவிரைவாகப் பெரிதும் வளர்ந்து வருகிறது. பெரும்பாலான மக்களிடையே கல்வியறிவும் பரவிப் பெருகி வருகின்றது. இந்நிலையில் மக்கள் தம் அறிவின் துணைகொண்டு எத்தனையோ பலப்பல புதுப் பொருள்களை அறிந்தும், ஆராய்ந்தும், கண்டு பிடித்தும் வருகின்றனர். இவையனைத்தும் புறமுகமாக (Objective) நிகழ்த்தப்படுகின்றனவே யன்றி, அகமுகமாக (Subjective) ஏதும் நிகழவில்லை. அதன் காரணமாக எவ்வெவற்றையோ அறிந்துகொள்ள முயன்றுவரும் மனிதன், "நான் ஆர்? என் உள்ளம் ஆர்?ஞானங் ஆர்? என்னை யார் அறிவார்?" என்று தனக்குத்தானே வினவவும், அதற்குரிய விடையினைக் கண்டறிந்து பயன்பெறவும் முயலவில்லை. "ஒருவன் உலகத்தையெல்லாம் உரிமையாகப் பெற்றாலும், தன் உயிரை இழப்பானேல், அவன் அடையக்கூடிய நன்மை யாது?" (1). ஒன்றும் இல்லை அன்றோ?

மனிதன் தன்னைப் பற்றியும், தன் உயிரைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். "உன்னை நீ உணர்ந்து கொள்" ("Know-Thyself") என்ற உபதேசம் எக்காலத்துக்கும் எவருக்கும் ஏற்றதொன்றாகும். பிற எல்லாப் பொருள்களையும் அறிந்து கொள்ள முயலும் மனிதன், முதற்கண் தன்னைப் பற்றி ஓரளவாதல் ஆராய்ந்துணர்ந்து கொள்ளுதல் மிகமிக முதன்மையானது.

பேரறிஞர் அலெக்ஸிஸ் காரெல் தம்முடைய நூல் ஒன்றில், இக்கருத்தினை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார். (2)

இவ்வாறே சர். ஜான் டேவிஸ் என்னும் பேரறிஞரும், "நாம் உலகின் எல்லாப் பகுதிகளையும் அறிந்து கொள்கின்றோம், வெப்ப மண்டலங்களைக் கடக்கின்றோம், குளிர்ந்த துருவ மண்டலங்களுக்கும் சென்று காண்கின்றோம். ஆனால் நம் வீட்டுக்குள்ளாகத் திரும்பும் பொழுது நம்மை நாமே அறிந்துகொள்ளாமலும், நம்முடைய ஆன்மாவினையே நாம் அறிமுகம் செய்துகொள்ளப் பெறாதவர்களாகவும் இருக்கின்றோம். இஃது எவ்வளவு இரங்கத் தக்கது!" என்று வருந்துகின்றார். (3)

நம் நாட்டில் ஏதும் கல்லாத சிறிய குழந்தைகள் கூட, உடல்வேறு-உயிர்வேறு-உள்ளம்வேறு என்பன போன்ற பல தத்துவ நாலுண்மைகளை, இயல்பாக உணர்ந்திருக்கின்

---

*சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்று வரும் சிவஞானசித்தியார் வகுப்பில், நிகழ்த்திய சொற்பொழிவுகளைத் தழுவி எழுதிய கருத்துத் தொகுப்புச் சுருக்கம். — ஆசிரியர்.

---

(1) "What is a man profited, if he shall gain the whole world, and lose his own soul".
—St, Matthew: 16, 26.

(2) Man, the Unknown.
—Dr. Alexis Carrel.

(3) "We that acquaint ourselves with every Zone,
And pass both Tropics and behold the Poles,
When we come home are to ourselves unknown,
And unacquainted still with our own Souls."
—Sir John Davies.

றன. வழிவழியாக எத்தனையோ பல நூற்றுண்டுகளாக, நம் இந்திய நாட்டுச் சான்றோர்கள் கண்டறிந்து உணர்த்தியருளிய தத்துவ நுலுண்மைகள், நம் நாட்டுச் சிறு குழந்தைகளின் உள்ளத்திலும்கூட இயல்பாக ஆழ்ந்து படிந்து, அவற்றின் குருதியிலும்கூடக் கலந்து ஒன்றிஇயைந்துவிட்டிருக்கின்றன. அதனுல் நம் நாட்டு இளஞ்சிறுவர்கள் கூட, உடல்-உயிர்-கன்மம் - மறுபிறப்பு - ஊழ்வினை என்பன பற்றி ஓரளவேனும் தெளிவாக அறிந்துள்ளார்கள்.

ஆனல் இவ்வெளிய உண்மைகள், பிற நாடுகளிற் பேரறிஞர்கள் என்று பெயரும் புகழும் பெற்று விளங்குபவர்களுக்கும், ஒருசிறிதேனும் தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக, உலகப் புகழ்பெற்றவர் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர், " தாம் இறையிலார் (Atheists) களுள் ஒருவர் அன்றெனினும், தெளிவிலார் (Agnostics) களுள் ஒருவரே என்றும், தமக்கு உடல்-உயிர் என்பன குறித்து ஐயப்பாடுகள் உண்டு என்றும், சித்து (Mind) சடம் (Matter) எனப்படும் பொருள்கள் உண்மையிலேயே இருப்பனவாகத் தாம் கருதவில்லை " என்றும் குறிப்பிடுகின்ருர். (4)

இதனை ஒரு சிறிது ஊன்றிக் கருதியுணர்ந்தால், நாம் நம் நாட்டுத் தத்துவ ஞானிகளின் தகுதியும் சிறப்பும் எத்தகையன என்றுணரலாம். பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போன்றவர்களே ஐயுறவு கொள்ளும் நிலையிலுள்ள உயிரின் இயல்பு (ஆன்ம இலக்கணம்) குறித்து, நம் நாட்டுத் தத்துவ ஞானிகள் பலரும் ஆராய்ந்து கண்ட அரும்பெருங் கொள்கைகளை, இயன்றவரை இங்கு ஒரு சிறிது மிகச் சுருக்கமாகக் காண்போம்.

பல்வேறு கொள்கைகள் :

பழைய காலத்தில்-முதன் முதலில்-மனிதர்கள் அறிவு பெற்றுச் சிந்திக்கத் தொடங்கிய நிலையில், நெடுங்காலம் நீள நினைந்து சிந்தித்துப் பற்பல முடிவுகளுக்கு வந்தனர். அவரவர்கள் தத்தம் அறிவாராய்ச்சிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு கொள்கையினைக் கூறினர். அங்ஙனம் மக்கள் பலரும் சிந்திக்கத் தொடங்கி, ஆராய்ந்து கண்ட அரிய பல வெவ்வேறு கொள்கைகளைப் பற்றிய குறிப்புக்கள், நம் நாட்டுச் சமய தத்துவ நூல்களிற் காணப்படுகின்றன. மனித சிந்தனையின் வளர்ச்சியும், அறிவாராய்ச்சித் திறனின் செழிப்பும், எங்ஙனம் படிப்படியே ஓங்கியுயர்ந்து பெருகிச் சிறந்திருக்கின்றன என்பதனை, உயிரின் இயல்பு பற்றி விளக்கும் பல்வேறு கொள்கைகளைப் பற்றிய குறிப்புக்கள் நமக்கு நன்கினிது உணர்த்துகின்றன. அவைகளைச் சுருக்கமாக இங்குத் தொகுத்துக் காண்போம்.

(1) ஆன்மா என்பதொரு பொருளில்லை; அது வெறும் சூனியமே என்று கூறுவோர், சூனியான்மா வாதிகள்.

(2) தேகமே ஆன்மா; தேகத்தின் வேருக ஆன்மா என்பதொன்று காணப்படவில்லை என்போர், தேகான்மவாதிகள்.

(3) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களே ஆன்மா என்பர், இந்திரியான்ம வாதிகள்.

(4) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களே ஆன்மா என்பர், அந்தக் கரணுன்மவாதிகள்.

(5) புரியட்ட தேகம் அல்லது நுண்ணுடல் என்னும் சூக்கும தேகமே ஆன்மா என்று சொல்லுவோர்' சூக்கும தேகான்மவாதிகள்.

(6) நம்மால் உள்ளே இழுத்தும் வெளியே விடுத்தும் உயிர்க்கப் பெறும் பிராணவாயுவே ஆன்மா என்று கூறுவோர் பிராணுன்மவாதிகள்.

(7) எல்லாப் பொருள்களையும் இயக்கி நின்று தொழிற்படுத்தும் கடவுள் ஆகிய பிரமம் தான் ஆன்மா என்று புகல்வர், பிரமான்ம வாதிகள்.

(8) அற்றன்று; தேகம் இந்திரியம் அந்தக் கரணம் சூக்கும தேகம் பிராணவாயு என்னும் இவையாவும் கலந்து நின்ற திரட்சியாகிய

---

(4) "Many Agnostics (including myself) are quite as doubtful of the body as they are of the soul, but this is a long story taking into difficult metaphysics. Mind and matter alike, I should say, are only convenient symbols in discourse, not actually existing things..............."
—Dr. Bertrand Russel,
What Is An Agnostic?

JL Q2m24,4 59TK N71:6.5

சமூகம்தான் ஆன்மா என உரைப்பர், சமூகான்ம வாதிகள்.

(9) ஆன்மாவானது பிரமப் பொருளின் பரிணமமாகத் தோன்றி, அறிவு இச்சை செயல்களை அடைந்து, தீயும் சூடும்போலப் பேதாபேதம் ஆகிய குணகுணித் தன்மைகளை யுற்றுப் பல்வேறு வகைப்பட்டு நிற்கும் என்பர், பரிணமவாதிகள்.

(10) ஆன்மாவானது குணகுணித் தன்மை இல்லாமல், முழுவதும் அறிவு மாத்திரையாய் நிற்கும் என்பர், சாங்கிய நூலார்.

(11) ஆன்மா என்பது அருவம் அன்று; உருவப் பொருளே என்பர், பௌராணிக மதத்தினர்.

(12) ஆன்மா உருவப் பொருள் அன்று; ஒருவாற்றுற் காணப்படுதலும், ஒருவாற்றுற் காணப்படாமையும் உடைய அருவுருவப் பொருள் எனக் கட்டுரைப்பர், கவுள மதத்தினர்.

(13) ஆன்மா என்பது ஆகாசம் போல அருவமாய் அவிகாரமாய் இருக்கும் என்று பகர்வர், பாதஞ்சலர்.

(14) ஆன்மா எனப்படுவது சடப் பொருளாய் நின்று அறியும் தன்மை பெறும் என இயம்புவர், வைசேடிகர்.

(15) ஆன்மா சித்தும் அசித்துமாய்ச் சித்து-அசித்து என நிற்கும் எனப் புகல்வர், அவர்களுள் ஒரு சிலர்.

(16) ஆன்மா சித்துப் பொருள்தான், சடப்பொருள்களுள் ஒன்றன்று என மொழிவர், பட்டாசாரியர்.

(17) ஆன்மாவானது உடம்பினுள்ளே பரமாணு அளவிற்றுய் இருக்கும் என உரைப்பர், பாஞ்சராத்திரிகள்.

(18) உடம்பினுள்ளே, புல் நுனியிற் பனித்துளிபோல ஏகதேசமாய் இதயத் தானத்தில் நின்று, தன் அறிவு விளக்கொளியைப்போல எங்கணும் வியாபித்துப் பரவியிருப்பது ஆன்மா என்பர், மிருதி நூலார்.

(19) உடம்பு முழுவதும் நிறைந்து, சிறிய உடம்பிற் சிறியதாயும், பெரிய உடம்பிற் பெரியதாயும், விளங்குவது ஆன்மா என விளம்புவர், சமணர்கள்.

(20) இறைவனைப் போலவே எங்கணும் வியாபித்துப் பரவி நின்று அறிவது ஆன்மா என அறிவுறுப்பர், ஐக்கியவாதக் கொள்கையினர்.

சைவசித்தாந்தம் :

இங்ஙனம் உயிரின் இயல்பு பற்றிப் பலரும் பலவகையிற் கூறும் கொள்கைகளையெல்லாம் சைவசித்தாந்தம் பொறுமையுடன் கேட்டுக் கொள்ளுகின்றது. அவைகளுக்கு உரிய மதிப்புக் கொடுத்து, நன்கினிது சிந்தித்துப் பார்த்து ஆராய்கின்றது. அவைகள் எங்ஙனம் பொருந்தாதன என்றுகாரணம் காட்டி விளக்குகின்றது. பின்னர் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, சிறந்த புதிய பொருத்தமான கொள்கையினையும், அறிவு நெறிக்கு இணங்க ஆராய்ந்து காட்டி நிறுவுகின்றது. இதுதான் சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெருங் கொள்கையின் சிறப்பியல்பு ஆகும்.

148694

இச்சிறப்பியல்பினையே "புறச் சமயத்தவர்க்கு இருளாய்-அகச் சமயத்து ஒளியாய்-அளவைக்கு அளவாகி-பெருநூல் சொன்ன அறத்திறனுல் விளைவதாய்-சிறப்பினதாய்-வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" எனவும்; "நிலவு உலகாயதம் ஆதி நிகழ் சிவாத்துவிதம் அந்தமாக் குலவுநர் அளவளாவாக் கொள்கைய தாகி-வேதத் தலைதரு பொருளாய்-இன்பாய்-தாவில் சற்காரியத்தாய்-மலைவறும் உணர்வு" எனவும்; சான்றோர்கள் வியந்து போற்றியருளினர்.

இத்தகைய சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெருந் தத்துவம், 'ஆன்ம இலக்கணம்' பற்றி மேற்குறித்த கொள்கையாளர்கள் பலரும் கூறும் கருத்துக்களை, எங்ஙனம் ஆராய்ந்து விலக்குகின்றது என்பதனை, ஈண்டுச் சிறிது காண்போம்.

பலகொள்கைகளைப் பற்றிய ஆராய்ச்சி :

(1) ஆன்மா என்பதொன்று இல்லை எனக் கூறுபவரும், அங்ஙனம் வாளா கூறுதல் அமையாது. உடல் பொறி விடயம் அனைத்தினையும் இஃது ஆன்மாவன்று இஃது ஆன்மாவன்று என ஒரோ வொன்றாக ஆராய்ந்து கண்டு

கழித்த பின்னரே, ஆன்மா என்பது சூனியம் என்பர். ஆனால் இங்ஙனம் உடல்பொறி விடயம் அனைத்தினையும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்து, அன்று அன்று எனக் கழித்து முடிவு செய்யுங்கால், அங்ஙனம் முடிவு செய்து நிற்பதாகிய அறிவு ஒன்று இருத்தலின், அதுவே ஆன்மா எனக் கொள்ளுதல் சாலும். அவ்வறிவு தானும் சூனியமே எனின், அஃது ‘‘ என்னை ஈன்றாள் மலடி’’ என்பதோடு ஒக்கும். (Self-Contradictory) ஆதலின், சூனியான்ம வாதிகள் கூற்றுப் பொருந்தாது.

(2) உலக வழக்கில் யான் வளர்ந்தேன்-யான் மெலிந்தேன்-யான் மனிதன்-யான் மறையவன் என உடம்பின் பண்புகளை உபசாரம் பற்றி உயிருக்கு ஏற்றி வழங்கினும், யான் உடம்பு-யான் கை-யான் கால்-என்று உடம்பினை அவ்வாறு வழங்குவார் இலர். எனதுடல்-எனதுகை-எனது கால் என வேற்றுமைப் படவே யாவரும் வழங்கக் காண்கின்றோம். எனவே, உடம்பின் வேறாக உயிர் என்பதொரு பொருள் உண்டு என்பது புலனாகும். ஆதலின் தேகான்மவாதிகள் கூற்றுப் பொருந்தாது.

(3) மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளுள், ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையே அறியவல்லதாக உள்ளது. ஒரு பொறி அறிவதனை மற்றொரு பொறி அறிய முடிவதில்லை. எனவே, ஐம்பொறிகளையும் தனித்தனியே இயக்கி, அவ்வைம் பொறிகளாலும் ஐம்புலன்களையும் அறிந்து பயன் கொள்வதாகிய ஆன்மா, இவற்றின் வேறாக உண்டு என்று தெளியப்படுதலின், இந்திரியான்மவாதிகள் கருத்தும் ஏற்புடைத்தன்று.

(4) ஐம்பொறிகளும் ஒடுங்கின கனவு நிலையில் இயங்கும் சூக்கும தேகமே ஆன்மாவாயின், கனவு கண்ட சூக்கும உடம்பே நனவின்கண் அதனை அறியுங்கால், தான் கண்டவாறே தெளிவுற அறிதல் வேண்டும். அவ்வாறின்றி மயங்கி யறிதலையே காண்கின்றோமாதலின், நனவின் இயங்கும் தூலதேகமும், கனவு காணும் சூக்குமதேகமும் ஆகிய இரண்டிற்கும் வேறுபட்டு, ஆன்மா என்பதொன்றுண்மை தெளியலாம். இவ்வாற்றாற் சூக்கும தேகான்மவாதிகள் சொல்லுவதும் செவ்விதன்று.

(5) உறக்கம் விழிப்பு என்னும் இருதிற நிலைகளினும் பிராணவாயு ஒரு தன்மையாகவே இயங்கிக் கொண்டு நிற்கின்றது; ஆயினும் உடம்புக்கு விழிப்பு நிலையில் மட்டுமே இன்ப துன்ப நுகர்ச்சியுள்ளது. உறக்க நிலையில் அவை இல்லை. ஒரு தன்மையே இயங்கி நிற்கும் பிராணவாயு இவ்வேறுபாட்டுக்குக் காரணமாதல் அமையாது. எனவே பிராண வாயுவின் வேறாக ஆன்மா உண்டு என்பது திண்ணம். இவ்வாற்றாற் பிராணான்ம வாதிகள் கூற்றும் பிழைபடுகின்றது.

(6) இனி, அறிவுப் பொருள் ஆகிய பிரமம் தான் ஆன்மா ஆகும் எனின், எக்காலத்தும் திரிவின்றி அறிந்தாங்கு அறிய வல்ல பேரறிவுப் பொருள் ஆகிய பிரமமும், அறியாமலும்-ஒரு சிறிதே யறிந்தும்-அறிந்ததனையும் அடிக்கடி மறந்தும் மயங்கி வருந்தும் நிலையினதாகிய ஆன்மாவும், இருளும் ஒளியும் போலத் தம்முள் வேறுபட்டன என்பது வெள்ளிடை விலங்கல். இதனால் பிரமான்மவாதிகள் கருத்தும் பிழையே யாம்.

(7) தேகம் இந்திரியம் அந்தக்கரணம் பிராணவாயு என்பன தனித்தனியே வெவ்வேறு பெயர் பெறினும், அவையெல்லாம் சேர்ந்த திரட்சி நிலையே ஆன்மா எனக் கொள்ளலாம் எனின், தனித்தனியே வெவ்வேறு பெயர் பெற்று நிற்பன பலவும் ஒன்றாகச் சேர்ந்து திரண்ட வழியும், அத்திரட்சிக்கு ஆன்மா என்னும் பெயர் யாண்டும் வழங்கவில்லை. மேலும் அங்ஙனம் திரண்ட பொருள்கள் அனைத்தும் தோன்றி நின்று அழியும் அநித்தம் ஆகிய மாயாகாரியப் பொருள்களாம். நித்தப் பொருள் ஆகிய ஆன்மா, அநித்தப் பொருள்களின் திரட்சியன்று என்பது தேற்றும். எனவே சமுதாய ஆன்மவாதிகள் கொள்கையும் தகுதியுடையதன்று.

(8) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கனுள், ஐம்பொறிகள் அறிந்த புலனைச் சித்தம் சிந்தித்தறியும். மனம் பற்றிச் சங்கற்ப விகற்பம் செய்யும். ஆங்காரம் ஒருப்பட்டு எழும். புத்தி நிச்சயிக்கும். ஆனால், இவைகள் முறையே யான் சிந்தித்தேன் பற்றினேன் ஒருப்பட்டெழுந்தேன் நிச்சயித்தேன் என்று அறியும் தன்மையுடையன அல்ல. இங்ஙனம் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக் கரணங்களின் வேறாய், தன்னை நோக்கியும் பிறவற்றை நோக்கியும் சித்துப் பொருள் எனத் திகழும் ஆன்மா என்பதொரு

பொருள் உண்டு. அதுவே இவ்வந்தக் கரணங்களுடன் கூடி அவற்றினுலாய பயனை அடைகின்றது என்பது புலனும். ஆதலின், அந்தக்கரணுன்மவாதிகள் கருத்தும் பொருத்த மிலது.

(9) பேரறிவுப் பொருளாகிய பிரம்மத்திற்கும், கருவிகளின் துணையின்றி ஒன்றனையும் அறியமாட்டாத சிற்றறிவுப் பொருளாகிய சீவான்மாவுக்கும் இடையே பெருவேறுபாடு காணப்படுதலால், பிரமப் பொருளின் பரிணுமமே ஆன்மா என்னும் பரிணும வாதிகள் கொள்கை பொருந்துவதன்று.

(10) உயிரின்பால் அறிவு இச்சை செயல் என்னும் மூவகைக் கூறும் நிகழக் காண்டலின், ஆன்மா கேவலம் அறிவு மாத்திரையாய் விளங்குவது என்னும் சாங்கியர் கருத்தும் தகுதி யுடையதன்று.

(11) காட்சிப் புலனுதலும், பரிணமித்து அழிதலும் இல்லாத உயிரை, உருவப் பொருள் என்று பவுராணிகர்கள் (Mythologists) பகர்வது பிழையேயாகும்.

(12) அருவம் உருவமாயும், உருவம் அருவமாயும் ஒன்று பிறிதொன்ருக மாருதாகலானும், மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளின்பால் இயல்பாக அமைந்திரா ஆகலானும், ஆன்மாவினை அருவுருவப் பொருள் என்று கூறும் கவுளர் கருத்தும் ஏற்புடையதில்லை.

(13) உயிரானது உடம்பினை யாத்து நின்று, அதனைப் பல வகைகளில் ஆட்டி இயக்கி நடிக்குமாறு செய்து வருகின்றதாதலின், அதனை ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்பது எனப் பகரும் பாதஞ்சலர் கொள்கையும் பாங்குடைத்தன்று.

(14) சடப் பொருள் சித்தாதலும், சித்துப் பொருள் சடமாதலும் உலகத்து யாண்டும் இன்மையால், உயிரைச் சடப்பொருள் என்றும், அது பின்னர் மனத்தோடு கூடிச் சித்தாகி அறியும் என்றும் கூறும் வைசேடிகரின் கொள்கை, ஒப்பத்தக்கதாக இல்லை.

(15) மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளின்கண் ஒருகாலத்து ஒருங்கே இயல்பாக அமைந்திரா வாதலின், உயிரைச் சித்து-அசித்து என இரண்டுமாகக் கருதும் ஒரு சிலர் கருத்தும் பொருத்தம் ஆகாது.

(16) அசித்து ஆகிய ஐம்பொறிகள் அந்தக் கரணங்கள் முதலிய கருவிகளின் துணையில்லாமல், உயிரானது எதனையும் அறியமாட்டாமல் இருத்தலின், அதனைச் சித்து என்று பகரும் பட்டாசாரியன் மதமும் அடாது.

(17) உடலின்கண் உள்ள எத்துணையோ பல துளைகளுள் ஒன்றன் வாயிலாக நில்லாமல் ஓடிப்போம் ஆதலாலும், உடலின்கட் கிடந்து கட்டுண்ணவும், பாரம் தாங்கிச் செல்லவும் உடன்படாது ஆதலாலும், உயிரானது உடலினுள் பரமாணு அளவிற்ருய் நிற்பது என்றுரைக்கும் பாஞ்சராத்திரிகள் கூற்றும் அமையாது.

(18) உயிரானது உடலின் ஒரு பகுதியில் இருப்பதெனின், உருவப் பொருள் என்றதற்குரிய குற்றம் அனைத்தும் நேருமாகலானும், குணம் குணியளவில் அன்றி அதற்குமேற் செல்ல வல்லதன்ருகலானும், ஒளியாவது விளக்கின் சூக்கும வடிவே யன்றிக் குணம் அன்ருகலான் அஃது ஈண்டைக்கு உவமையாகாமையானும், விளக்கொளிக்கும் உயிரறிவுக்கும் இடையே வேற்றுமை பெரிதுண்டு ஆகலானும், உயிராவது உடம்பகத்துப் புல் நுனித் துளி போல ஏகதேசமாய் இதயத்தானத்தின் நின்று விளக்கொளிபோல யாண்டும் தன் அறிவு வியாபிக்கப் பெறுவது என்ற மிருதி நூலார் கூற்றும், ஏற்புடைத்தாகக் காணப்படுகின்றிலது.

(19) உயிரானது உறக்கம் கனவு முதலிய அவத்தைகளை உறுதலாலும், ஐம்பொறிகளிலும் அறிவானது ஒருகாலத்து ஒருங்கே உடன் நிகழாமையாலும், சிறிய உடம்பிற் பேரறிவும், பேருடம்பிற் சிற்றறிவும் நிகழக் காண்டலானும், உறுப்புக் குறைபட்ட வழி உயிரும் குறைபட்டதாகத் தோன்ருமையாலும், உடம்பளவில் நிறைந்து நின்று உணர்வது உயிர் எனச் சாற்றும் சமணர் கொள்கையும், தகவுடையதாகத் தோன்றவில்லை.

(20) உடம்பின்கட் கட்டுண்டு கிடத்தலாலும், தத்துவங்களின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப ஐந்தவத்தைகள் மாறி மாறி வருதலாலும், ஐம்புலன்களையும் ஒருங்கே யுணர வொண்ணுமல் ஒவ்வொன்ருகச் சுட்டியே யுணர்ந்து வருதலாலும், இறைவனைப் போல எங்கணும் வியாபியாய் நின்று அறிவது ஆன்மா என்று கூறும் ஐக்கியவாதிகள் கொள்கையும், அறிவுக்கு இயைந்ததாக இல்லை.

—ஆசிரியர்

(தொடரும்)

சம்பந்தர் வாய்மொழியில் தத்துவம்

"சித்தாந்தக் கலைச் செல்வர்"

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

மெய்யுணர்வைத் தலைப்பாட்டு உணர்வு (அனுபவ ஞானம்), நூல் உணர்வு (கலை ஞானம்) என இருவகைப்படக் கூறுவர் பெரியோர். இவற்றுள் முன்னையது முதல்வனை நேரே தலைப் பட்டு உணர்ந்து இன்பமும் ஒளியும் பெற்று நிற்றல்; பின்னையது அத்தலைப்பாட்டிற்கு வேண்டிய அடிப்படை உண்மைகளையும், சாத னங்களையும் கூறும் மெய்ந்நூல்களை மரபு நிலை திரியாது கற்றுணர்தல். அம்மையப்பர் திரு வருளால், இவ்விருவகை உணர்வுகளையும் ஒருங்கே பெற்று, ஞானத்தின் திருவுருவாய், நான்மறையின் தனித் துணையாய்த் தமி முகத்தே திகழ்ந்தவர் திருஞானசம்பந்தப் பிள்ளையார். அவர் தலையாய பிரமாண நூற் பொருண்மையை ஓதாது உணர்ந்து, தம்முள் நிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத்திரு மொழியால், உளங்குளிர்ந்து, உகந்து உகந்து பாடியவையே அவர்தம் திருப்பதிகங்கள். அத் தகைய திருப்பதிகங்களில் இலைமறை கனிகள் போல் உள்ள சில பகுதிகளைச் சிந்தித்து அனு பவிப்போம்.

பின்வரும் திருப்பாட்டு, அவர் திருமுது குன்றத்தில் அருளிச்செய்த நட்டபாடைப்பண் அமைந்த திருப்பதிகத்தில், மூன்றுவதாக வருவது :

"விளையாததோர் பரிசில்வரு
பசுபாசவே தனைஒண்
தளையாயின தவிரவ்வருள்
தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிரம்
உடையவ் வவனோடு
முளைமாமதி தவழும்உயர்
முதுகுன்றடைவோமே"

எல்லா உயிர்களுக்கும் உலகங்களுக்கும் தலைவ ஞகிய சிவபிரான், இவ்வுலகத்து அணுக்கமாக விளங்கி நின்று உயிர்களுக்கு அருள்புரிவதற்கு இடமாக உள்ள திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தை அடைந்து, அவனை வழிபடு வோம் என்பது, இதன் உண்மையான முக்கி யப் பொருள். இதில் தலைவனுக்குக் கூறும் அடைமொழியும், முதுகுன்றத்துக்குக் கூறும் அடைமொழியும், உண்மையின் இணைப்பு நிலையை, சித்தாந்த சைவத்தின் அடிப்படை உண்மைகளை நன்கு இனிது விளக்குபவை.

இறைவனைத் தலைவன் எனக் குறித்த ஆசிரியர், உயிர்களைப் பசு என்னும் சொல்லால் குறிக்கின்ருர். பசு என்னும் சொல் கட்டுற்றது என்னும் பொருளைத் தரும்; தருதலின், உயிர் கள் தன்வயம் இல்லாதனவாய், தடுக்கப்பட்ட அறிவு செயல்களை உடையவை என்பதும், அங் ஙனம் அவற்றைத் தடுக்கும் பொருள்கள் உள் ளன என்பதும் குறிப்பிக்கப்படுகின்றன; உயிர் களுக்குத் தடையாய் உள்ள பொருள்களைப் பாசம், வேதனை, ஒண்தளை என்னும் பெயர் களாற் குறித்து, பசுக்கள் இவற்றைத் தவிர்த் துக் கொள்ளும்படி அருள்பவன் தலைவன் என் பார், "பசு பாச வேதனை ஒண்தளை ஆயின தவிர அருள் தலைவன்" எனக் கூறியருளுவர்,

பாசம் என்னும் சொல், கட்டுவது என்னும் பொருளைத்தரும். அஃது உயிர்களின் அறிவு செயல்களை மறைத்துத் தடைசெய்யும் ஆணவத்தைக் குறிக்கும். நெல்லிற்கு உமியும், செம்பிற்குக் களிம்பும்போல, உயிர்க்கு உள்ள இயற்கைக் குற்றமாகிய பகைப்பொருளே ஆணவம் என்பது. அஃது இருள்-மலம்-மாசு-சகசமலம் முதலிய பெயர்களால் குறிக்கப்பெறும்.

வேதனை என்பது உயிர்களுக்கு உண்டாகும் அனுபவங்களாகிய இன்பத் துன்ப மயக்கங்களைக் குறிக்கும்; அஃது இங்கு ஆகுபெயராய் நின்று, இன்ப துன்ப மயக்கங்களுக்குக் காரணமாகிய இருவினைகளைக் குறிக்கின்றது. இருவினைகளைக் கன்மம் எனவும் வழங்கும் நூல்கள்.

இனி, ஒண்தளை என்றது உயிர்களுக்கு அறிவு செயல்களை விளக்குவதாயும், தடைசெய்வதாயும் உள்ள உலகப் பொருள்களையும், அவற்றின் முதற்காரணமாகிய மாயையினையும், குறித்து நிற்கின்றது. நாம் வாழும் உலகத்தை உடம்பு எனவும், அதன் சூழ்நிலை எனவும் இரண்டாக வகைப்படுத்தி உணரலாம். மேலும், கூர்ந்து நோக்கின், உடம்பும், அதன்கண் உள்ள மெய் வாய் கை கால் முதலிய புறக் கருவிகள், மனம் முதலிய அகக் கருவிகள் ஆகிய காரணங்களும், உடம்பு நிலவுதற்கு இடமாக உள்ள உலகும், உடம்பிற்கு ஊட்டமும் தேய்வுமாகியவற்றைக் கொடுக்கும் நுகர்ச்சிப் பொருள்களும் என நான்காகப் பகுத்து அறியலாம். இவற்றை முறையே தனு, கரணம், புவனம், போகம் என மெய்ந்நூல்கள் குறிக்கின்றன. இவை நமக்குப் புலப்படும் உருவுடையவை; இவற்றின் முதற் காரணமாய்ப் புலப்படாத அருநிலையாய், யாண்டும் நிறைந்து உள்ளதாய் இருக்கும் அறிவில் ஆற்றலை (சடசத்தியை) மாயை என்பர்; அதன் காரியமாய்ப் புலப்படும் உயிருடைப் பொருள்களை மாயேயம் என்பர் நூலோர்.

நமக்கு உடம்பு இன்றி, உலகத்துப் பொருள்களின் தொடர்பு இன்றி, அறிவு விளங்காது; நமக்கு வாழ்வும் இல்லை என்பது கண்கூடு. அன்றாடம் நமக்கு மாறி மாறி வந்து கொண்டிருக்கும் நனவு கனவு உறக்கம் என்னும் உணர்வு நிலைகளை, தன்நோக்கு உணர்வால், சிறிது உணர்ந்து பார்த்தால், உடம்போடும் மனத்தோடும் நம் அறிவிற்குத் தொடர்பு உள்ள வரையில், அறிவு விளக்கம் உள்ளது. அத்தொடர்பு நீங்க. நீங்க, அறியாமையாகிய உணர்வு இழப்பு உண்டாகின்றது என்பதை எளிதின் உணர்வோம். இவ்வுண்மையை, கலைஞானத்தைப் பன்னிரு சூத்திரங்களில் அடக்கிக் கூறித் தமிழகத்தைத் தெளிவித்த மெய்கண்ட முதல்வர் 'மாயாதனு விளக்கா மற்றுள்ளம் காணாதேல்-ஆயாதாம் ஒன்றை' என விளக்கி அருளினர். "மாயையின் காரியமாகிய உடம்பு, கண்களுக்கு விளக்கு உதவியாதல்போல, துணையாக நிற்க அதனைக்கொண்டு அறிந்தால் அன்றி, உயிர் ஒன்றையும் அறியாது" என்பது அவர் வாய்மொழியின் விளக்கம். இதற்கு மூலமறையாக உள்ள தொடரே, திருஞான சம்பந்தர் திருவாக்கில் எழுந்த "ஒண்தளை" என்பது.

இனி பசுவும், பாசவேதனை ஒண்தளை ஆயினவும், பசு இவற்றைத் தவிர்ந்து இன்புறும்படி அருளும் தலைவனும், என்றும், உள்ள, தோற்றமில் பொருள்கள் (அநாதி நித்திய பதார்த்தங்கள்) என உணர்த்துதற் பொருட்டு, "விளையாததோர் பரிசில் வரு" என்னும் பெயர் எச்சத்தொடரை, அம்மூன்றனோடும் கூட்டி உரைத்துக் கொள்ளும்படி, முதற்கண் அமைத்தனர் ஞானமுனிவர். ஒரு காலத்தில் தோன்றியது எனப்படாத தன்மையில் தோற்றமில் காலமாகப் பிறந்தும் இறந்தும், பசுக்களைப் பிணித்தும், இன்பத்துன்பம் ஆக்கியும், அறிவு செயல்களை விளக்கித் தளைந்தும், அருள் புரிந்தும் வருகின்றன என்பது கருத்து.

இனி பின்இரண்டு அடிகளில், 'திருமுது குன்றத்தில் அளவில் பேரொளியையுடைய பகலவனும், அதனால் ஒளி பெற்றுத் தன்கலை வளர்தலை உடைய முளைமாமதியும் தவழ்கின்றன' என இயற்கை வனப்பினை எடுத்துக் கூறினமையின், உலகம் காரணகாரிய நியதிக்கு உட்பட்டு மாறிவரும் உள்பொருளே என்பதையும், அறிவுடைப் பொருள்கள் இயற்கை முற்றுணர்வுடைய முதற்பொருளும், அவ்வறிவால் விளக்கம் பெற்று வளரும் செயற்கைச் சிற்றறிவுடைய பொருளும் என இரு வகைப்படும் என்பதையும், அவற்றுள் முதற்பொருள் தானே அறிந்து அறிவிப்பது, ஏனையது அறிவிக்க அறிவது என்பதையும், குறிப்பால் உணர்த்தியருளினார் ஆயிற்று.

இங்ஙனம் தத்துவ நுண்பொருள்களை, பகுத்தறிவிற்கு மாறுபடாத வகையில், நடைமுறை மெய்ம்மையோடு இயைத்துத், தெளிவு பிறக்கும்படி கூறும் சுருதி சாமர்த்தியம் உடைய வாய்மொழிகளே, தலையாய பிரமாணங்களாக அறிஞர்களாற் கொள்ளப்படும்.

"திருப்பாவையில் திருக்குறள்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

'திருக்குறள்' எனின், தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றியருளிய நூலையே பொதுவாகப் பெரும்பாலும் குறிக்கும். எனினும் இங்குப் பேசுதற்குக் கொடுக்கப் பெற்றுள்ள தலைப்பில், 'திருக்குறள்' என்பது ஏற்புழிக் கோடல் என்னும் உத்தியால், அல்லது தற்குறிப்பேற்றம்' என்னும் முறையால் திருமாலின் அவதாரங்கள் பத்தனுள் ஒன்றாகிய 'வாமனர்' என்னும் அவதாரத்தைக் குறிப்ப தாகக் கொள்ளுதல் கூடும். அஃது எதுபோலும் எனின், திருப்பாவை என்பது பொதுவாகப் பெரும்பாலும் பட்டர்பிரான்கோதை சொன்ன சங்கத் தமிழ் மாலை எனப்படும் பாவைப் பாடல்களையே குறிக்கும் எனினும், "திரு ஆகிய பாவை" எனக்கொள்ளின், பாவைப்பாடல் களைப் பாடியருளிய ஆண்டாள் நாச்சியாரை யும் குறிக்கவல்லதாதல் போலும் என்பது.

"குறள்" என்னும் சொல், திருமாலின் அவதாரமாகிய வாமனரையுணர்த்தும் என் பதற்கு "மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால் ஞாலம் முழுதும் நயந்து அளந் தான்" எனவும், "கான்நின்ற தொங்கலாய் காசிபனார் தந்ததுமுன் கூநின்று அளந்த குறள் என்ப" எனவும் வரும் திருவள்ளுவ மாலைச் செய்யுட்களே, சான்று பகரும். 'வைகுந்தா மணிவண்ணனே என் பொல்லாத் திருக்குறளா' என்று நம்மாழ்வாரும், 'நித்த நியமத்தனாகி நெடுமால் குறளனாகி மிகவும் சித்தமது ஒருக்கி வழிபாடு செயநின்ற சிவ லோகன் இடமாம்' என்று திருஞானசம்பந்தரும் அருளிச் செய்துள்ள பாடல்களும், இவ்வுண் மையினை இனிது வலியுறுத்தும். எனவே, "திருப்பாவையில் வாமனரைப் பற்றிவந்துள்ள குறிப்புகள், அவர் தம் சிறப்புகள்" ஆகியவை பற்றிப் பேசுதற்கு இத்தலைப்பு இடம் தருவ தாதல் காணலாம்.

ஐவகை நிலைகள்

'வேதம் அனைத்துக்கும் வித்தாகும்' எனப் போற்றப்பெறும் திருப்பாவைப் பாடல்களில், எத்தனையோ பல அரிய பெரிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள், திருமாலின் ஐவகை நிலைகள் பற்றிய குறிப்பும் ஒன்று. 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்றதனால் பரத்துவ நிலையும், 'பாற் கடலுள் பையத்துயின்ற பரமன்' என்றதனால் வியூகநிலையும், 'யசோதை இளஞ்சிங்கம்' 'நந்த கோபன் குமரன்' என்றதனால் விபவநிலையும், 'மனத்துக்கினியான்' என்றதனால் அந்தர்யா மித்துவ நிலையும், 'புள்ளரையன் கோயில்' என் றதனால் அர்ச்சை நிலையும் ஆகிய திருமாலின் ஐவகைநிலைகளும், திருப்பவைப் பாடல்களிற் குறிப்பிடப் பெற்றுள்ளமை காணலாம்.

பாவை நோன்பு

இவ்வைவகை நிலைகளுள் ஒன்றாய், விபவ நிலையினைச் சார்ந்ததாகிய வாமன அவதாரம் பற்றிய புகழுரை, திருப்பாவைப் பாடல்களுள் ஒன்றன்கண், மிக்க சிறப்பிடம் பெற்று வந்துள்ளது. பெரியாழ்வார் கண்டெடுத்து வளர்த்த ஆண்டாள் நாச்சியார் ஸ்ரீவில்லி புத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடைப் பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங் கோயிலே நந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் கண்ணபிரானாகவும் நினைத்துக்கொண்டு, அந்நினைவின் முதிர்ச்சி யாலே இடை நடையும், இடை முடியும்,

* திண்டிவனம் திரு. இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலில், திரு. கோ. இராசாராம், M.A., B.L., M.L.A., அவர்கள் தொடங்கி வைக்க நடைபெற்ற பாவை மாநாட்டில், திரு. மே. ச முத்துவெங்கட்ராம ரெட்டியார் அவர்கள் தலைமை யில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். (8-1-72).

இடைப் பேச்சும் முடை நாற்றமுமாய் மாறி நின்று, கண்ணபிரானை அடைவதன் பொருட்டுப் பாவை நோன்பு நோற்கலுறுகின்றாள்.

பாவை நோன்பின் பயன்

பாவை நோன்பு நோற்பதன் நோக்கம் அல்லது பயன் இரண்டு. ஒன்று பெண்கள் எல்லோரும் கண்ணபிரானோடு கூடிக் கலந்து களித்தல். மற்றொன்று, உலகமெல்லாம் செழிக்கும்படி மாதம் மும்மாரி பெய்து, அதனால் மக்கள் எல்லோரும் நீங்காத செல்வம் நிறைந்து இன்புற்று வாழ்தல். இவ்விரண்டாம் நோக்கத்தை வெளியிடும் சிறந்த திருப்பாவைப் பாடலின் தொடக்கத்திலேயே, 'திருக்குறள்' எனப்படும் வாமன அவதாரம் பற்றிய செய்தி வருகின்றது.

ஓங்கி உலகளந்த
உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச்
சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல்
ஊடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில்
பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து
சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும்
வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம்
நிறைந்தேலோர் எம்பாவாய்!

பாடலின் பொருள்

''இறைவனின் திருநாமங்களைப் பாடி, எங்களுடைய நோன்புக்கு ஒருப்பட்டு, நாங்கள் மார்கழி நீராடினால், பெரு மழையாகிய வெள்ளக்கேடும், மழையின்மையாகிய வறட்கேடும் இல்லாமல், ஒன்பது நாள் வெயிலும், ஒருநாள் மழையுமாக மாதந்தோறும் மூன்று முறை மழைபெய்யவும், அதனால் வானளாவ ஓங்கிப் பெருகி வளர்கின்ற செந்நெற் பயிர்களின் நடுவே, கயல்மீன்கள் துள்ளவும், அழகிய குவளை மலர்களில் வண்டுகள் தேனையுண்டு உறங்கவும், இடையர்கள் தொழுவத்திற் புகுந்து அசையாமல் இருந்து பருத்த மடிகளைப்பற்றி இருகைகளாலும் கறக்கப் பால் சுரந்து பல குடங்களை நிறைவிக்கின்ற வள்ளற்றன்மையையுடைய பெரிய சிறந்த பசுக்கள் பெருகவும், அழிவில்லாத பலவகைச் செல்வங்களும் நிறைந்து விளங்கவும் திருவருள் புரிதல் வேண்டும்'' என்பது இப்பாடலின் திரண்ட பொருள். இப்பாடலின் கண் 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று போற்றப் பெறுபவன், வாமனனாகிய திருக்குறளனேயாகும்.

மூர்த்தியின் சீர்த்தி

திருமாலின் கூறாகிய திருக்குறளனின் சிறப்பு எல்லையற்றது. அவனது மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியதாகும். 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்னும் உண்மையை உணர்த்துதற்குத் திருக்குறளனே சிறந்த எடுத்துக்காட்டாவான். இப்பெருமானது சிறப்பினை, ஆசிரியர் திருவள்ளுவரும் 'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு' என்புழி, வியந்து புகழ்ந்தார். இவ்வாறே முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகளும் 'மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகைமுடியத் தாவிய சேவடி' எனச் சிலப்பதிகாரத்தில் இம் மூர்த்தியின் சீர்த்தியைச் சிறந்தெடுத்துப் போற்றியருளினர்.

ஓங்கி உலகளந்த

''ஓங்கி உலகளந்த உத்தமன்'' எனவரும் திருப்பாவையின் சிறிய தொடர்தானே, இவர்தம் பெரிய சிறப்பினை நுண்ணிதின் உணர்த்த வல்லதாக உள்ளது. 'ஓங்கி உலகளந்த' என்றதனால் இவ்வளர்ச்சிக்கு முன்னர்க் குறுகியிருந்த தன்மை (வாமநத்துவம்) சுட்டப் பெறுகின்றது. பனித்துளிபட்டுச் சாய்ந்த மூங்கில் ஞாயிற்றின் கதிர்கள் பட்ட அளவிலே நீண்டு வளர்ந்து நிற்குமாபோலே, இவரும் ஓங்கி வளருபவரானார். மாவலியின்பால் சென்று இரக்க நேர்ந்த இழிவை உணர்த்துவான்போல் தன் பெருமை எல்லாம் குன்றக் குறுகி நின்று, குறள் (குள்ளன்) எனத் தோன்றினான். இரக்கப்புக்க அளவில் குறளனாகித் தோன்றியவன், இரப்பு வாய்த்த நலத்தினால் ஓங்கி வளர்ந்தான். பிறர்நலம் கருதிய செயல் செய்யப்பெற்ற மன நிறைவால் ஓங்கி வளர்ந்தான் எனினுமாம். அன்றியும் நல்லார் பொல்லார் என்னும் வேறுபாடு கருதாமல், அனைத்துயிர்களின் மாட்டும் கொண்ட அருளால் தன் திருவடிகளை அவை

யிற்றின் தலைகளில் எல்லாம் வைத்து ஆட்கொண்ட பெருந்தகைமையால் ஓங்கி வளர்ந்தான் எனினுமாம்.

உறங்குகின்ற குழந்தையை அணைத்துக் கொண்டு கிடக்கும் தாயைப்போல அனைத்துயிர்களையும் அருளால் அணைத்துக்கொண்டு அவ்வாற்றால் எய்திய மகிழ்ச்சிப் பெருக்கினால் வாமனன் ஓங்கி நின்றான். எவரையும் வரைந்து விலக்காத வள்ளன்மையினாலும், மனித நிலைக்கு மேற்பட்ட அற்புதப் பெருஞ்செயல்களாலும், வடிவழகின் மிகுதியினாலும், வாமனன் கண்ணபிரானுக்குச் சமானமாவன். இறைவனின் உடைமையாகிய மூவுலகங்களையும் தன்னது என்று எண்ணிக்கொண்டு தருக்கியிருந்த மாவலியின்பாலும், குணங்கண்டு உவந்து சென்று, தன் உடைமையாகிய மூவுலகத்தையும், அவன் தரத் தான் பெற்றுக்கொண்டது போல் நடித்து, அவ்வாற்றால் தான் இரவலனாகி அவனைப் புரவலனாகச் செய்து சிறப்பித்த பெருந்தகைமையாலே, குறளாய் நின்றவன் ஓங்கி வளர்ந்த நுட்பம் உணர்தற்குரியது.

பண்டு எவர்மாட்டும் கொடுத்தலன்றி, இரந்துபழக்கம் இல்லாதவன் ஆதலின் 'கொள்வன்நான் மாவலி' என்றும், 'நிலம் மாவலி மூவடி' என்றும், சொற்கிடக்கை முறை தடுமாறக் கூறிக் குறளாக நின்றவன், இரந்ததனைப் பெற்ற ஏற்றத்தால் ஓங்கி உலகளந்து நின்றான் எனவும், பலவகைகளிற் கருத்துக் கொள்ளலாம்.

உத்தமன் :

திருக்குறளனாகிய வாமனன் 'உத்தமன்' என இங்குப் புகழ்ந்தோதப் படுகின்றான். உலக மக்கள் அனைவரையும் தலை இடை கடை என மூவகையாகப் பகுக்கலாம். பிறரைத் துன்புறுத்தித் தன் வயிற்றை வளர்த்து வாழ நினைப்பவன் கடையாயவன் (அதமன்). பிறரும் வாழ நாமும் வாழ்வோம் என்று கருதியிருப்பவன் இடையாயவன் (மத்தியமன்.) தன்னை அழித்துக்கொண்டாயினும் பிறரை வாழ்விக்கும் தன்மையுடையவன் தலையாயவன் (உத்தமன்). பிறர் வாழ்தற் பொருட்டு, தான் இரப்பு என்னும் இளிவரவை மேற்கொண்டவன் ஆதலின், வாமனன் உத்தமன் ஆயினன். அன்றி உலக மக்களுக்குத் தான் ஒரு பேருதவி செய்தானாகக் கருதிக்கொள்ளாமல், இங்ஙனம் செய்ததனைத் தனக்கு ஒரு பேறாகக் கருதி மகிழ்ந்த இயல்பினன் ஆதலின், உத்தமன் எனப்பட்டனன் எனினுமாம்.

உத்தமன் பேர் :

'உத்தமனைப் பாடி' என்னாமல் 'உத்தமன் பேர் பாடி' என்றது, கருதி மகிழற் பாலது. உத்தமனைப் பாடுதலிலும், உத்தமன்பேர் பாடுதல் சிறப்பு என்பது கருத்து. இறைவனையும் பிறரையும் கருதுங்கால், பிறரைவிட இறைவன் எத்துணை மேம்பட்டவனோ, அத்துணையளவுக்கு இறைவனையும் அவன் பேராகிய திருநாமத்தையும் கருதலுறின், இறைவனையும் விட அவனது திருநாமம் மிக்க பெரும் சிறப்புடையதாகும். கட்டிப் பொன்போலே அவன்: பணிப் பொன்போலே அவனது திருநாமம். இறைவனை இல்லை என்று சொல்லி மறுப்பவர்களும்கூட, நோய் முதலிய இடர்ப்பாடுகள் நேர்ந்த வழி, இறைவனின் திருநாமம் ஓதினால் உய்தல்கூடும் என எவரேனும் பணிப்பின், அதனை விரும்பி மேற்கொண்டு கடைப்பிடிப்பர். தாய்க்கொலை புரியும் கொடியவனும், கைநொந்தால் அம்மே என்று தன்னை அறியாது சொல்லி நிற்பன். அதுபோன்று இறையுண்மை மறுப்பவரும், திருநாமம் சொல்லும் வாய்ப்பு நேரப் பெறுவர். இறைவனை அடைவதற்குப் பல வகைத் தகுதிகள் வேண்டும். ஆனால், திருநாமம் சொல்லுகைக்கு ஒரு தகுதியும் வேண்டுவதில்லை; எத்தகுதியும் இல்லார்க்கும் திருநாமம் ஓதுதலே எல்லாத் தகுதிகளையும் உண்டாக்கிக் கொடுக்கும். இறைவன் தூரத்தன் ஆனாலும்; அவனது திருப்பெயர் நமக்கு எளிதிற் கிட்டி நின்று உதவும்.

பேர்பாடி :

'பேர் சொல்லி' என்னாமல் 'பேர் பாடி' என்ற நுட்பமும் கருதுதற்குரியது. கருதியுணரவும் எட்டாத இறைவனின் குணநலங்களையெல்லாம், எளிதின் இனிதின் உணர்த்தும் திருப்பெயரை நாம் அன்புற்று விரும்பிச் சொல்ல வேண்டும் என்பதும், அங்ஙனம் சொல்லப்புக்க அளவில், அது தேனும் பாலுமாய்த் தித்தித்துத் தன்னை அறியாமலே இன்னிசை மிக்க பாட்டாக வெளிப்பட்டுப் பாடுவோர் கேட்போர் ஆகிய அனைவரையும் இன்புறுத்தும் என்பதும், இதனால் உணர்த்தப்படுகின்றது.

இங்ஙனம் மொழிக்கு மொழி தித்திப்பாக ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரும் சுவை நிறைந்து பெருக்கெடுக்கும் இத் திருப்பாவைச் செய்யுளின் நுண்பொருள் நலங்கள் பலவும், எண்ணி எண்ணி உணர்ந்து இன்புறுதற்குரி

யன. இப்பாடலில் மேலும் எத்தனையோ பல நுண்பொருள்கள் எண்ணியுணர்தற்குரியன வாக அமைந்திருக்கின்றன. தொட்டனைத் தூறும் மணற்கேணி போல, இப் பாடல் கற்ற னைத் தூறும் கருத்துப் பெருக்கம் மிக்குடைய தொன்ருகத் திகழ்கின்றது, இப்பாடல் முழுவ தும்ஞானசிரியரின்பெருமையைவிரித்துரைத்து உணர்த்துவதாகப் பெரியோர்கள் விளக்குவர்.

ஞானசிரியன் :

'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்பது, ஞானசிரியனைக் குறிக்கும். ஆசிரியர் இறை வனைக் காட்டிலும் மேம்பட்டவர். எனவே, ஓங்கி என்பது இறைவனைக் காட்டிலும் மேம்பட்டு என்றும், உலகளந்த என்பது உலகத் துப் பொருள்களின் இயல்புகளையெல்லாம் ஆராய்ந்தளந்து அறிந்த என்றும்; உத்தமன் என்பது தலை சிறந்தவன் என்றும் பொருள் படும். திருமாலாகிய எம்பெருமான், பல பிறவி கள் எடுத்தும் உலக மக்களைத் திருத்தமுடியா மல், 'மூடர்கள் என்னை அவமானப் படுத்து கின்ருர்கள்' (அவஜாநந்தி மாம் மூடா) என்று கீதையில் தானே வாய்விட்டுக் கூறிக் கண்ணீர் பெருக்கி வருந்தி நின்ருன். ஆனல், நம்மாழ்வார் இராமாநுசர் போன்ற ஞானச்சான்ருேர்கள் தோன்றி, உலகைப் பெரிதும் திருத்தியருளினர் கள். இதனல் இறைவனிலும் ஞானசிரியன் சிறந்தவனுதல் தெளிவு. இறைவன் 'என்னை வணங்கு, என்னைத் துதி' என்று சொல்லித் தன் பெருமையைப் பேசுவான். ஆனல், ஞானசிரி யனே "திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்மினே" என்று இறைவனின் பெருமையைப் பேசி நலம் புரிவான். அன்றியும் எம்பெருமானே இராமன் கண்ணன் எனத் தோன்றியருளிய பொழுது, முறையே வசிட்டர், சாந்தீபனி என்னும் ஆசிரியர்களை அடுத்துப் பணிந்து நின்ருன். மேலும் இறைவன் கொள் பவன்; ஆசிரியன் கொடுப்பவன். கொள்பவ னிலும், கொடுப்பவனே மேலானவன். இன்னே ரனைய பல காரணங்களாலும், ஆசிரியன் எம் பெருமானைவிடச் சிறந்தவனுவான். இத்தகைய உத்தம ஆசிரியர்களுடைய திருப்பெயர் ஓது தலே, நமக்கு எல்லா நலங்களையும் தரும் என்பது சான்ருேர்கள் கண்ட அநுபவம்.

குருபக்தி :

இதன்படி, இங்குப் பாவை என்பது ஆசிரி யனைப் போற்றுதலாகிய நோன்பைக் குறிக்கும். மதுரகவிகள் நம்மாழ்வாரையே போற்றி உய்ந் தார்! இராமாநுசரையும் கூரத்தாழ்வானையுமே குருவாகக் கொண்டு உய்ந்தார் திருவரங்கத்து அமுதனர்! இத்தகைய சிறந்த குருபக்தியே, "நம் பாவை" என இங்குக் குறிக்கப்பெற்றது. நீராடுதல் ஆவது, நல்ல ஆசிரிய மரபு நெறியில் ஈடுபட்டுப் பணிபுரிந்து ஒழுகுதல். இத்தகைய குருபக்தியினல், நாடெல்லாம் தீங்கின்றி நலம் பெருகும் என்பது திண்ணம். ஈண்டு மும்மாரி பெய்து என்பது, திருமந்திரம் உபதேசித்தல், தத்துவ சாத்திரங்கள் போதித்தல், சிந்திக்க வைத்துத் தெளிவுறுத்துதல் என்னும் குருவின் செயல்கள் மூன்றையும் குறிக்கும்.

செந்நெல்

"ஓங்கு பெரும் செந்நெல்" என்பது உயி ரைக் குறிக்கும். நெல்லானது உமியும் தவிடும் கூடியிருக்கும். அதுபோல, உயிரானது பருவுட லுடனும் நுண்ணுடலுடனும் கூடியிருக்கும். ஆதலின் சீவான்மாகிய உயிர், செந்நெல் எனப் பட்டது. செந்நெல் கதிர் முதிர்ந்தால், தாள் சாய்த்துத் தலை வணங்கும். அதுபோல, ஆசிரியன் அருளால் பக்குவம் மிக்க அடியார் களும் பணிவும் அடக்கமும் உடையவராய் ஒழுகுவர். கயல் என்பது கண்ணைக் குறிக்கும். ஓங்கு பெரும் செந்நெல் ஊடு கயல் உகளுதல் என்பது, பக்குவம் ஓங்கி வரும் அடியார் களின் மாட்டு, ஆசிரியன் திருக்கடைக் கண் நோக்கம் பாலித்தலைக் குறிக்கும். 'பூங்குவளைப் போது' என்பது திருமகளின் திருவருள் (இலட்சுமி கடாட்ச) நலனைக் காட்டுகின்றது. 'பொருவண்டு கண்படுப்ப' என்னும் தொடரில் வண்டுகள் என அடியார்கள் குறிக்கப் பெற்ற னர். வண்டுகள் தேனை உண்டு மகிழும். அது போல அடியவர்கள் திருவருளை நுகர்ந்து இன் புறுவர். வண்டுகள் குவளைப் போதில் கண் படுத்தல், அடியார்கள் கவலையின்றித் திரு வருள் துணையினல் இன்புற்று வாழ்தலைக் குறிக்கின்றது.

வள்ளற் பெரும் பசுக்கள்

'வள்ளற் பெரும் பசுக்கள்' என்பது ஞான சிரியர்களைக் குறிக்கின்றது. கைம்மாறு கருதா மல் ஞானப் பெருஞ் செல்வத்தை வாரி வழங்கு பவராதலின், ஆசிரியர்கள் வள்ளல் எனப்பட்ட னர். பசுக்கள் பதினன்கு உலகங்களையும் பற்பல தேவர்களையும் தம்முள் அடக்கிக் கொண்டிருக்கும். அதுபோல ஞானசிரியர்கள் பதினன்கு வித்தைகளையும் தம் உள்ளத்தில்

நிறைத்துக்கொண்டு, தெய்விக நலம் ஓங்கி யிருப்பர். பசுக்கள் ஆனைந்து எனப்படும் பஞ்ச கவ்வியங்களைத் தரும். அதுபோல ஆசிரியர்கள் அர்த்த பஞ்சகம் என்னும் அரும் பொருள்கள் ஐந்தும் உணர்த்துவர். பசுக்கள் தமது மடியில் நான்கு காம்புகளாலும் பால் சுரக்கும். அதுபோல, இம் மாணவர்களை உய்விப்பது நமக்கு இறைவனின் அருளாணை என்னும் உணர்வு; மாணவர்கள் வணங்கி விரும்பி வேண்டிக்கொள்ளுதல்; மாணவர்கள் கேளாவிடினும் அவர்களின் அறியாமை நோய் கண்டு பொறுக்க மாட்டாமை; தாமுணர்ந்த ஞானப் பொருள்களைப் பிறருக்குப் போதித்தன்றித் தரிக்கமாட்டாமை என்னும் நான்கு காரணங்களாலும், ஞானசிரியர்கள் தமது ஞானமாகிய பாலைச் சொரிவர். இங்குக் 'குடம்' என்றது, தகுதியுள்ள நல்ல மாணவர்களை! குடம் நிறைத்தலாவது, அம்மாணவர்களைத் தம்மோடு ஒப்ப ஞான அனுபவநல நிறைவுடையவர்களாகச் செய்தல். நீங்காத செல்வம் என்றது, ஆன்மிக ஞானத்தையும், அன்பின் மிகுதி ஆகிய பக்திப் பெருக்கத்தையும் ஆகும். அவையிற்றினும் மிக்க சிறந்த விழுமிய பெருஞ்செல்வம் பிறிது எதுவும் இல்லையன்றே!

முடிவுரை :

"திருக்குறள்" என்னும் வாமனவதாரம் பற்றிய குறிப்பு வரும் திருப்பாவைச் செய்யுள் ஆகிய "ஓங்கி யுலகளந்த உத்தமன்" எனத் தொடங்கும் பாடலின் பொருளை, இங்கு ஒரு சிறிது ஆராய்ந்து கண்டுணர்ந்தோம். இத்தகைய சிறந்த இனிய முப்பது பாடல்களைக் கொண்டது திருப்பாவை. ஆதலின், திருப்பாவை ஆகிய சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே, இங்கு இப் பரிசு உரைத்து (ஓதி), நாம் அனைவரும், ஈரிரண்டு மால்வரைத்தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று, இன்புற்று வாழ்வோமாக!

—ஆசிரியர்.

சென்னை ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் நிகழ்ந்த பாவைவிழாவில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், சென்னைத் துணை யாணையர், ஆணையரின் நேர்முக உதவி அலுவலர் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல் (9.1.72).

கவியோகி

செஞ்சொற்கொண்டல், புலவர்

திரு. சொ. சிங்காரவேலன், M.A., Dip. Ling.

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்

நம்பிகள் வாக்கு :

திருநாவுக்கரசர் பெருமான் சிறிந்த தமிழ்க் கவிஞர். அவ்வருளாளர் தமிழ்க் கவிதையைக் கையாண்ட திறம் பெரிதும் பாராட்டத்தக்க ஒன்றாக இன்றும் உள்ளது. சொற்களை ஆளுகின்ற நெறியில் தனி வன்மை படைத்தவர் அடிகள். பொருள்நலம் பொதுளிய பாடல்களைத் தமிழாரமாகச் சூட்டி இறைவன் திருவடிகட்கு ஆக்கிய தனித் தொண்டர் அவர். பழுத்த தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும் வாய்ந்த ஆளுடைய அரசரின் நெறி, தொண்டு நெறி. ஆனால் யோகநெறி, ஞான நெறியும் அவரது தொண்டுநெறியிற் குழைந்துள்ளன, ஆதலின் அடிகளை ஒரு நெறிக்கே உரிமையாக்குவதைவிடப் பொதுநிலையில் நான்கு நெறிகட்கும் உரியவராகக் கருதிக் குறிப்பாகத் தொண்டுநெறிக்கு மிக நெருங்கிய அண்மை உடையவராகச் சுட்டுதல் தக்கது ஆகும். ''கவியோகி'' என்ற தொடரால், நம்பியாண்டார் நம்பிகள், அடிகளாரைக் குறித்துள்ளார். அவ்வழகிய திருப்பாட்டு இது :

'' பதிகமேழ் எழுநூறு பகருமா கவியோகி
பரசு நாவரசான பரமகாரண வீசன்
அதிகைமா நகர்மேவி அருளினால் அமண்மூடர்
அவர்செய் வாதைகள்தீரும் அனகன்வார்
கழல்சூடின்
நிதியராகுவர்; சீர்மை உடையராகுவர்; வாய்மை
நெறியராகுவர்; பாவம் வெறியராகுவர்; சால
மதியராகுவர்; ஈசன் அடியராகுவர்; வானம்
உடையராகுவர்; பாரில் மனிதரானவர் தாமே''

' கைகண்ட யோகம் ' :

இது, திருநாவுக்கரசர் திருவேகாதசமாலையின் ஏழாவது திருப்பாட்டு ஆகும். இதன்கண் ''கவியோகி'' என்ற அழகிய தொடரால் அடிகளைக் குறிக்கின்றார் நம்பிகள். யோகநெறி தலைப்பட்ட திறம் உடையவர் அடிகள் என்பது நம்பிகளின் கருத்தாகலாம். திருநாவுக்கரசு அடிகளே தம்முடைய திருவாக்கில், ' தமக்குக் கைகண்ட யோகம் ' என்று குறிக்கும் இடம் ஒன்றும் இங்குக் கருதத்தக்கது. கொங்குத் தலத்துள் ஒன்றாகிய, திருப்பாண்டிக் கொடுமுடிக்குச் சென்ற அடிகளார் ஆங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கொடுமுடிநாதரைப் பண்மொழி நாயகியாருடன் பரவினார். அங்குப் பாடிப்பரவிய பைந்தமிழ்ப் பதிகத்தில், ஐந்து திருப்பாட்டுக்கள் மட்டுமே இப்போது கிடைத்துள்ளன. அவற்றுள் ஐந்தாவது திருப்பாட்டு பின்வருமாறு :

'' நெருக்கி யம்முடி நின்றிசை வானவர்
இருக்கொடும் பணிந் தேத்த இருந்தவன்
திருக்கொடும் முடி என்றலும் தீவினைக்
கருக்கெடும் இது கைகண்ட யோகமே '' (2)

' புகழ்பொருந்திய தேவர்கள் தம்மில் திரண்டு ஒன்றாய்க் கூடி, இருக்குவேத மந்திரங்களைக் கூறித் தொழ இருப்பவனின் கொடுமுடி என்று கூறும்பொழுதே தீவினையின் மூலம் கெடும்; இது கைவந்த யோக அநுபவம் ஆகும்' என்ற பொருளமைப்புடையது இத்திருப்பாட்டு. தம்முடைய அநுபவம் கூறும் பல இடங்களுள் ஒன்றாக அடிகள் இதனைத் தந்துள்ளார். சீலம் நோன்பு செறிவு அறிவு ஆகிய அனைத்துமாக இறைவன் உள்ள அநுபவம் அடிகளார் திருவாக்கில் ஆங்காங்குப் புலப்படக் காணலாம்.

அடிகளார் அநுபவம் :

'' ஞானம் அறிய வேண்டின்
நன்றென வாழலுற்றீர்
காலமும் கழியலான
கள்ளத்தை ஒழியகில்லீர்

கோலமும் வேண்டா ஆர்வச்
செற்றங்கள் குரோதம் நீக்கில்
சீலமும் நோன்பும் ஆவார்
திருச்செம் பொன் பள்ளியாரே ''

இச்சீலம், நோன்பு ஆகிய இரண்டையும் சரியை, கிரியை என்றும் கொள்ளலாம். ''சீல மின்றி நோன்பின்றி'' எனவரும் மணிவாசகர் திருப்பாட்டும் இவ்விடத்து நோக்கத்தக்கது.

யோகநெறி மான்பு :

உடம்பினை யோகத்தால் அருளுடம்பாக மாற்றும் இயல்பை யோகியர்பலரும் உரைப்பர். 'உடம்பென்ற அகலுக்குள், நெய்யும் திரியும் ஆக' இருப்பவர் இறைவர் என்ற பொருள்பட, ''உடலெனும் இடிஞ்சில் தன்னில் நெய்யமர் திரியும் ஆகி'' எனப்பாடுவர் அப்பர் அடிகள். 'மெய்யுளே விளக்கை ஏற்றி வேண்டளவுய ரத் தூண்டி, உய்வதோர் உபாயம்பற்றி உகக் கின்றேன்' என்றும் பாடுவர். 'மனிதப்பிறவி யும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்றும், 'வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடு மின்' என்றும் அடிகளார் பாடும் பகுதிகளைத் தொகுத்து நோக்கினுல், அடிகளார் பெற்ற யோகானுபவம் நமக்கு ஓரளவு புலன் ஆகும். அடிகளுடைய யோகப் பயிற்சியும், தொண்டின் சிறப்புமே அவருடைய நீண்ட வாழ்நாளின் அமைப்புக்குக் காரணம் என்று கூறலாம்.

நம் வினைக்கீடாக நாம் பெற்றுள்ள புலால் உடம்பை, இறைவனைப் பற்றிய தூய எண்ணங் களால், பொன்னுடம்பாக மாற்றலாம் என்ப தும், நெக்கு நெக்குருகும் யாக்கையாக அமைத் துக்கொள்ளலாம் என்பதும், அருளாளர்கள் தரும் அரிய குறிப்புகளினின்றும் நாம் அறியத் தக்க உண்மைகள் ஆகும்.

'' செம்பொன்பள்ளி யுளான் சிவலோகனை
நம் பொன்பள்ளி யுள்க வினைநாசமே''

என்ற திருப்பாட்டைக் கூர்ந்து நோக்கினுல், அடிகளார், 'பொன்பள்ளி' என்று குறிப்பது, உடலின் உயர்வையே என்று அறியலாம். பொன்னுடலாக ஆக்கினுல் அங்கே புகுந்து புத் தொளி வீசுவன் பெருமான் என்பது குறிப்பு.

'' உயிராவண மிருந்துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி ''

'' இமையாது யிராதிருந் தாய் போற்றி ''

'' என்னிலாரும் எனக்கினி யாரிலை
என்னிலும் சினியா ஞெருவன் னுளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே ''

'' தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில ஞடியின்
தன்னிற் றன்னையும் சார்தற் கரியனே ''

'' குணமாகக் கொள்ளோம் எண்குணத்
துளோமே''

போன்ற அடிகள் திருப்பாடற் பகுதிகளை யோக நிலையில் வைத்துச் சிந்தித்தால் அடிகள் பெற்ற யோக அனுபவங்கள் ஓரளவு புலனுவதுடன், ''கவியோகி'' என்று நம்பிகள் போற்றியது மெய்ம்மையே என்பதும் புலனுகும். அப்பர் தேவாரத் திருப்பாட்டுகளை யோக நூற் கல்வி யின் அடிப்படையில் நோக்குதல் பெரும் பயன் விளைப்பதாகும்.

பரமயோகியும், கவியோகியும் :

கவியோகியாராக விளங்கிய அடிகளார், சிவபிரானையே, 'மங்கையைக் கெழுவிய யோகினர்' என்று போற்றுவர்; 'பரமயோகி' என்றும் பரவுவர். ஏழு இடங்களில் இறைவனை இவ்வாறு யோகியாகப் போற்றும் இயல்பை, இவரது திருவாக்கிற் காண்கின்ருேம். (1) நிதி கள் பெருகலாம், (2) பெருமை உடையவர் ஆகலாம், (3) உண்மை நெறியில் செல்லலாம், (4) பாவங்கள் நீங்கலாம், (5) நிறைந்த மதி நுட்பம் உடையராகலாம், (6) இறைவனின் திருவடி சேரும் பேறு பெறலாம், (7) மேல் உலகம் எளிதிற் பெறலாம். உலக மாந்தர், இக்கவியோகியாரின் ஏழெழு நூறு பதிகங்களை ஓதினுல் இவ்வேழு பயன்களைப் பெறலாம் என் கின்ருர், நம்பிகள். 'பரமயோகி'யைப் பரவிய இக் 'கவியோகியின்' பாடல்களைக் கற் றுணர்தல் தமிழக மாந்தர் கடமை:

குமரகுருபர சுவாமிகளும், தில்லைச் சிவகாமி அம்மையும்

'முதுபெரும் புலவர்'
தவத்திரு. ப. வடிவேற் பிள்ளை அவர்கள், சிதம்பரம்.

முன்னுரை :

தமிழகத்தில் தோன்றி விளங்கியருளிய அருட்பெருஞ் சான்றோர்கள் பலருள், ஞானத் தவமுனிவராகிய குமரகுருபர சுவாமிகள் தலை சிறந்த ஒருவராவார். குமரகுருபர சுவாமிகள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 4ஆம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கியிருந்த திருவார் திரு. மாசிலாமணி தேசிகர் அவர்களை யடைந்து, தமக்கு ஞானோபதேசம் புரியவும், துறவு நிலை வழங்கவும் வேண்டிக் கொண்டனர். மாசிலாமணி தேசிகர், குமர குருபரரை நோக்கிக் "காசிக்குத் தலயாத்திரை சென்று வருக; வரின் பின்னர் யாம் ஞானோபதேசம் புரிந்து, துறவு நிலை வழங்குகின்றோம்" எனத் தமது ஆதீனமரபு நெறியின்படி திருவாய் மலர்ந்தருளினார்.

அதுகேட்ட குமரகுருபரர், மாசிலாமணி தேசிகரை மிகவும் அன்புடன் பணிந்து வணங்கி, "காசிக்குச் சென்று வருவதாயின் வாழ்நாளில் நெடுங்காலம் கழிந்து விடுமே" என்று, தம் கவலையைப் புலப்படுத்திக்கொண்டனர். குமரகுருபரரின் தீவிரதர பக்குவ நிலையைக் கண்டறிந்த மாசிலாமணி தேசிகர், மிகவும் மனம் இரங்கி, "அங்ஙனமாயின், சில காலம் சிதம்பர வாச மேனும் செய்து வருக" என்று பணித்தருளினர். அதன்படியே குமர குருபரர் சிதம்பரம் போந்து, சிலகாலம் தங்கித் தில்லை நடராசப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் நாள்தோறும் முறையே தரிசித்து மகிழ்ந்து வந்தார்.

அதனால் குமரகுருபர சுவாமிகளின் ஆன்மீக அருள் வாழ்க்கையில், சிதம்பரம் ஒரு பெரும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. குமரகுருபரர் தில்லை நடராசப் பெருமானிடத்தும், சிவகாமி அம்மையினிடத்தும், எல்லையில்லாத பெரும் பக்திமை பூண்டு வழிபட்டு மகிழ்ந்தார். அதன் பயனாகச் சிதம்பரமும் மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, என்னும் சிறந்த மூன்று செந்தமிழ்க் கவிதை நூல்கள் குமரகுருபரரால் அருளிச் செய்யப் பெற்றன. இணையற்ற எழிலும் இனிமையும் மிக்க இம் மூன்று சிறந்த கவிதை நூல்களாலும், குமரகுருபர சுவாமிகள், சிதம்பரம் என வழங்கும் தில்லைத் தலத்திலும், அங்கு எழுந்தருளி விளங்கும் நடராசப் பெருமானிடத்திலும் சிவகாமி அம்மையினிடத்திலும் கொண்டிருந்த எல்லையற்ற பேரன்பின் பெற்றிமை தெற்றெனச் செவ்விதின் விளங்கும்.

"தீர்த்தம் என்பது சிவகங் கையே
ஏத்தரும் தலம்எழிற் புலி யூரே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே"

என்று, குமரகுருபர சுவாமிகள் சிதம்பரத்தின் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகைப் பெருமைகளையும் போற்றியிருத்தல் காணலாம்.

தில்லைமன்று :

"இளமையானது நீரில் தோன்றும் குமிழி போன்று நிலையில்லாதது; செல்வமானது

கடலில் தோன்றும் அலைகளைப்போல மாறி மாறிப் பிறழ்ந்து சென்று அழிந்தொழிவது; உடம்போ நீரின்மேல் எழுதப்படும் எழுத்துப் போல ஒரு நொடிப் பொழுதில் மாய்ந்து மறையும் இயல்பினது. ஆதலால் இவற்றையெல்லாம் நிலையென்று எண்ணி மயங்காமல், எம்பெருமான் திருநடம் புரிந்தருளும் தில்லையம்பலத்தை இப்பொழுதே தொழுது உய்தி பெறுங்கள்'' என இவ்வுலக மக்களுக்கெல்லாம் அறிவுறுத்தியருளும் குமரகுருபரர், சிவகாமி அம்மையின் சிறப்பினையும் திருவருளையும் இம் மூன்று நூல்களிலும் மிகவும் எழிலமையப் புகழ்ந்து போற்றித் துதித்து மகிழ்கின்றார். அவற்றுள் ஒரு சில பாடல்களின் கருத்துக்களை மட்டும் இங்குச் சுருக்கமாகக் கண்டு மகிழ்வோம்.

அன்னையின் அருள் :

(1) தில்லையில் சிவபெருமான் ஐந்தொழில் புரியும் திருக்கூத்து இயற்றுகின்றான். அவனது தமருகம் (உடுக்கை) ஏந்திய கரம், எல்லா உலகங்களையும் படைக்கின்றது. அமைத்த பொற்கரம் (அஞ்சேல் என அருளும் திருக்கை), உலகங்களையெல்லாம் காப்பாற்றுகின்றது. அழல் ஏந்தியுள்ள கரம், உலகங்களை யெல்லாம் ஒடுக்கி, உயிர்களை இளைப்பாறச் செய்கின்றது. அவனது ஊன்றிய திருவடி, உயிர்கள் ஈட்டிய வினைப் பயன்களை எல்லாம் மறைத்து நின்று நுகரும்படி செய்து ஊட்டுவிக்கின்றது. எடுத்த திருவடியாகிய குஞ்சிதபாதம் உயிர்களுக்கெல்லாம் பேரின்பமாகிய வீடுபேற்றை வழங்கியருள்கின்றது. இங்ஙனம் ஐந்தொழில் புரியும் நடராசப் பெருமானின் அற்புதத் திருக்கூத்தினை, சிவகாமி அம்மை தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் நுகரும்படி செய்தருள்கின்றாள். அஃது எதுபோலஎனின், குழந்தையின் குடர் மருந்தைச் செரிக்குந்திறனற்றது என்று ஒருதாய் தானே அம்மருந்தை உண்டு அதன் பயனைத் தனது பாலின் வழியாக அக் குழந்தைக்குச் சேரும்படி செய்வது போன்றதாகும் என்று, சிவகாமி அம்மையின் பேரருட்டிறனைக் குமரகுருபர சுவாமிகள் போற்றித் துதித்து மகிழ்கின்றார்.

"பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள்
கிடைப்ப
வையம்ஈன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தன்...''

கரும்பும் பிடியும் :

(2) உலகில் நடனம் புரிவார் பலர் உண்டு. அவர்களுக்கெல்லாம், தம்மை ஆட்டுவிக்கின்ற நட்டுவனார் என்பவர் ஒருவர் இருப்பார். ஒருவர் தம்மை ஆட்டுவிக்கவே, உலகில் பலர் நடனமாடுவர். ஆனால் தம்மை ஆட்டுவிப்பார் எவரும் இல்லாமல், தாமே ஆடி, ஏனைய எல்லோரையும் ஆட்டுவிக்கின்றவராகத் திகழ்பவர், தில்லையம்பலவாணர். அவர், தில்லையம்பலத்தில் ஆனந்தத் தேன் காட்டுகின்ற ஓர் அரிய முக்கட் கரும்பாகத் திகழ்கின்றார். அம் முக்கட் கரும்பினை விரும்பிப் பொருந்தி நெடு நாளாக, விநாயகர் என்னும் யானையாகிய எழில் இளங்கன்றைப் பயந்த, சிவகாமியம்மை என்னும் பெண்யானை உண்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றது.

" ஆட்டுகின்றோர் இன்றிமன்றுள் ஆடும் ஆ
னந்தத்தேன்
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று—
வேட்டதனை
உற்றுநெடு நாளாக உண்ணும், ஓர் மால் யானை
பெற்றதொரு கூந்தற் பிடி''

எனவரும் சிதம்பர மும்மணிக்கோவைப் பாடலில் குமரகுருபரர் கூத்தப்பெருமானை 'ஆனந்தத்தேன் காட்டுகின்ற முக்கட் கரும்பு ஒன்று'' என்றும், விநாயகரை 'மால்யானை' என்றும், சிவகாமி அம்மையை 'மால் யானை பெற்றதொரு கூந்தற்பிடி' (பெண்யானை) என்றும், யானை கரும்பை விரும்பி உண்ணுதல் இயல்பாதலின்'வேட்டு (விரும்பித் திருமணம் செய்து கொண்டு) உற்று நெடுநாளாக உண்ணும்' என்றும் கூறியுள்ள பொருத்தமும் நுட்பமும் பெரிதும் போற்றற்பாலன.

திங்களும் மானும் :

(3) சிவகாமி அம்மையின் கண்கள் மிகவும் அழகு வாய்ந்தவை, அருள்பெருகி வெள்ளமிடும் ஊற்றுத் தடம் போன்றவை; அன்பர்களுக்கு எல்லா நலங்களும் தருபவை. ஆதலின், சிவகாமி அம்மையின் அருட் கண்களின் அழகில், குமரகுருபரர் பெரிதும் ஈடுபடு

கின்றார். அவற்றின் அழகினைப் பின்வருமாறு புகழ்ந்து போற்றுகின்றார். 'சிவபெருமான் தனது சடைமுடியில் திங்களும் பாம்பும் அணிந்துள்ளான். பாம்பைக்கண்டு அஞ்சுதல் திங்களுக்கு இயல்பாயினும், சிவபெருமானின் சடைமுடியிலுள்ள காரணத்தால் திங்கள் பாம்பைக்கண்டு அஞ்சவில்லை. எனினும் அதற்கு அச்சம் நிகழாமல் போகவும் இல்லை. ஓர் அச்சம் தீர்ந்தாலும் திங்களுக்கு வேறோர் அச்சம் நேருகின்றது. சிவபெருமானின் அருகே சிவகாமியம்மை வீற்றிருக்கின்றாள். அம்மையின் நறுதல் (நெற்றி) மிகவும் அழகு வாய்ந்து, குறுகியதாய் வளைந்ததாய் விளங்குகின்றது. அம்பிகையின் அத்தகைய நெற்றியின் அழகைக் கண்டதும் அவ்வழகும் சிறப்பும் தனக்கு இல்லையே என்று கவன்று திங்கள் நாணமுற்று அஞ்சுகின்றது.

இத்திங்களைப் போலவே சிவபெருமான் ஏந்தியுள்ள மானும் நாணி அஞ்சி நிற்கின்றது. மான் புலியைக்கண்டு அஞ்சுதல் இயல்பு. சிவபெருமான் தனது கையில் ஏந்தியுள்ள மான், வியாக்கிரபாதராகிய புலிக்குச் சிறிதும் அஞ்சவில்லை. ஆனால் சிவபெருமானுக்கு அருகில் இருக்கும் சிவகாமி அம்மையின் விழிகளாகிய மானைக்கண்டு அவற்றின் சிறப்பும் அழகும் தனக்கில்லையே என்று அஃது அச்சம் கொள்கின்றது. அங்ஙனம் மானும் அஞ்சும் மாண்புடையதாகச் சிவகாமி அம்மையின் அழகிய திருக்கண்கள் சிறப்புற அமைந்து திகழ்கின்றன என்கின்றார் குமரகுருபரர்.

கறையரவுக் கஞ்சுரு தஞ்சுறூஉம் திங்கள்
இறைவி நறுநுதலைக் கண்டு-பிறை முடியோன்
கைம்மான் நடமுவந்த காற்புலிக்கஞ் சாதஞ்சும்
அம்மான் விழிமானைக் கண்டு.

(4) பொன்னம்பலமானது பொற்றாமரை போன்றுள்ளது. அதன்கண் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானின் திருவுருவம் தேனாகத் திகழ்கின்றது. அத்தேனை உண்டு மகிழ்கின்ற களி வண்டுகளைப்போல எம்பெருமாட்டியாகிய சிவகாமி அம்மையின் திருவிழிகள் திகழ்கின்றன.

(5) பொன்னம்பலமாகிய புனித மன்றத்தில் குற்றமற்ற ஐந்தொழில் நாடகம் புரிகின்ற நடராசப் பெருமானுக்கு எம் அன்னையாகிய சிவகாமி அம்மை ஒருத்தியே மனைவி-தாய் தங்கை-மகள் என்னும் பல நிலைகளில் திகழ்கின்றாள்.

" கனகமார் கவின்செய் மன்றில்
அனக நாடகற்கு எம் அன்னை
மனைவிதாய் தங்கை மகள் "

'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' என்றபடி அம்பிகை இறைவனின் செயலுக்கும் இயலுக்கும் ஏற்பத்துணை நிற்பவள் ஆதலின் மனைவி என்றும், சத்தி தத்துவத்தினின்று சதாசிவ தத்துவம் தோன்றுதலில் தாய் என்றும், சிவதத்துவம் தோன்றியபின்னரே சத்தி தத்துவம் தோன்றுதலின் தங்கை என்றும், சிவமே தன்னினின்று சத்தியைத் தோற்றுவித்தலின் மகள் என்றும், குமரகுருபரர் அம்பிகையை விதந்து வியந்து குறிப்பிட்டருளினார். இங்ஙனம் ஒருவரே பலவேடமும் நிலையும் கொள்ளுதல் நாடகங்களில் நடிகருக்கே இயல்பாதலாலும், இறைவன் இயற்றும் இந்நாடகம் ஏனைய உலகியல் நாடகங்களைப் போல இழிந்ததன்றி உயர்ந்ததாகலாலும், நடராசப் பெருமானை "அனக நாடகன்" என்று குமரகுருபரர் சிறப்பித்த அருமைப்பாடு அறிந்து மகிழற்பாலது.

(6) சிவபெருமான் ஆலாலம் என்னும் விடத்தை உணவாகக் கொண்டான். நச்சரவைக் கச்சாக அணிந்தான் என்று வேதங்கள் புகழ்ந்தோதுகின்றன. ஆயினும் அங்ஙனம் வேதங்கள் சிவபெருமானைப் புகழ்வது பயனிலதேயாகும். ஏனெனில் அச்செயல்களையெல்லாம் சிவபெருமான் தன்னுடைய ஆற்றலால் புரிந்தனன் என்பதற்கில்லை. தில்லைவனமாகிய காட்டில், சிவகாமி அம்மையாகிய மயில், தனக்கு அருகாக இருக்கும் திறத்தினாலேயே சிவபெருமான் அங்ஙனம் செய்ய முடிந்தது. மயில் பாம்பின் விடங்களை யெல்லாம் மாய்க்கவல்லது ஆதலின் சிவகாமி அம்மையாகிய மயில் தனக்கு அருகே நிற்கப் பெற்றிருக்கும் சிறப்பினாலேயே சிவபெருமான் நச்சரவைக் கச்சாக அணியவும், நஞ்சை உணவாகக் கொள்ளவும் முடிந்த்து என்பது கருத்து.

கறைகொண்டு நச்சரவக் கச்சணிந்தார் என்று
மறைகொண்டு வாழ்த்துவதும் வம்பே-இறை

கொண்

டயிலிருக்கும் முத்தலைவேல் அண்ணலுக்கென்
னேயோர்

மயிலிருக்கத் தில்லை வனத்து.

(7) சிவகாமி அம்மை மயிலாக மட்டுமே விளங்குகின்றிலள். அவள் அன்னமாகவும் அமைந்து திகழுகின்ருள். 'பொன்னம்பலத்தில் ஆனந்தப்பெருக்கு என்னும் கடலில் புகுந்து திளைத்து ஆடுகின்ற சிவகாமி அம்மையாகிய அன்னம் பல்லாயிரக் கணக்கான அண்டங்களை (உலகங்களை, முட்டைகளை) ஈன்று, சரமும் அசரமுமாகிய இளங் குஞ்சுகளைப் பயந்து, அழகிய வளையல்கள் செறிந்த தனது கைகளாகிய இரண்டு சிறகுகளால் தழுவி அணைத்து, தன் வயிற்றினுள்ளே வைத்து அவைகளுக் கெல்லாம் இரை தேடி ஊட்டி, மிகவும் அன்புடன் பாதுகாத்து வருகின்றது என்று, குமரகுருபரர் சிவகாமி அம்மை ஆகிய உலகன்னை இவ்வுலகுயிர்களை யெல்லாம் செவ்விதின் போற்றிப் பாதுகாத்துவரும் திறணைப் புகழ்ந்து பாடியருள் கின்ருர்.

வன்னஞ் செறிவளைக் கைச்சிறகால்
தன் வயிற்றினுள் வைத்து

இன்னம் சராசர ஈர்ங்குஞ்சு
அணைத்திரை தேர்ந்தருந்திப்

பொன்னம் பலத்துள்ஓர் ஆனந்த
வாரிபுக் காடும் பச்சை

அன்னம் பயந்தன கொல்லாம்
பல்லாயிர அண்டமுமே

முடிவுரை :

இங்ஙனமெல்லாம் குமரகுருபரர் பல்வேறு வகைகளில் போற்றிப் புகழ்ந்து பாடித் துதிக்கும் சிவகாமி அம்மையின் திருவடிகளை, நாம் அனைவரும் தில்லையில் திருக்குடமுழுக்கு விழா நிகழும் இப்புனிதநாளில், அன்புடன் போற்றி வணங்கி வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயலுவோமாக !



திருச்செந்தூர் வட்டம், உடன்குடி திரு. உலகமுத்தாரம்மன் கோயில் திருப்பணித் துவக்க விழாவில் மாண்புமிகு அறநிலைய அமைச்சர், அறநிலைய ஆணையர், மற்றும் திரு. கே. பி. கந்தசாமி. M.A., M.L.A., திரு. எஸ். முருகன், திரு. எஸ். துரைராசபிள்ளை, திரு. டாக்டர் எஸ். சி. தாணுப்பிள்ளை முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

மதிப்புரைகள்

1. கந்தர் சஷ்டி கவசம்

(மூலமும் உரையும்)

முருகன் அடியார்களின் பாராயண நூல்களுள் ஒன்றுகச் சிறந்து விளங்குவதும், அருட்டிரு பாம்பன் அடிகளார் அவர்கள் தமது இளமைக் காலத்தில் நாள்தோறும் முப்பத்தாறு முறை நியமமாக ஓதித் திருவருள் பெறுவதற்கு வாய்ப்பாகத் திகழ்ந்ததும் ஆகிய இந்தச் சிறந்த நூலுக்குத் திரு வித்துவான் ச. ரா. கச்சபேசுவரன் M. A. அவர்கள், எளிய இனிய சிறந்த உரைஎழுதிப் பதிப்பித்திருக்கின்ருர்கள். பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும் நல்லநூல். திருத்தமான பதிப்பு. விலை 75 காசு. கிடைக்குமிடம்: 'முருகன் அருள்', சீநிவாச நகர், சென்னை-63

2. திரு. சுப்பிரமணிய சிவப்பிரகாசக்காஞ்சி

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம், திருவண்ணுமலைப் பெரிய மடத்தைச் சார்ந்த துறையூர் திரு. ஆதிசிவப்பிரகாசர், விரசைவ ஆதீனம் 22ஆம் சிம்மாசனுதிபதியாய் விளங்கிய குருமகா சந்நிதானம் திருவார் திரு. சுப்பிரமணிய சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள், விரோதிகிருது ஆண்டு, மார்கழித் திங்கள் திருவாதிரைத் திருநாள் (1-1-72) அன்று சுத்த சாதக சிவசாயுச்சியம் அடைந்ததனை முன்னிட்டு, இரங்கல் போற்றியும், குமாரதேவர் அருளிய சகச நிட்டைச் சாத்திரமும் சேர்த்து வெளியிடப் பெற்றுள்ளது. சைவப் பெரியார் இராவ்சாகிப் திரு. நல் முருகேசமுதலியார், B.A. அவர்கள், இந்நூலை அச்சிட்டுத் தமது குருகாணிக்கையாக 11ஆம் நாள் குருபூசை விழாநாளில் வழங்கியுள்ளார்கள். சுவாமிகளின் திருவுருவப் படமும் இதன் கண் சேர்க்கப்பெற்றுள்ளது. கிடைக்குமிடம்: திரு. குமாரதேவர் மடம், திருமுதுகுன்றம் (விருத்தாசலம்).

3. பதுமினி பரிணயம்

இந்நூல் திருக்கண்ணபுரத்தில் கோயில் கொண்டுள்ள திரு சவுரிராசப் பெருமாளின் பிராட்டியார் நால்வருள் ஒருவராகிய பதுமினிப் பிராட்டியாரது திருமணத்தை எட்டுச் சருக்கங்களால் விளக்குகின்ற சிறந்த கவிதை நூலாகும். தமது தந்தையார் திரு உ. வே. டி. எஸ். சீநிவாச ஐயங்கார் சுவாமிகள் அவர்கள், வடமொழியில் இயற்றிய காப்பியத்தின் தமிழாக்கமாகச் சென்னைத் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளியின் முன்னுள் தலைமையாசிரியர் திரு. டி. எஸ். இராசகோபாலன் B.A., L.T., அவர்கள் இதனைச் சிறந்த முறையில் இயற்றியுள்ளார்கள். ஆசிரியரின் அரிய பன்மொழிப்புலமையும், ஆழ்ந்த பக்தியுணர்வும், சிறந்த கவிதைத் திறனும் பெரிதும் வியக்கத்தக்கன. சிறந்த நல்ல சமய இலக்கிய நூல்! விலை ரூ. 3-50. கிடைக்குமிடம்: திரு. டி. எஸ். இராசகோபாலன், B.A., L.T., 12. தெளிசிங்கப்பெருமாள் கோயில் சந்து, திருவல்லிக்கேணி, சென்னை-5.

4. அருட் குரல்

இஃது ஒரு சிறந்த, இந்து சமய ஆராய்ச்சித் திங்கள் இதழ். இதன் ஆசிரியர் டாக்டர் திரு. காசீ. திருவாழ் மார்பன். உலகன்னையாகிய திரு. புவனேசுவரி அம்மையைப் பற்றிய பல பாடல்களும் கட்டுரைகளும் கொண்டிருப்பதுடன், பொதுவாக இந்து சமயத்தைப் பற்றியும், பக்தர்களுக்குப் பயன்படும் பலவகைச் செய்திகளைப் பற்றியும், அரிய பல குறிப்புக்கள் இதன்கண் இடம் பெற்றிருக்கின்றன. சென்னை இலிங்கிச் செட்டித் தெருவின்கண் அமைந்துள்ள, ஜெயதுர்க்கா பீடத்தின் சார்பில், இது வெளிவருகின்றது. தனி இதழ் விலை 25 காசு.

5. பேராசிரியன்

கோவைக் கலைமகள் தமிழ்க் கல்லூரியின் மாத வெளியீடு. இதன் ஆசிரியர் திரு. புலவர் "வான்மதி" இராமன் அவர்கள். எட்டுப் பக்க அளவில், பல புலவர்களின் எழுத்தோவியங்களுடனும், பல கவிஞர்களின் கவிதைகளுடனும், வெளிவருவது. நல்ல தமிழ் ஆர்வமும், முற்போக்குக் கொள்கைகளும் கொண்டதாக இவ்விதழ் விளங்குகின்றது. தனி இதழ் விலை 20 காசு. கிடைக்குமிடம்: 'கலைமகள் தமிழ்க் கல்லூரி, சாயிபாபா காலனி, கோவை-11.'

—ஆசிரியர்.

திருவல்லிக்கேணி திரு. எல்லையம்மன் என்னும் திரு. ரேணுகா பரமேசுவரி ஆலயத் திருப்பணிக்கு உதவியாணையர் திரு. என். சுவாமிநாதன், B.A., B.L., அவர்கள் தலைமையில், திருமதி, சௌந்தரம் கைலாசம் அம்மையார் அவர்கள் கால்கோள் நிகழ்த்தித் தொடக்கி வைத்தார்கள். (3—1—72).

திருமால் வணக்கம்

(108) போற்றி

'தமிழ்க் கடல்' திரு. ராய. சொ. அவர்கள், காரைக்குடி.

அரங்கம் பள்ளிகொள் அரியே போற்றி!
ஆழ்வார் அமுதம் அருந்தினை போற்றி!
இளையவர் ஏத்தும் இராம! போற்றி!
ஈரடி மாருதிக்கு ஈந்தனை போற்றி!
உடையவர் போற்றிய ஒருவ போற்றி!
ஊழி முதல்வ! நின் ஒண்கழல் போற்றி!
எட்டெழுத் தாக இலங்குவாய் போற்றி!
ஏனமாய்ப் பாரை இடந்தாய் போற்றி!
ஐந்தலைப் பாம்பினில் ஆடினாய் போற்றி!
ஒருசிறு குறளாய் உதித்தாய் போற்றி!
ஓங்கி உலகம் அளந்தாய் போற்றி!
ஔடதம் அகப்பிணிக்கு ஆவாய் போற்றி!
அஃகி அகன்ற அறிவே போற்றி!
கல்லுக்கு உயிர்தரும் காகுத்த போற்றி!
"ங"ப்போல் அவனியை நயப்போய் போற்றி!
சட்டெனக் கல்மழை தடுத்தாய் போற்றி!
ஞயம்சேர் மொழியருள் நம்ப போற்றி!
மடம்செறி கஞ்சனை மாய்த்தாய் போற்றி!
வணங்கான் முடிவிழ வகுத்தாய் போற்றி!
தடவரை மார்பனைத் தடிந்தாய் போற்றி!
நரனொடு சிங்கமாய் நண்ணினை போற்றி!
பரசு ராமனாம் பண்ணவ போற்றி!
மழிசைப் பிரான்தமிழ் மாந்தினை போற்றி!
உயர்வற உயர்நலம் உடையவ போற்றி!
அரவர சில்துயில் அப்பா போற்றி!
பலரா மப்பெயர் படைத்தாய் போற்றி!
வருபரி யாகும் மாதவ போற்றி!
மழவிடை அடர்த்த மைந்தா போற்றி!
ஆளவந் தார்க்கருள் அமர போற்றி!
பிறவிவேர் அறுக்கும் பெருமான் போற்றி!
மீனமாய் வந்த விண்ணவ போற்றி!
கமடமாய்த் தாங்கிய கார்வண போற்றி!
கான்கடல் கடந்த கருணையே போற்றி!
கிராதனைத் தோழனாக் கிளத்தினை போற்றி!
கீதை புகன்றருள் கிருட்டின போற்றி!
குலசே கரப்பிரான் குழைதமிழ் போற்றி!
கூடார் தமைவெல்லும் கோவிந்தா போற்றி!
கெழுதகை நிலமகள் கேள்வா போற்றி!
கேசவ! இருடி கேசா! போற்றி!
கைதவர் காணாக் கார்முகில் போற்றி!
கொண்டல் நிறத்துக் குரிசில் போற்றி!
கோதண்டம் கொண்ட கொண்டலே போற்றி!
சங்கு சக்கரம் தாங்கினாய் போற்றி!
சார்ங்கம் கதைவாள் தரித்தாய் போற்றி!
சிவனை வலத்தினில் சேர்த்தாய் போற்றி!
சீதையை மணந்த சீதர போற்றி!
சுக்கிரீ வற்கருள் தோன்றால் போற்றி!
சூடிக் கொடுத்தவள் துணைவா போற்றி!
செந்தமிழ்ப் பாக்கடல் திளைப்பாய் போற்றி!
சேய்பிர கலாதன் செய்தவ போற்றி!
சையமால் வரையில்நில் தலைவா போற்றி!
சொற்பதம் கடந்த தூமணி போற்றி!
சோர்விலாத் தொல்பதம் தருவாய் போற்றி!
ஞாலம் போற்றும் நல்லடி போற்றி!
ஞிமிறுழு துளவணி நெடுமால் போற்றி!
ஞேயர்தம் நெஞ்சில் நின்றாய் போற்றி!
தயரதன் செய்தமா தவமே போற்றி!
தாமோ தர! மது சூதன போற்றி!
திருவாழ் மார்புறு செல்வா போற்றி!
தீவினை செறுதிரி விக்ரம போற்றி!
துரோபதை சோர்வு துடைத்தாய் போற்றி!
தூது நடந்தருள் தொல்லடி போற்றி!
தெரிவை தேவகி சிறுவா போற்றி!
தேசிகர் கவிநுகர் செவியாய் போற்றி!
தையல் யசோதை தனையா போற்றி!
தொண்டர் அடித்திருத் தொங்கலாய் போற்றி!
தோகை உருக்மிணி தோழா போற்றி!
நம்மாழ் வார்மொழி நயந்தனை போற்றி!
நாரா யண! நின் நற்பதம் போற்றி !
நின்றாய் இருந்தாய்! கிடந்தாய் போற்றி!

நீரிடைத் துயில்கொள் நெடியோய் போற்றி!
நுண்இடைப் பாமைதோள் நோக்கினுய் போற்றி!
நூற்றுவர் ஆற்றலை மாற்றினுய் போற்றி!
நென்னலாய் இன்ருய் நாளையாய் போற்றி!
நேயர்தம் நெஞ்சம் நிறைந்தாய் போற்றி!
நையார் மனத்தையும் நைவிப்பாய் போற்றி!
நொடியும் மறக்கிலா நோன்தாள் போற்றி!
நோயில் வாழ்வுஅருள் நுண்ணியாய் போற்றி!
பத்மநா பா!பரந் தாமா! போற்றி!
பாணுழ் வாரைஆட் படுத்தினை போற்றி!
பிரமனை உந்தியில் பெற்ருய் போற்றி!
பீதக ஆடைப் பெம்மான் போற்றி!
புள்ளரசு ஊரும் புண்ணிய போற்றி!
பூதத் தார்பாப் போற்றினை போற்றி!
பெரியாழ் வார்தமிழ் பேணினை போற்றி!
பேயார் பாசுரப் பேழையே போற்றி!
பைந்தமிழ்ப் பின்செல் பரமனே போற்றி!
பொய்கையார் போற்றிய புனிதா போற்றி!
போதம் கடந்தநற் பொருளே போற்றி!

மங்கைமன் னன்பா மகிழ்ந்தனை போற்றி!
மாயவ! வைகுந்த! வாமன! போற்றி!
மின்னிகர் பின்னையை வேட்டாய் போற்றி!
மீனக் கொடியனை ஈன்ருய் போற்றி!
முனிமண வாளர்சொல் முதல்வா போற்றி!
மூஉலகு ஆளும் முன்னேய் போற்றி!
மெல்லியல் இராதையை மேவினுய் போற்றி!
மேல்மது ரக்கவி விழைவாய் போற்றி!
மையே மழைமுகில் வடிவே போற்றி!
மொழிதமிழ்க் கடலுள் முழுகினுய் போற்றி!
மோகனப் பாற்கடல் முகிழ்த்தாய் போற்றி!
யானைக்கு அருளிய வானவ போற்றி!
வள்ளல் தமக்கெல்லாம் வள்ளால் போற்றி!
வாலிக்கு வீடு வழங்கினை போற்றி!
விட்டுணு எனப்பேர் விளங்கினை போற்றி!
வீடணற்கு அடைக்கலம் விளம்பினை போற்றி!
வெண்ணெய் உண்டசெவ் வாயனே போற்றி!
வேய்ங்குழல் இசைத்த வித்தக போற்றி!
வையகம் உண்டவா போற்றி போற்றி!



சென்னை ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் நிகழ்ந்த பாவை விழாவில் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம், சென்னைத் துணையாணையர், ஆணையரின் நேர்முக உதவி அலுவலர் முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.
(9. 1. 72.)

அப்பர் வரலாற்றில் அறம்

தவத்திரு. சுந்தர சுவாமிகள் அவர்கள், தலைவர், கௌமார மடாலயம், கோவை-6.

திருஆமூர் திருவாமூர் புகழனுர்
புகழனுர் செய்ய கற்பு
மருவுவகை மாதினியார்? எனச்சொல்லும்
மாதினியார் வாழ்க்கைப் பண்பில்
உருவான சைவநெறித் திலகவதித்
திலகவதி உதித்த பின்பு
வருவாரெம் மருள்நீக்கும் அருள்நோக்கும்
மருணீக்கி வள்ளலார்தாம். (1)

சுருள்நீக்கி உள்ளத்தே மலர்ச்செய்
கலைபயின்று சுகமார் ஈசன்
தெருள்நோக்கும் தாய்தந்தை மறைதலினுல்
அறச்செயலில் தெளிவுற்றுலும்
மருள்நீக்கியார் சமண நெறிசென்று
சிவனருளால் வாய்த்த சூலை
இருள்நீக்கத் திருவதிகை வீரட்டா
னத்தலத்தின் இடையுற்றுரே! (2)

சைவநெறித் திலகமெனச் சார்திலக
வதியார்பால் சார்ந்து, தந்த
உய்வகையார் திருவாளன் திருநீறைந்
தெழுத்தேற்றுர் உவப்பி னேடு
மெய்வகையில் கூற்றுயிற் றெனப்பதிகம்
பாடுதலும் விண்ணின் ஓசை
எய்தியது திருநாவுக் கரசென்னச்
சிவன்பாடல் ஏற்ற லாலே! (3)

சமணரொடு பல்லவனும் செய்தபெரும்
சூழ்ச்சியெலாம் தாங்குவான்எம்
உமையின் மணவாளனென எப்பொருள்எத்
தன்மையினுல் உற்றபோதும்
அமையும் மெய்ப் பொருளெனல்தேர்ந்
தருளார்ந்த நெறிவழியே அமைந்தபோது
அமைஅடியார் புடைசூழத் திருத்தொண்டின்
உழவாரம் தாங்கினுரே! (4)

திருநாவுக் கரசரது தவவேடம்
தணிக்காழி சிறக்கவந்த
பெருஞானப் பிள்ளையார் கையதனுல்
மிகவணங்கப் பெற்றபோது,
வருவாய்மை வாகீசர் மெய்யதனுல்
வணங்குதலும் மன்னும் தந்தைப்
பெருமுறையில் அப்பர்எனச் சம்பந்தர்
மொழிவணக்கம் பேசினுரே! (5)

பலவகையாம் அநுபவத்தால் அருள்நெறிகொள்
அப்பர்பிரான் பாடும்போது
நலமுறையில் உளமுருக்கும் அன்புநெறி
யின்சீர்த்தி நன்கு காண்போம்
வலஅறத்தின் நெறிதன்னை ஆங்காங்கே
பாடல்களில் வகுத்தல் காண்போம்
சொலும்இன்ப நெறிஅறிவு நெறிதன்னை
ஆங்காங்கே சொல்லல் கண்டோம். (6)

(வேறு)

காவளர்த்தும் குளந்தொட்டும் கவினும்தம்பால்
கருதிவரு பவர்க்களித்தும் கடப்பா டாக
மேவும்அற நெறிவழியே தமக்கையொடு
மேலான அறங்களெலாம் விளங்கச்செய்து
பாவலர்க்கும் நாவலர்க்கும் விருந்தினர்க்கும்
பரிவுடனே மிகக்கொடுத்த பண்பால்
அப்பர்
யாவருக்கும் உரித்தான அறப்பண் பாட்டை
ஈகைவினைத் துறைமுறையில்
இசைத்திட்டாரே! (7)

அத்தகைய அப்பர்செயும் அறத்தைக் கேட்டே
அப்பூதி அடிகளார் அமைத்த தான
வித்தகத்தண் ணீர்ப்பந்தல் நடக்கும்சாலை
விளங்குகுளம் கா,அமைத்து
மேவன்ஞர்பேர்
வைத்ததன்றி அவரிடத்தில் மாருப் பக்தி
வளர்த்ததற்கும் அருள்பெறற்கும்
வகையாயிற்ருல்
இத்தகைய அப்பர்அருள் நெறியைப் பற்றி
இன்தமிழால் சேக்கிழார்
இசைத்துள்ளாரே! (8)

(வேறு)

அறிவால் ஆவ தொன்றுண்டே
அனைத்தாம் உயிரின் துயரெல்லாம்
பிறிதென் றெண்ணு தவர்துயர்போல்
பேணும் நெறியில் வாழ்ந்தனரால்,
அறிவே அற்றம் காக்கின்ற
அரிய கருவி யாகுமென
நெறியால் வாழ்ந்த அப்பர், குறள்
நெறியை உலகுக் குணர்த்தினரே! (9)

பிறப்பென்னும் பேதைமையைப்
பிரிக்கச் செம்மைப் பொருளான
சிறப்பார் சிவத்தை ஐயாற்றில்
திருந்தக் கண்ட அறிவுடனே
உறப்பல் பொருளில் செம்பொருளை
உவந்து கண்ட அப்பரது
மறப்பில் அறிவு நெறிஉலகம்
வணங்கிப் பின்பற் றிடலாமே! (10)

அன்னம் பாலிப்புகள்

★

திருப்பனந்தாள் திரு. காசி மடத்து அதிபர் திருவார்திரு காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய பேரறக் கட்டளை களின்படி, திருக்காளத்தியில் மகா சிவராத்திரித் திருவிழாக் காலத்தில் (17—2—72) திருக்கண்ணப்பர் நினைவு அன்னம் பாலிப்பும்; காஞ்சிபுரத் தில், மாசி மிருகசீரிடத்தன்று (23—2—72) கச்சியப்ப சிவாசாரியார் நினைவு அன்னம் பாலிப்பும், ஆராதனையும்; மயிலாப்பூர்த் திருவள்ளுவர் ஆலயத்தில், திருவள்ளுவர் திருநாளாகிய மாசி உத்தரத்தன்று (1—3—72) விசேட ஆராதனையும் அன்னம் பாலிப்பும், காஞ்சிபுரத்தில், திருவார்திரு காசிவாசி சாமிநாத சுவாமிகளின் 28–வது ஆண்டு நினைவு நாளில் (16—3—72) அடியார்கட்கு விசேட அன்னம் பாலிப்பும்; வட திருவாலங்காட்டில் பங்குனிச் சுவாதியன்று (1—4—72) காரைக்கா லம்மையார் நினைவு அன்னம் பாலிப்பும்; குன்றத்தூரில், வைகாசிப் பூசத் தன்று (18—5—72) சேக்கிழார் நினைவு அன்னம் பாலிப்பும், நிகழ்யாண் டில் நடைபெறும்.

சென்னைப் பட்டணத்துச் சட்டம்

(முற்றொடர்ச்சி)

(3) கர்ப்பக் கிரகம் அல்லது பூசைக் கிரகம் அல்லது ஓர் அறநிலையத்தின் அல்லது வழிபாடு செய்யுமிடத்தின் வளவுகளுக்குள், சிறப்பாகத் தெய்வீகம் பொருந்தியதாய் வைத்திருக்கப்படுகிற யாதொரு இதர பகுதியில் பிரவேசிக்கும் முன் (1) உட்பிரிவினல் அல்லது அதன்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் அல்லது (2) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட போலீசு அதிகாரி மேற்படி நிலையத்தின் தர்ம கர்த்தா அல்லது தலைவருக்கு நியாயமான அறிவிப்புக் கொடுப்பதோடு மேற்படி நிலையத்தின் மத நடவடிக்கைகளுக்கு அல்லது வழக்கத்திற்குத் தகுந்த மரியாதை கொடுக்கவும் வேண்டும்.

(4) இந்த உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள வளவுகளிலாயினும் இடத்திலாயினும் அதன் யாதொரு பாகத்திலாயினும் பிரவேசிக்க இந்துவாயிராத ஒருவருக்கு இந்தப் பிரிவில் கண்டதெதனுலும் அதிகாரம் ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

(5) கர்ப்பக் கிரகம் அல்லது பூசைக்கிரகம் அல்லது ஒரு அறநிலையத்தின் அல்லது வழிபாடு செய்யுமிடத்தின் வளவுகளுக்குள் சிறப்பாகத் தெய்வீகம் பொருந்தியதாய் வைத்திருக்கப்படுகிற யாதொரு இதர பகுதியில், (3) உட்பிரிவில் சொல்லப்பட்ட யாதொருவர் அல்லது போலீசு அதிகாரி நுழைவதை ஒரு நிலையத்தின் நடவடிக்கை அல்லது வழக்கம் தடை விதிக்கிறதா என்னும் பிரச்சினை எழுந்தால் அப் பிரச்சினை ஆணையரின் தீர்மானத்துக்கு விடப்படும். அத்தகைய யாதொரு பிரச்சினையின் பேரில் முடிவு கூறுமுன் ஆணையர் தாம் தகுதியெனக் கருதுகின்ற விசாரணையைச் செய்யவேண்டும்.

(6) (5) உட்பிரிவின்படி ஆணையரின் தீர்மானத்தின்படித் துன்பமடைந்த ஒருவர் தீர்மானத்தின் தேதியிலிருந்து அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

ஆனல் யாதொரு கட்சிக்காரருக்குத் தமது முறையீடுகளைச் செய்துகொள்ள ஒரு நியாயமான வாய்ப்புக் கொடுத்தன்றி மற்றப்படி அவருக்குப் பாதகமான எந்த உத்தரவையும் அரசாங்கத்தார் பிறப்பிக்கக்கூடாது.

25. ஆணையர் முதலியவர்கள் பொருத்தமான முறைகளையும் ஆசாரங்களையும் அனுசரிப்பது: இச்சட்டத்தின்படி மேற்பார்வை அல்லது மேல் விசாரணை அதிகாரங்களைச் செலுத்துகின்ற ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், ஒரு பிரதேசக் கமிட்டியின் அங்கத்தினர், ஒவ்வொரு இதர நபர் ஆகியவர்கள், அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துகிற அறநிலையம் சம்பந்தமாகப் பொருத்தமான முறைகளையும் ஆசாரங்களையும் அனுசரிக்க வேண்டும். ஒரு மடம் விஷயமாய் அதன் தலைவரோடு தொடர்புகொள்ளும் விஷயங்களில் அம் மடத்தின் வழக்கங்களை அனுசரித்து நடக்கவேண்டும்.

26. தர்மகர்த்தர்களின் யோக்கிய தாம்சங்கள்: (1) யாதொருவர்.

(a) இந்து மதத்தைத் தழுவுபவராயிருந்தாலன்றியும், மற்றப்படியும்,

(b) பரம்பரையான ஒரு தர்மகர்த்தாவின் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களில் இருபத்தைந்து வயதுக்குக் குறைந்தும் எழுபது வயதுக்கு மேற்பட்டும் இருந்தாலன்றியும்,

(c) கடனிறுக்கச் சக்தியற்றவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும்,

(d) சித்த சுவாதீனமற்றவராக அல்லது ஒரு தர்மகர்த்தாவின் அலுவல்களை நிறைவேற்றவும் கடமைகளைச் செய்யவும் தகுதியற்ற

வராக்குகிற பைத்தியம் அல்லது அங்கஹீனம் உடையவராக அல்லது தொழுநோய் அல்லது அருவருக்கத்தக்க யாதொரு நோயால் பீடிக்கப் பட்டிருந்தாலும்,

(e) அறநிலையத்தின் யாதொரு சொத்தின் செலாவணியில் இருக்கிற குத்தகை, அல்லது செய்யப்பட்ட உடன்படிக்கை ஸ்தாபனத் திற்காகச் செய்யப்பட்ட யாதொரு வேலையில் பாத்தியதையுடையவராக அல்லது ஷை அற நிலையத்திற்கு அல்லது கட்டளைக்குச் சேர வேண்டிய யாதொரு வகை பாக்கியை நிலுவை யில் வைத்திருந்தாலும்,

(f) ஓர் அறநிலையத்தின் சார்பாக அல்லது அறநிலையத்திற்கு எதிராக ஊதியம் பெறும் வழக்கறிஞராக அமர்த்தப்பட்டாலும்,

(g) ஒழுக்கக்கேடு சம்பந்தமான ஒரு குற்றத்திற்காக ஒரு கிரிமினல் கோர்ட்டால் தண்டிக்கப்பெற்று, அத்தகைய தண்டனை மாற்றப்படாமல் அல்லது ஷை குற்றம் மன்னிக் கப்படாமலிருந்தாலும்,

(h) நிலையத்தின் அக்கறைகளுக்கு விரோ தமாகச் செயலாற்றியிருந்தாலும், யாதொரு அற நிலையத்தின் தர்மகர்த்தாவாக நியமிக்கப் படுவதற்கு அல்லது தர்மகர்த்தாவாக இருப்ப தற்கு யோக்கியதாம்சம் இல்லாதவராவார்.

(2) யாதொரு தர்மகர்த்தா,

(a) (1) உட் பிரிவில் குறிப்பிட்டுள்ள யாதொரு யோக்கியதைக் குறைவுகளுக்குட் பட்டால்,

(b) (i) பிராந்தீயக் குழுவினரால் நியமிக் கப்பட்ட தர்மகர்த்தாக்கள் விஷயத்தில் உதவி ஆணையருக்கும்,

(ii) இதர விஷயங்களில் ஆணையருக்கும் எழுதிய அறிக்கை கொடுப்பதன் மூலமாகத் தமது பதவியை ராஜிநாமாச் செய்தாலும் அவர் பதவி வகிப்பது நின்று போகும்.

(3) (1) உட்பிரிவில் கூறப்பட்ட யாதொரு யோக்கியதைக் குறைவுகளுக்குத் தர்மகர்த்தா உட்பட்டவரா என்னும் பிரச்சினை எழுந்தால் மேற்படி பிரச்சினை துணை ஆணையரின் தீர்மா னத்திற்கு விடப்படவேண்டும்.

(4) பரம்பரையாகப் பதவி வகிக்கும் ட்ரஸ்டி ஒருவர் (1) உட்பிரிவில் விவரித்துள்ள யோக்கியதைக் குறைவுகளுக்குட்பட்டால், துணை ஆணையர் மேற்படி தர்மகர்த்தாவை விலக்கலாம்.

(5) துணை ஆணையரின் (3) உட்பிரிவின் படி அல்லது (4) உட்பிரிவின்படிக்கான ஒரு உத்திரவினால் பாதிக்கப்பட்டயாதொரு நபர், மேற்படி உத்திரவு அவரால் வரப்பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் மேற்படி உத்திரவுக்கு எதிராக ஆணையருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

(6) தர்மகர்த்தாக்கள் சபை அமைக்கப் பட்டிருக்கும் ஒரு அறநிலையத்தின் தர்மகர்த்தா இரண்டு மாதக் கால அளவுக்குள் மேற்படி தர்மகர்த்தாக்களின் சபையின் மூன்று கூட்டங் களுக்குத் தொடர்ச்சியாக வராமலிருந்தால், பதவி வகிப்பதினின்று அற்றுப்போவார் :—

ஆனால், ஒருவர் அவ்வாறு கூட்டங்களுக்கு வராமல் நின்று போவதன் காரணமாக ஒரு தர்மகர்த்தாவாயிராமல் போய்விட்டிருந்து, அவர் மேற்படி தொடர்ச்சியான மூன்று கூட்டங்களில் கடைசிக் கூட்டத்தின் தேதியி லிருந்து ஒரு மாதத்துக்குள் தம்மை மீண்டும் தர்மகர்த்தாவாக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டால், பிரஸ்தாப தர்மகர்த்தா சபை யார், அவ்விண்ணப்பம் வந்து சேர்ந்த பிறகு நடைபெறுகிற அடுத்த கூட்டத்திலே தர்ம கர்த்தா பதவியை மீண்டும் வகிக்கும்படிச் செய்யலாம். ஆனால், அங்கத்தினர் ஒருவர் தமது பதவிக்கால அளவில் ஒரு தடவைக்கு மேற்பட்டு அவ்வாறு மீண்டும் அங்கத்தினராக் கப்படக்கூடாது.

விளக்கம் :— நிர்வாகச் சிற்றெண் (க்வோ ரம்) இல்லாததால் தள்ளிவைக்கப்பட்ட ஒரு கூட்டமானது, இவ்வுட்பிரிவின் காரியத்துக் காக ஒரு கூட்டமெனக் கருதப்படவேண்டும்.

(27) இச் சட்டத்தின்படி பிறப்பிக்கப் பட்ட உத்தரவுகளுக்குத் தர்மகர்த்தர் கீழ்ப் படிந்து நடக்கக் கடமைப்பட்டவரென்பது :— இச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின்படி அரசாங்கத்தாரால் அல்லது ஆணையரால் அல்லது துணை ஆணையரால் அல்லது பிராந் தீயக் குழுவால் அல்லது உதவி ஆணையரால்

பிறப்பிக்கப்பட்ட சட்ட ரீதியான சகல உத்தரவுகளுக்கும், யாதொரு அறநிலையத்தின் தர்மகர்த்தா கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப் பட்டவராவார்.

(28) தர்மகர்த்தா செலுத்த வேண்டிய கவனமும், அவருடைய அதிகாரங்களும் :— (1) ஆலயப் பிரவேசத்துக்கு அனுமதி கொடுப் பதைக் குறித்த 1947-ஆம் ஆண்டுச் சென்னைப் பட்டிணத்துச் சட்டத்தின் (சென்னை 1947-ஆம் ஆண்டு 5-வது சட்டம்) நிபந்தனைகளுக்குட் பட்டு, ஒவ்வொரு அறநிலையத்தின் தர்மகர்த் தாவும் மேற்படி நிலைய ஷரத்துக்களையும், நிலை யத்தின் வழக்கத்தையும் அது விஷயமாய்த் தகுந்த ஓர் அதிகாரி சட்டப்படி பிறப்பிக்கக் கூடிய சகல சட்டங்களையும் அனுசரித்தும், அதன் விவகாரங்களும் நிதிகளும் சொத்துக் களும் தமக்குச் சொந்தமானவையாக யிருந் தால் சாதாரண விவேகமுள்ள ஒருவர் அவை கள் விஷயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக விவகரிப்பாரோ அவ்வளவு ஜாக்கிரதையாக வும், அதன் விவகாரங்களைப் பரிபாலிக்கவும் அதன் நிதிகளையும் சொத்துக்களையும் உபயோகப்படுத்தவும் கடமைப்பட்டவராவர்.

(2) இச் சட்டத்தின் நிபந்தனைகளுக்குட் பட்டு, ஒரு தர்மகர்த்தர் மேற்படி அறநிலை யத்தை முன் ஜாக்கிரதையுடனும் பிரயோசன கரமாகவும் பரிபாலிப்பதற்குச் சம்பந்தப்பட்ட சகல அதிகாரங்களையும் செலுத்தவும் தமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைக் கிரமப்படி செய்வதற்கு அவசியமாயிருக்கிற சகல காரியங் களையும் செய்யவும் பாத்தியதை யுள்ளவரா வார்.

(3) யாதொரு தர்மகர்த்தரை உத்தி யோகத்திலிருந்து நீக்குவதற்கான அல்லது அவருக்கு விரோதமாக யாதொரு ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு வியாஜ்ஜி யத்திலாவது அப்பீலிலாவது விண்ணப்பத்தி லாவது இதர நடவடிக்கையிலாவது அவருக் குப் பிடித்த எவையேனும் கட்டணங்களையாகி லும் கோர்ட் செலவு முதலிய செலவுகளையாகி யாகிலும் கொடுப்பதற்காக மேற்படி மத ஸ்தா பனத்தின் நிதிகளைச் செலவு செய்ய அவர் பாத்தியதையுள்ளவராகமாட்டார்.

ஆனால், ஷை கட்டணங்கள், கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாய்த் தாம் செலவழி த்த பணத்தைஈடு செய்துகொள்ளலாமென்று 102-வது பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட உத் தரவினால் அவருக்குத் திட்டமாக அனுமதி கொடுக்கப்பட்டால்; அவர் அப்படியே செய்ய லாம்.

29. சகல நிலையங்களுக்காகவும் பதிவேடு தயாரிப்பது:—

(1) ஒவ்வொரு அறநிலையத்துக்காகவும், பின்வரும்விஷயங்கள்கண்டுள்ளதும் ஆணையர் கட்டளையிடக்கூடிய நமூனுப்படிக்கு உள்ள பதிவேடு ஒன்றைத் தயாரித்து வைத்துவர வேண்டும்—

(a) நிலையத்தின் ஆரம்பமும், சரித்திரமும் முன்பிருந்தவர்களும் இப்போதிருப்பவர்களும் ஆன தருமகர்த்தாக்களின் பெயர்களும்,தர்ம கர்த்தா உத்தியோகத்துக்கு ஒருவர்பின் ஒருவர் வருவதைப்பற்றி மாமூல் ஏதாகிலும் இருந்தால் அதைப்பற்றிய விவரங்களும்;

(b) பரிபாலன ஏற்பாட்டைப் பற்றியும் செல வின் திட்டம் அல்லது அளவைப் பற்றியுமான விவரங்கள்;

(c) எந்த உத்தியோகங்களுக்கு யாதொரு சம்பளம், ஆதாயம் அல்லது மேலாதாயம் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல உத்தியோகங்களின் பெயர்களும், ஒவ்வொன் றின் விஷயத்திலும் ஊழியத்தின் தன்மையும் காலமும் திட்டங்களும்;

(d) ஷை நிலையத்துக்குச் சொந்தமான ஆபரணங்களும், பொன்னும் வெள்ளியும் இரத் தினங்களும் பாத்திரங்களும் ஏனங்களும் இதர ஜங்கம சொத்துக்களும் அவைகளின் எடைக ளோடு உத்தேச மதிப்பும் ;

(e) ஷை நிலையத்தின் சகல கட்டளைகளைப் பற்றியும் சகல உரிமைப் பத்திரங்களைப் பற்றி யுமான விவரங்கள் ;

(f) ஷை நிலையத்திலுள்ள அல்லது அதற் குச் சம்புந்தப்பட்ட விக்கிரகங்களும் இதர பிரதி மைகளும், வழிபாட்டுக்காக உத்தேசிக்கப்பட் டிருந்தாலுஞ் சரி, வீதிப் பிரதட்சிணங்களில் கொண்டுபோவதற்கு ஆக உத்தேசிக்கப்பட் டிருந்தாலுஞ் சரி, அவைகளைப் பற்றிய விவரங்கள் ;

(g) அவற்றின் சுருக்கமான பொருளடக் கத்துடன் பழமையானதும் சரித்திரச் சம்பந்த மானதுமான ரெகார்டுகளின் விவரங்கள் :

(h) ஆணையர் கேட்கக்கூடிய இதர விவ ரங்கள் :

(2) சம்பந்தப்பட்ட நிலையத்தின் தர்ம கர்த்தாவாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜெண்டாவது அந்தப் பதிவேட்டைத் தயாரித்து அதில் கையெழுத்துசெய்து அதைச் சரிபார்த்து, சந்தர்ப்பத்துக்கேற்றபடி இச்சட்டம் செலாவணியாகத் தொடங்கியதிலிருந்து அல்லது ஆணையரால் அல்லது பிராந்தீயக் குழுவினரால் அல்லது உதவி ஆணையரால் அனுமதிக்கப்படக்கூடிய மேலுமொரு காலத்துக்குள், ஒரு மடத்தின் விஷயத்தில் நேரடியாகவும் ஷ நிலையம் சம்பந்தமான ஒரு பிராந்தீயக் குழுவின் அதிகாரங்களைச் செலுத்துகிற, கடமைகளைச் செய்கிற உதவி ஆணையர் விஷயத்தில் அப்பிராந்தீயக் குழு மூலமாகவும் ஆணையர் அனுப்ப வேண்டும்;

ஆனால், அவ்வாறு கையெழுத்திட்டுச் சரி பார்க்கப்பட்ட ஒரு பதிவேடு :

(1) 1951-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்கு முன் சபையாருக்கும்,

(ii) 1951-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குப் பிறகும், இச்சட்டத்தின் தொடக்கத்துக்கு முன்னும் ஆணையருக்கும் அனுப்பப்பட்டிருந்தால் இவ்வுட்பிரிவு பயன் படமாட்டாது.

(3) ஷ பதிவேடு பிராந்தீயக் குழுவினர் அல்லது உதவி ஆணையர் மூலமாக அனுப்பப் பட்டிருந்தால் அவர்கள் அல்லது அவர், தாங்கள் அல்லது தாம் அவசியமென்று கருதக்கூடிய விசாரணை செய்த பிறகு, தங்களுக்கு அல்லது தமக்குத் தகுதியென்று தோன்றக்கூடியபடி ஷ பதிவேட்டில் மாறுதல்கள் செய்யவேண்டுமென அல்லது அதிலிருந்து சில விஷயங்களை விட்டுவிடவேண்டுமென அல்லது அதனுடன் புதிதாகச் சில விஷயங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமெனச் சிபாரிசு செய்யலாம்.

(4) ஆணையரானவர் ஷ பதிவேட்டையும் அது சம்பந்தமாகப் பிராந்தீயக் குழுவினரின் அல்லது உதவி ஆணையரின் சிபாரிசுகளையும் பெற்றுக்கொண்டு, தாம் அவசியமென்று கருதக்கூடிய அதிகப்படியான விசாரணை செய்தபிறகும், தாம் தகுதியென்று கருதக்கூடிய ஷ பதிவேட்டில் மாறுதல்கள் செய்ய வேண்டுமென அல்லது அதிலிருந்து சில விஷயங்களை விட்டுவிடவேண்டுமென அல்லது அதனுடன் சில விஷயங்களைப் புதிதாகச் சேர்க்க வேண்டுமெக் கட்டளையிடலாம்.

ஷ தர்மகர்த்தா ஆணையருடைய உத்தரவை நிறைவேற்றி, பிறகு திருத்தப்பட்டபடியுள்ள பதிவேட்டின் மூன்று பிரதிகளை அங்கீகாரத்துக்காக ஆணையருக்கு அனுப்ப வேண்டும்.

(6) ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டபடியுள்ள பதிவேட்டின் ஒரு பிரதியைப் பிராந்தீயக் குழுவுக்கும் அல்லது சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் எவரேனுமிருந்தால் அவருக்கும் அனுப்பவேண்டும்.

(30) பதிவேட்டை ஆண்டுதோறும் சரி பார்ப்பது: ஷ தர்மகர்த்தாவாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற பதிலாளராவது பதிவேட்டிலுள்ள பதிவுகளை ஆண்டுதோறும் பரிசீலனை செய்து, அந்தப் பதிவேட்டில் செய்யவேண்டிய மாறுதல்களை அல்லது அதிலிருந்து விட்டுவிடவேண்டிய விஷயங்களை அல்லது அதனுடன் புதிதாகச் சேர்க்கவேண்டிய விஷயங்களைக் காட்டும் சரிபார்க்கப்பட்ட அறிக்கை ஒன்றை ஆணையருடைய அங்கீகாரத்துக்காக அவருக்குச் சந்தர்ப்பத்துக்கேற்றபடி நேரடியாகவோ பிராந்தீயக்குழு மூலமாகவோ, உதவி ஆணையர் மூலமாகவோ அனுப்பவேண்டும்; அதன்பேரில் 29-வது பிரிவைச் சேர்ந்த (3) முதல் (6) வரையிலுள்ள உட்பிரிவுகளின் ஷரத்துக்கள் யாதொரு பதிவேடு விஷயமாகப் பயன்படுவதுபோலவே அந்த அறிக்கை விஷயமாகவும் பயன்படும்.

(31) பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பதிவேட்டை அனுப்புவது: தர்மகர்த்தாவாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற பதிலாளராவது சந்தர்ப்பத்துக்கு அவசியமானபடி நேரடியாகவோ, பிராந்தியக்குழு மூலமாகவோ, உதவி ஆணையர் மூலமாகவோ (29-வது பிரிவின்படிக்கான பதிவேடு முதலில் அனுப்பப் பட்ட வருஷத்திலிருந்து தொடங்கும்) பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுப்பப்பட்ட அல்லது செய்யக் கட்டளையிடப்பட்ட சகல மாற்றங்கள், நீக்கல்கள், சேர்க்கைகள் எல்லாம் இணைக்கப்பட்ட ஓர் ஒருங்கு திரட்டப்பட்ட ரெஜிஸ்டரை ஆணையருக்கு அனுப்பவேண்டும். 29-வது பிரிவின் ஷரத்துக்கள் ஒருங்கு திரட்டப் பட்ட பதிவேடு விஷயத்தில் அந்தப் பிரிவின் படி அனுப்பப்பட்ட பதிவேட்டைப்போலவே பயன்படும்.

(தொடரும்)

சிவ வணக்கம்

(106 போற்றி)

தமிழ்க்கடல் திரு. ராய. சொ. அவர்கள், காரைக்குடி

அம்பலத்து ஆடும் அரனே போற்றி!
ஆனைமா முகனை அளித்தவ போற்றி!
இளைய முருகனை ஈன்றாய் போற்றி!
ஈறிலாப் பெருவாழ்வு ஈவாய் போற்றி!
உமைக்கொரு கூறளி உத்தம போற்றி!
ஊழி முதல்வ! நின் ஒண்கழல் போற்றி¡
எந்தையும் யாயுமாய் இயைந்தனை போற்றி!
ஏழை பங்க! நின் இணையடி போற்றி!
ஐயா! அரசே! அமுதே போற்றி!
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி!
ஓசையாய்ப் பொருளாய் ஒன்றினை போற்றி!
ஔவிய நெஞ்சினர்க்கு அரியாய் போற்றி!
அஃகம் வளர அருள்வாய் போற்றி!
கல்ஆல் அமர்ந்த,சொற் கடந்தவ போற்றி!
"ங"ப்போல் வளைய நவில்வாய் போற்றி!
சடையாய் விடையாய் உடையாய் போற்றி!
ஞயமாய் உரைதர நயப்பாய் போற்றி!
மடம்படு வாழ்வை மாய்ப்பாய் போற்றி!
வணங்கத் தலையை வைத்தாய் போற்றி!
தழுவக் குழைந்த தண்ணளி போற்றி!
நச்சரவு ஆட்டிய நம்பி போற்றி!
பந்தணை விரலாள் பங்க போற்றி!
மண்டிய தழல்நிற வண்ணா போற்றி!
மயல்கெடுத்து ஆளும் மன்னா போற்றி!
அரவம் அணிந்த அந்தண போற்றி!
நிலம்தீ வான்கால்! நீரே போற்றி!
வண்கவி வள்ளல்கள் வள்ளால் போற்றி!
மழவிடை ஏறும் மன்னா போற்றி!
அளவெலாம் கடந்த ஐயா போற்றி!
பிறப்பு இறப்பு இல்லாப் பெரும போற்றி!
மனமாசு அறுசிவ மணியே போற்றி!
கற்றவர் உண்ணும் கனியே போற்றி!
காலனை உதைத்தருள் கழற்கால் போற்றி!
கிழவா இளையாய் குழவி போற்றி!
கீழ்மேல் உலகெலாம் கிளர்ந்தாய் போற்றி!
குழவி மதியணி குழகா போற்றி!
கூத்துகந்து ஆடும் கொற்றவ போற்றி!
கெடுதல் தவிர்த்துஆள் கேடிலி போற்றி!
கேதம் கெடுத்த கிளர்ஒளி போற்றி!
கைலைசேர் முழுமுதற் கடவுளே போற்றி!
கொல்புலித் தோல்உடைக் கோமான் போற்றி!
கோதறு நற்குணக் குன்றே போற்றி!
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி!
சாதிகள் கடந்த தத்துவ போற்றி!
சிலையால் எயில்எரி சேவக போற்றி!
சீருடைச் சிவபுரத்து அரசே போற்றி!
சுந்தரன் தனைத்தடுத்து ஆண்டவ போற்றி!
சூது,பொய் களவு தொலைப்பாய் போற்றி!
செந்தமிழ் தந்த செம்மலே போற்றி!
சேக்கிழார் தீந்தமிழ் திளைப்பாய் போற்றி!
சைவம் தழைக்கநில் தவமே போற்றி!
சொல்லும் பொருளுமாம் தூமணி போற்றி!
சோதியுள் சோதியாய்த் துலங்குவாய் போற்றி!
ஞானசம் பந்தனை நயந்தாய் போற்றி!
ஞிமிறுசேர் கொன்றை நீள்சடை போற்றி!
ஞேயநல் அடியார் நினைவே போற்றி!
தண்தமிழ்ச் சங்கத் தலைவா போற்றி!
தாயே தாதாய் சங்கரா போற்றி!
திருவா சகம்பெறு செல்வா போற்றி!
தீஞ்சுவைக் கவிஞர்பாத் தேனே போற்றி!
துரியம் கடந்த தொல்லோய் போற்றி!
தூக்கிய திருவடிச் சோதி போற்றி!
தென்னாடு உடைய சிவனே போற்றி!
தேவா ரம்நுகர் செவியாய் போற்றி!
தையலைத் தலைக்கொள் சதாசிவ போற்றி!
தொண்டர் உளம்அமர் தூயோய் போற்றி!

தோலும் துகிலும் புனைவாய் போற்றி!
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி!
நாற்றிசை விளக்காம் நாதா போற்றி!
நினைப்பவர் நெஞ்சில் நின்றாய் போற்றி!
நீறு, செம் பசுமை நிறத்தாய் போற்றி!
நுண்ணியாய் அகன்றாய் ஆழ்ந்தாய் போற்றி!
நூபுரச் சீரடி தருவாய் போற்றி!
நெற்றிமேல் ஒற்றைக் கண்ணாய் போற்றி!
நேயத் தேனில் நிமல போற்றி!
நைவளப் பண்,பா நாடினை போற்றி!
நொந்தவர்த் தாங்கும் நோன்தாள் போற்றி!
நோய்,பசி தீர்க்கும் தாய்அருள் போற்றி!
பன்னிரு திருமுறைப் பாடலாய் போற்றி!
பார்த்தனுக்கு அருள்செய் பரம்பொருள் போற்றி!
"பித்தன்" எனப்பெறு வித்தக போற்றி!
பீடெலாம் கொண்ட பெம்மான் போற்றி!
புத்தேள் போற்றும் பொன்னடி போற்றி!
பூவார் சென்னிப் புனிதா போற்றி!
பெருநஞ்சு உண்டருள் பெரியோய் போற்றி!
பேதைமை அகற்றும் பிஞ்ஞக போற்றி!
பைஅராப் பூண்ட பரமனே போற்றி!
பொய்வளர் நெஞ்சம் புகாதாய் போற்றி!
போக்கு வரவிலாப் பொருளே போற்றி!
மதன்படத் திறந்த நுதல்விழி போற்றி
மாதவர் மகுடமா வயங்குவாய் போற்றி!
மிண்டு மனத்தரை விடுவாய் போற்றி!
மீறிய புலவோர் விருந்தே போற்றி!
மும்மலம் அறுக்கும் முக்கண்ணா போற்றி!
மூவர் தமிழ்க்கடல் மூழ்குவாய் போற்றி!
மெய்கண் டானைஆட் கொண்டனை போற்றி!
மேலவர்க்கு எல்லாம் மேலவ போற்றி!
மையல் கெடுத்தாள் வரதனே போற்றி!
மொழிஅரை யன்கவி முதலே போற்றி!
மோகித்து அணைவார்க்கு ஏகனே போற்றி!
யானை உரிபோர்த்து அருளினை போற்றி!
வங்கக் கடல்நஞ்சு உண்டாய் போற்றி!
வாதவூர் வள்ளல்பா மாந்தினை போற்றி!
வினைகெடுத்து ஆளும் முனைவா போற்றி!
வீட்டின்பு அருள,வல் விமலா போற்றி;
வெண்ணீறு ஆடிய புண்ணிய போற்றி!
வேதமும் அங்கமும் மேயாய் போற்றி!
வையகம் வாழவே போற்றி போற்றி!

———

திருவல்லிக்கேணி திரு. எல்லையம்மன் என்னும் திரு. ரேணுகா பரமேசுவரிஆலயத் திருப்பணிக்கு உதவியாணையர் திரு. என். சுவாமிநாதன், B.A., B.L., அவர்கள் தலைமையில், திருமதி செளந்தரம் கைலாசம் அம்மையார் அவர்கள் கால்கோள் நிகழ்ச்சியைத், தொடக்கி வைத்தார்கள். (3—1—72).

அம்பிகை வணக்கம்

(108 போற்றி)

தமிழ்க்கடல் திரு. ராய. சொ. அவர்கள், காரைக்குடி.

சிவனுர் மனமகிழ் தேவி! போற்றி!
செங்கண்மால் பின்வரு செல்வி போற்றி!
இமவான் பயந்த இறைவி! போற்றி!
இறைவன் இடப்புறம் இருந்தாய் போற்றி!
உமையே உண்ணு முலையே! போற்றி!
உலகெலாம் ஈன்றருள் ஒருத்தி! போற்றி!
தந்தி முகவனின் தாயே! போற்றி!
கந்தனைப் பெற்றருள் கன்னி! போற்றி!
ஞானசம் பந்தனை நயப்பாய் போற்றி!
ஞானப் பால்கொடுத்து அருளினை போற்றி!
ஈசனுர் நெருப்புருத் தவிர்ப்பாய் போற்றி!
இடப்புறம் குளிர்ச்சியை இடுவாய் போற்றி!
காலம் கடந்த கடவுள்! போற்றி!
கற்பனை தாண்டிய கற்பகம்! போற்றி!
எழுதாச் சொல்லின் எழிலே! போற்றி!
இகமும் பரமும் ஈவாய் போற்றி!
தோன்ருத் துணைக்கோர் துணையே! போற்றி
துவாத சாந்தம் கடந்தாய் போற்றி!
மூலத் தலத்து முதலே போற்றி!
முக்கட் சுடர்க்கு விருந்தே போற்றி!
தண்ணுர் தமிழின் சுவையே! போற்றி!
கண்ணுர் அமுதக் கடலே! போற்றி!
பிறவிப் பிணிக்கு மருந்தே! போற்றி!
பேசா மறையின் பொருளே! போற்றி!
அமிழ்தினும் இன்மொழி அருள்வாய் போற்றி!
தமிழ்க்கடல் மாந்தும் தலைவி! போற்றி!
சிவனை ஈன்றருள் செந்திரு போற்றி!
சிவனுர் தந்தநல் திருவே! போற்றி!
அன்றிவ் உலகெலாம் அளித்தாய் போற்றி!
என்றும் கன்னியாய் இருப்பாய் போற்றி!
ஒன்றிய உணர்வோர் உணர்வே! போற்றி!
ஒன்னுர் நெஞ்சில் உறையாய் போற்றி!
தெவ்வர் பகைஅடு தேவே! போற்றி!
பவ்வ நெடுங்கடல் படிவே! போற்றி!
பண்ணுர் இன்தமிழ்ப் பாவாய்! போற்றி!
எண்நான்கு அறமும் வளர்ப்பாய் போற்றி!
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் போற்றி!
விண்ணோர் மிளிர்முடி விளக்கே போற்றி!
புலவர் நாவில் பொருந்துவாய் போற்றி!
புண்ணிய யோகப் பொலிவே! போற்றி!
அகந்தைக் கிழங்கை அகழ்வாய் போற்றி!
அற்புதன் ஆகம் ஆண்டாய் போற்றி!
மகிட முகத்தனை மாய்த்தாய் போற்றி!
சகடவாழ்வு அடுதையல் நாயகி போற்றி!
வினைஎலாம் கெடுக்கும் விமலி போற்றி!
நனைமலர்ச் சேவடி நல்குவாய் போற்றி!
வேத முடிமேல் விளங்குவாய் போற்றி!
நாதப் பொருளா நண்ணுவாய் போற்றி!
கற்றவர் சுவைக்கும் கரும்பே! போற்றி!
அற்றவர்க்கு அருளும் அரசி! போற்றி!
பார்த்தனுக்கு அருள்செயப் பணித்தனை போற்றி!
தீர்த்தன்பின் வேட்டுருத் தெரிந்தனை போற்றி!
பன்றிபின் பதியொடு வந்தனை போற்றி!
குன்றெறி குழவியை ஏந்தினை போற்றி!
செழியர் பிரான்திரு மகளே! போற்றி!
வழுதிநாடு ஆண்டபெண் மணியே! போற்றி!
உலகினை வெற்றிகொள் ஒண்தொடி! போற்றி!

கலைபல கற்றுணர் காரிகை போற்றி!
சொக்கற்கு மாலை சூட்டினுய் போற்றி!
சொக்கற்கு மகுடமும் சூட்டினுய் போற்றி!
தமைபொருள் தலைவர்க்குத் தந்தனை போற்றி!
தமிழ்அவைத் தலைமையும் தந்தாய் போற்றி!
முழுமுதல் தொட்டநின் மொய்குழல் போற்றி!
விழுமியோர் முடிதவழ் மெல்லடி போற்றி!
கருங்குழல் செவ்வாய்க் கார்மயில் போற்றி!
ஒருங்கிய சாயல் சுருங்கிடை போற்றி!
குவளைக் கண்ணி குரைகழல் போற்றி!
தவள வெண்ணகைத் தண்ணளி போற்றி!
சுரும்பமர் நறுமலர்ச் சுரிகுழல் போற்றி!
துரியம் கடந்தநல் சுடர்முகம் போற்றி!
குழவித் திங்கள்சேர் எழில்நுதல் போற்றி!
முழுதுலகு அருள்தரு விழிக்கயல் போற்றி!
பண்ணமர் மொழிபகர் பவளவாய் போற்றி!
புண்ணியப் பேறளி புன்னகை போற்றி!
துன்னுபொன் ஆடைத் தொடித்தோள்போற்றி!
மின்னிகர் பொன்கொடி நுண்ணிடை போற்றி;
வரதமும் அபயமும் வழங்குகை போற்றி!
சரதம் வீடருள் தாளிணை போற்றி!
சிங்கம் ஏறும் சேவகி! போற்றி!
வங்கநஞ்சு உண்டவன் மணுட்டி போற்றி!
மரகதக் கொடிப்பெரு மாட்டி போற்றி!
மாணிக்க வல்லி! மாதா! போற்றி!
அபிடேக அபிராம வல்லி! போற்றி!
அங்கயற் கண்ணுடை அம்மை! போற்றி!
அல்லியங் கோதை அலங்கலாய்! போற்றி!
அபிரா மித்தாய் அணங்கே போற்றி!
ஆவுடை நாயகி! அன்னே! போற்றி!
ஆளுடை அம்பிகை அம்மா! போற்றி!
ஞானப்பூங் கோதை நங்காய்! போற்றி!
தேனக்க கொன்றைத் தெரியலாய் போற்றி!
பார்வதி! பராபரை! பைரவி! போற்றி!
நாரணி! பெரிய நாயகி! போற்றி!
அன்ன பூரணி! அம்பிகை போற்றி!
மன்னுமீ னுட்சி மடப்பிடி போற்றி!
விசுவநா தன்மகிழ் விசாலாட்சி போற்றி!
பசுபதி பங்குறு பரமேட்டி போற்றி!
சக்தி கரும்புவில் தாங்குவாய் போற்றி!
பக்தி வலையில் படுபவள் போற்றி!
வாமனி நீலி! வராகினி போற்றி!
கோமள வல்லி! கோமதி! போற்றி!
மயிலே! அமுதே மானே! போற்றி!
குயிலே! தேனே! கொழுந்தே! போற்றி!
சுந்தரி! சங்கரி! சூலி! போற்றி!
அந்தரி சாமளை அமலை போற்றி!
காமாட்சி! காந்தி மதித்தாய் போற்றி!
கவுரி!சிவ காமி,முக் கண்ணி! போற்றி!
அன்பெலாம் ஓருரு ஆனுய் போற்றி!
அவனியின் அன்னையே! போற்றி! போற்றி!

———

ஆவணக் காப்பக நூலகம்
148694
சென்னை-600 008.



சென்னை ஏகாம்பரேசுவரர் கோயிலைச் சேர்ந்த திரு. கமல விநாயகர் கோயில் திருக்குடமுழுக்கு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல். (21—1—72)





சென்னை ஏகாம்பரேசுவரர் கோயிலைச் சேர்ந்த திரு. கமல விநாயகர் கோயில் திருக்குடமுழுக்கு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல். (21—1—72)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34, Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor. N. R. Murugavell, M.A., M.O.L.